விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு+பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மாங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-5500)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 05 ஞாயிற்றுக்கிழமை (21.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 246

# மக்களின் எதிர்பார்ப்பு

# நல்லாட்சியில் நிறைவேற்றம்!

## அமைச்சர் கபீர் ஹாசீம்

(கேகாலை)

மக்கள் எதிர்பார்த்த அடிப்படை விடயங்களை நிறைவேற்ற தேசிய அரசாங்கத்திற்கு குறுகிய காலப்பகுதியினுள் முடிந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. கேகாலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசீம் இதனைத் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நல்லாட்சியில் தமிழருக்கு எதுவும் கிடைக்கவில்லை

### – மனோ கணேசன்



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் சிறுபான்மை மக்களுக்கான அனைத்து உரிமைகளும் கிடைத்து விட்டதாக கூறமுடியாது என தேசிய கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

எல்லா உரிமைகளும் கிடைத்து விட்டதாக 15 ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சு செயலர்கள் மீதும் ஊழல் விசாரணை வேண்டும்

### அடுத்த அமர்வில் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது ஊழல் விசாரணை மேற்கொள்வதற்கு சபை அங்கீகாரம் அளித்துள்ள நிலையில், அடுத்து வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களின் செயலாளர்கள் மீதும் ஊழல் விசாரணை வேண்டும் என்ற பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த பிரேரணையை எதிர்வரும் இருபத்தியாறாம் திகதி நடைபெறவுள்ள அமர்வின் போது உறுப்பினர் பரஞ்சோதி கொண்டு வரவுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 59ஆவது 15 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை பொருளாதாரம் நெருக்கடியில்! - கிரியெல்ல

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடியான நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ள உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல,

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அங்கு உரையாற்றிய போது தெரிவித்ததாவது,

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய வர வேண்டும் என நாம் விரும்புகின்றோம். இது தொடர்



இது யதார்த்தமானது. 19-வது அரசியல் யாப்பு திருத்தம் வழியாக அனைத்து துறைகளும் சுதந்திரமாக இயங்கக் கூடியசூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை நாடாளுமன்றத்

மல் ஆக்கப்படுவதற்கு சட்டத்தின் ஆட்சியில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் கூச்சல்களுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியில் காணாமல் போனோர் அலு

# இலங்கை பொருளாதாரம் நெருக்கடியில்! - கிரியெல்ல

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடியான நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ள உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல,

வெளிநாட்டு முதலீடுகள் மூலமே பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்

கிழக்கு மாகாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அங்கு உரையாற்றிய போது தெரிவித்ததாவது,

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய வர வேண்டும் என நாம் விரும்புகின்றோம். இது தொடர்பாக ராஜதந்திரிகளுடன் பேசி வருகின்றோம்.

இலங்கையில் முதலீடு பெருக வேண்டுமானால் சட்டப்படியான ஆட்சி நடைபெற வேண்டும் என அவர்கள் வற்புறுத்துகின்றார்கள்.




இது யதார்த்தமானது. 19-வது அரசியல் யாப்பு திருத்தம் வழியாக அனைத்து துறைகளும் சுதந்திரமாக இயங்கக் கூடியசூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பாகவும் தனது உரையில் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

இலங்கையில் மாணவர்கள் உட்பட ஆட்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்படுவதற்கு சட்டத்தின் ஆட்சியில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் கூச்சல்களுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியில் காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின் நோக்கம் குற்றவாளி யார் என்பதை கண்டறிவது அல்ல. காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்த 15 ஆம் பக்கம் பார்க்க....




# எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டு எதிரணி மீண்டும் அடம்!

(கொழும்பு)

நாங்கள் கடந்த ஒருவருடமாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து பிரதான எதிர்கட்சியாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இனியும் எம்மால் பொறுமையாக இருக்க முடியாது. தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டு எதிரணிக்கு தந்துவிடுங்கள் என்று கூட்டு எதிரணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் நாங்கள் பல தடவைகள் சபாநாயகருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டோம். 51 உறுப்பினர்களுடன் செயற்படும் எமக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படவேண்டும்.

இந்தியா மற்றும் பிரிட்டனாக இருந்திருந்தால் இந்நேரம் எமது எதிரணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கூட்டு எதிரணியின் தலை 15 ஆம் பக்கம் பார்க்க....

# சு.கட்சி மாநாடு மகிந்த நழுவல்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலநது கொள்ள மாட்டார் எனத் தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் அவர் இத்தாலிக்குச் செல்லவுள்ளார் 15 ஆம் பக்கம் பார்க்க....

# அரச வருமானம் 23 வீதத்தால் உயர்வு

## நிதி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஏழு மாதத்தில் அரசாங்கத்தின் வருமானம் 23 சதவீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரி 15 ஆம் பக்கம் பார்க்க....



# மீள்குடியேற்றத்துக்கு மேலும் 4 மாதம் அவகாசம் கோருகிறது அரசாங்கம்

(கொழும்பு)

வடக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைக்கு இந்த வருட இறுதிக்குள் முடிவடையும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் நிலம் அற்ற 936 குடும்பங்கள் உள்ளன.

எனினும் இதில் 971 குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்க அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இதன்அடிப்படையில்கீரிமலைக்கு அருகில் உள்ள காங்கேசன்துறை பகுதியில் இராணுவத்தின் உதவியுடன் வீடுகள் அமைக்கப்படுகின்றன.

மேலும் 104 வீடுகள், பலாலி வடக்கு பகுதி 15 ஆம் பக்கம் பார்க்க....

# முதலீட்டாளர் மாநாடு முதல்வர் விசனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு குறித்து. வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அதிருப்தி வெளியிட்டுள்ளார். இந்த நடவடிக்கையானது, மத்திய அரசாங்கம், மாகாண முதலமைச்சரையும், அமைச்சர்களையும் புறக்கணிக்கும செயல் என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். 15 ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ஸ்

(ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்)
T.P:0778890888

சுவை உலகின் 'Super Star' வழங்கும்...
இருவார விஷேட விலை + இலவசம்
(திங்கள் முதல் வியாழன் வரை)

- மதியம்:மரக்கறி பிறைட் றைஸ் ~~140/-~~ 130/-
  Free:200ml பெப்சி/கோக் Cup
  (12 மணி முதல் 3 மணிவரை)
- இரவு:மரக்கறி நூடில்ஸ் ~~140/-~~ 130/-
  Free: 200ml பெப்சி/கோக் Cup
  (மாலை 5 மணி முதல் 8 மணிவரை)
- 8 பாசல்களுக்கு 2L கோக்/பெப்சி இலவசம்



(5689)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்

## கந்தசாமி கமலாவதி (வேவி)



சிவபூதராஜர் வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கமலாவதி (வேவி) அவர்கள் 18.08.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மலரம்மாவின் அன்பு மகளும், வேலன் முத்துவின் மருமகளும், கந்தசாமியின் மனைவியும், சுதாகரன் (டயா எலெக்ரோணிக்-திருநெல்வேலி), வசந்தகரன், சுபவதனி, பிரபாகரன் (தேசிய லொத்தர் சபை சுன்னாகக் கிளை-விற்பனை முகவர்), சாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், துஸ்யந்தன், சிவரூபி ஆகியோரின் மாமியாரும், சுஜித், அக்ஷயா, ஆகியோரின் பேர்த்தியும் திலகவதி, தங்கராசா, காலஞ்சென்ற விமலாவதி மற்றும் விஜயராசா (அப்பர்), லீலாவதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 21.08.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P:0215680360

தகவல்:
குடும்பத்தினர்
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

(5684)

# கடற்றொழில் அமைச்சர் அமரவீர இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த அமரவீர இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். முன்னதாக கிளிநொச்சிக்கு வருகைதரும் அவர், அங்கு ஒரு சந்திப்பில் ஈடுபட்ட பின்னர் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள சந்திப்பு ஒன்றிலும் ஈடுபடவுள்ளார்.

இன்று காலை பத்துமணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் சந்திப்பொன்றில் கலந்து கொள்ளும் அமைச்சர் மகிந்த அமரவீர, பின்னர் யாழில் அமைக்கப்பட்டுள்ள ஒய்வு விடுதி ஒன்றையும் மறுதினம் காரைநகரில் அமைந்துள்ள ஓய்வு விடுதி ஒன்றையும் திறந்து வைக்கவுள்ளார்.

மேலும் இன்று வருகை தரும் அமைச்சர் வடக்கு மீனவர் பிரதிநிதிகளையும் சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கை வடக்கு மீனவ பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டுள்ளது.(செ-4)


## வேலை ஆட்கள் தேவை

முள்ளியவளை தண்ணீரூற்றில் இயங்கும் பிரபல சுப்பர் மார்க்கட் நிறுவனத்தில் பணிபுரிய ஆண், பெண் வேலையாட்கள் உடன்தேவை.

தொடர்புகளுக்கு:0750768755
தண்ணீரூற்று முள்ளியவளை

(5680)

## விசேட விலைக்கழிவு

**SAMSUNG GALAXY J7,J5,J2,J1,ACE**

ஆகிய போன்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். குறுகிய நேரத்தில் குறைந்த கட்டணத்தில் UNLOCK செய்து கொடுக்கப்படும்.



**வணக்கம் போன் சிற்றி**

இல.7, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு :- 077 2487 847



# யாழ்ப்பாணத்திற்கு வந்து குவியும் கஞ்சா!

# 2 கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியான 130 கிலோகிராம் கேரளக் கஞ்சா பறிமுதல்

## மதுவரித்திணைக்களத்தினர், கடற்படையினர் அதிரடி ஐந்து பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைப்பு



**மதுவரித் திணைக்களத்தினர் கடற்படையினருடன் இணைந்து மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலமும் மதுவரித் திணைக்களத்தினர் தனியாக மேற்கொண்ட நடவடிக்கை மூலமும் இரண்டு திடீர் நடவடிக்கைகளிலுமாக இரண்டு கோடியே அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான 130 கிலோகிராம் கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி சமிந்த சிறிமான் தெரிவித்தார்.**

நேற்று சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் மணற்காட்டுப் பகுதி கடற்கரை யூடாக கஞ்சா கடத்தப்படுவ தாக கிடைக்கப்பெற்ற இரக சிய தகவலையடுத்து இலங்கை கடற்படையினரும் பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரும் நடவடிக்கையில் இறங்கினர்.

மதுவரித்திணைக்களஉதவி ஆணையாளர் சோதிநாதன், மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் மதன்மோகன் மற்றும் மல்லவ ஆகியோர் வழிநடத்தலில் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மணற்காட்டு கடற்கரையை முற்றுகையிட்டனர்.

அப்போது இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதாக நம்பப்படும் 2 கோடி பெறுமதியான 100 கிலோகிராம் கேரள கஞ்சாவினை படகில் எடுத்து வந்த மூவர் கைது செய்யப்பட்டதுடன் கஞ்சாவும் படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

அதன் பின்னர் அதிகாலை மூன்று மணியளவில் உடுத்துறை பகுதியூடாக கஞ்சா கடத்தப்படுவதாக மதுவரித்திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் உடுத்துறையிலுள்ள காட்டுப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டது.

இதில் உடுத்துறையிலிருந்து காட்டுப்பகுதி வழியாக இயக்கச்சிக்கு கடத்திச் செல்லப்பட்டு அங்கிருந்து கொழும்புக்கு கடத்தப்படவிருந்த 60 இலட்சம் ரூபா பெறுமதியான 30 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர். (இ-60)




## தர நிர்ணயம் அற்ற குடிநீர் போத்தல்களுக்குத் தடை

எஸ்.எல்.எஸ். தர நிர்ணயம் அற்ற குடிநீர் போத்தல்களை விற்றல், விநியோகித்தல், களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இலங்கையில் தடைவிதிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல் கடந்த வருடம் ஜூன் மாதம் 11ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

எனவே, குறித்த நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அந்த அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, அடுத்த மாதம் முதல் குறித்த சட்டமூலத்தை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

## உயர்கல்வி அமைச்சருக்கு பல்கலை. மாணவர்கள் எதிர்ப்பு



கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றுக்காக உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகைதந்த போதும் கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பெரும்பான்மை சமூகத்தின் மாணவ குழுக்களின் எதிர்ப்பு காரணமாக அமைச்சரின் வருகை இடைநடுவில் கைவிடப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாணவ விடுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வு பிற்பகல் 2.30 மணிக்கு ஒழுங்கு செய்யப் பட்டிருந்த நிலையில் குறித்த நிகழ்வு கிழக்கு பல்கலைக்கழக சமூகத்திற்கு வெறுமனே ஏமாற்றத்தையே கொடுத்தது.

சிங்கள மாணவ குழுவொன்று தலையில் கறுப்புப் பட்டி அணிந்து, அமைச்சர் வருகையின் நிமிர்த்தம் ஒழுங்கு செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த பிரதான இடங்களெல்லாம் கறுப்பு நிற பொலித்தீன் கடதாசிகளைப பறக்கவிட்டிருந்தனர.

கல்வியை விற்கும், மாணவர்களை அடக்கும் "அரசாங்கம்" பொய்யான திறப்பு விழாவிற்கு வருவது எமக்கு விருப்பமில்லை, விஞ்ஞானம் மற்றும் வர்த்தக முகாமைத்துவபீட மாணவர்களின் வகுப்புத்தடையை நீக்கு போன்ற வசனங்கள் அடங்கிய பதாகைகளை தொங்கவிட்டிருந்தனர்.

அமைச்சரின் வருகையை அறிந்த மாணவர்கள் காலையில் இருந்து பிற்பகல் 6 மணி வரை கிழக்கு பல்கலைக்கழக வந்தாறு மூலை விடுதி வளாகத்திற்கு செல்லும் பிரதான வாயிற்கதவு பகுதியில் குழுமி நின்றனர்.

மாணவர்களின் எதிர்ப்பை அறிந்த ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த மாணவர்களுடன் பல முறை கலந்துரையாடிய நிலை காணப்பட்டது.

இதேவேளை மாணவர்களின் எதிர்ப்பு காரணமாக கிழக்கு பல்கலைக்கழகத்திற்கான பிள்ளையாரடியில் அமைந்துள்ள மாணவ விடுதியை மாத்திரம் அமைச்சர் திறந்து வைத்து விட்டு சென்றுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 27 மாணவர்கள் மீதான வகுப்புத்தடையை உடனடியாக நீக்குமாறு கோரி மட்டக்களப்பு, வந்தாறுமூலை வளாகத்துக்கு முன்பாக அப்பல்கலைக்கழகத்தின் பெரும்பான்மையின மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## மத்திய வங்கி தொடர்பில் மற்றுமொரு முறைப்பாடு

### விசாரணை கோரி ஜனாதிபதியிடம் வலியுறுத்தல்

இலங்கை மத்திய வங்கியின் பணியாளர்களுக்கு பாரியளவில் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் பணியாளர்களுக்கு மிகவும் பாரியளவில் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக வங்கியின் ஓய்வு பெற்ற அதிகாரிகள் இருவர் முறைப்பாடு செய்துள்ளனர்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவிடமும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர்.

மத்திய வங்கி வரலாற்றில் மட்டுமன்றி இலங்கை அரச சேவை வரலாற்றில் இந்தளவு தொகை சம்பளம் உயர்த்தப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்படி, மத்திய வங்கியின் பிரதி ஆணையாளர்களின் சம்பளங்கள் 110 வீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது 267000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துணை ஆணையாளர்களின் அடிப்படைச் சம்பளம் 107 வீதத்தினால் அதாவது 193000 ரூபாவினால் உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் சிற்றூழியர்களது சம்பளம் 81000 எனவும் இது அரசாங்க மருத்துவர் ஒருவரின் சம்பளத்தை விடவும் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கி சில ஆண்டுகளாக நட்டமடைந்து வரும் நிலையில் இவ்வளவு பாரியளவு தொகை சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடமும், நிதி மோசடி விசாரணைப் பிரிவிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றி ஓய்வு பெற்றுக்கொண்ட டபிள்யு. டி.ஏ.ஈ. வீரசிங்க மற்றும் ஏ.ஜீ.ரத்னவீர ஆகியோரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## தொலைபேசியில் அழைத்து கடிதம் கோரிய ஜனாதிபதி

### ரம்புக்வெல விளக்கம்

(கொழும்பு)

காணாமற் போனோர் அலுவலக அமைப்பு தொடர்பில் எவ்வித பிரச்சினைகள் இருப்பினும் அதனை எழுத்து மூலம் அறிவிக்குமாறு ஜனாதிபதி தம்மிடம் கோரியுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்

இதன் அடிப்படையில் தாம், கடந்த திங்கட்கிழமையன்று கடிதம் ஒன்றை கையளிக்க முயற்சித்தபோதும் அது முடியாமல் போனதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் வார இறுதியில் அல்லது நாளை திங்கட்கிழமையன்று தாம் அந்த கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக ரம்புக்வெல தெரிவித்தார்.

குறித்த அலுவலகம் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளதாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்ததன் பின்னர், ஜனாதிபதியே தமக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவற்றை விளக்கி கடிதம் தருமாறு கோரியதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான பிரச்சினைக்கு 24 மணித்தியாலங்களுக்குள் தீர்வை காணமுடியும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்ததாகவும் ரம்புக்வெல தெரிவித்தார்.



இதேவேளை, காணாமற் போனோர் தொடர்பான அலுவலக சட்டமூலம் கடந்த 11ஆம் திகதி கூட்டு எதிர்க்கட்சியின் பாரிய இடையூறுகளுக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது . (இ-7-10)

# சங்கக்கார அதிரடிச் சதம் அரையிறுதிக்குள் சர்ரே



றோயல் லண்டன் கிண்ண தொடரில் சங்கக்கார அதிரடி காட்ட சர்ரே அணி ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இங்கிலாந்தில் றோயல் லண்டன் கிண்ண ஒருநாள் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில 3-வது காலறுதிப் போட்டியில் சர்ரே-நோர்தம்டன்ஷயர் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற நோர்தம்டன் ஷயர் அணிக்கு ஜொஷ்காப் (66), ரோரி கெலின் வெல்ட் (76) அரைசதம் அடிக்க அந்த அணி 49 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 276 ஓட்டங்கள் எடுத்தது.

சர்ரே அணி சார்பில் டர்ன்பட்ச் அதிகபட் சமாக 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதன் பிறகு 277 ஓட்டங்கள் எடுத்தால் வெனறி என களமிறங்கிய சர்ரே அணி தொடக் கத்தில் இருந்தே தடுமாற ஆரம்பித்தது.

இருப்பினும் கடைசி வரை போராடிய சங்கக்கார அணியை வெற்றியை நோக்கி அழைத்து சென்றார். கடைசி ஓவரில் சர்ரே அணி 9 விக்கெட்டுக்கு 265 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

12 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் சங்கக்கார அந்த ஓவரில் ஒரு சிக்சரும், கடைசி பந்தில் ஒரு பவுண்டரியும் விளாசி அணிக்கு வெற்றி தேடித் தந்தார்.

இதனால் சர்ரே அணி ஒரு விக்கெட்டால் த்ரில வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னே றியது.

கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்த சங்கக் கார 145 பந்தில் 11 பவுண்டரி, 2 சிக்சர் என 130 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.(க)

# அமெரிக்கா முதலிடம்!

31-வது ஒலிம்பிக் போட்டிகள் றியோ டி ஜெனிரோ நகரில் நடந்து வருகிறது.


ஒவ்வொரு நாட்டு வீர வீராங்கனைகளும் தங்களது திறமையை வெளிப்படுத்தி பதக்கங்களை குவித்து வருகின்றனர்.

இந்நிலையில் 38 தங்க பதக்கங்களுடன் 105 பதக்கங்களை பெற்று அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது.

இதற்கு அடுத்தபடியாக 24 தங்க பதக்கங் களுடன் கிரேட் பிரிட்டன் இரண்டாம் இடத்திலும் 22 தங்க பதக்கங்களுடன் சீனா மூன் றாம் இடத்திலும் உள்ளது. (க)

Rio2016

# உசைன் போல்ட் ஹட்ரிக் தங்கம்



ரியோ ஒலிம்பிக் போட்டியில் ஜமைக்காவின் மின்னல் மனிதன் உசைன் போல்ட் 4X100 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியிலும் தங்கம் வென்று ஹட்ரிக் சாதனை படைத்துள்ளார். இது இவர் ஒலிம்பிக்கில் பெறும் 9-வது தங்கமாகும்.

இந்த தொடர் ஓட்டத்தில் இவருடன் Asafa Powell, Yohan Blake மற்றும் Nickel Ashmeade போன்ற வீரர்களும் கலந்து கொண்டனர்.

ரியோ ஒலிம்பிக்கில் 100 மீட்டர் ஓட்டத்தில ஒரு தங்கப் பத்க்கத்தையும் அடுத்ததாக 200 மீற்றர் ஓட்டத்தில் ஒரு தங்கப் பதக்கத்தையும் வென்றிருந்தார்.

இதற்கு முன்னதாக பீஜிங் ஒலிம்பிக்கில் 3 தங்கமும் (100 மீற்றர், 200 மீற்றர், 4X100 மீற்றர் தொடர் ஓட் டம்), லண்டன் ஒலிம்பிக்கில 3 தங்கமும் (100 மீற்றர், 200 மீற்றர், 4X100 மீற்றர் தொடர் ஓட் டம்) வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)


## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் இயங்கி வரும் DSI மொத்த விற்பனை நிலையத்திற்கு வாகனத்தில் பொருட்கள் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு பணியாளர்கள் (Delivery Boys) தேவை. விரும்புபவர்கள் சுயவிபரக் கோவையை எதிர்வரும் 27.08.2016 இற்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முகவரி : DSI மொத்த விற்பனை நிலையம்
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(5686)


# இலங்கை - அவுஸ்திரேலியா முதல் ஒரு நாள் போட்டி இன்று



இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் இரவாக கொழும்பு ஆர்.பிரேமதாஸமைதானத்தில்நடை பெறவுள்ளது.

இலஙகைக்கு சுற்றுலா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும 2 இருபது - 20 போட்டிகளில் பங்கேற்கின்றது. இதில் நடந்து முடிந்த 3 டெஸ்ட் போட்டியிலும் அபார வெற்றி பெற்று இலங்கை அவுஸ்திரேலியாவை வெள்ளையடிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# பெண்களுக்கான அஞ்சலோட்டம் அமெரிக்கா தங்கப்பதக்கம்

றியோ ஒலிம்பிக்கின் பெண்களுக்கான 4X100 அஞ்சலோட்டத்தில், 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் வென்ற தங்கப் பதக்கத்தை ஐக்கிய அமெரிக்கா தக்க வைத்துள்ளது.

அரையிறுதிப் போட்டியில் அஞ்சல் கோலை அமெரிக்கா கீழே போட்டிருந்த நிலையில், மேன் முறையீடு செய்து, தனித்து ஓடி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற தியன்னா பர்ட்டோலெட்டா, அலிஸன் ஃபீலிக்ஸ், இங்கிலிஷ் காட்னர், டோரி பூயி ஆகியோரை உள்ளடக்கிய அமெரிக்க அணி, இரண்டாவது உலக சாதனை நேரமாக 41.01 செக்கன்களில் ஓடி தங்கம் வென்றிருந்தது. போட்டித் தூரத்தை 41.36 செக்கன்களில் கடந்த ஜமைக்கா வெள்ளிப் பதக்கம் வென்றதுடன், போட்டித் தூரத்தை 41.77 செக்கன்களில் கடந்த பெரிய பிரித்தானியா வெண்கலப் பதக்கம் வென்றது. இப்போட்டியில் தங்கம் வென்ற தன் மூலம் தடகளத்தில் ஐந்து தங்கப் பதக்கங்களை வென்ற முதலாவது தடகள வீராங்கனையாக தனது பெயரை அலிஸன் ஃபீலிக்ஸ் பதிவு செய்து கொண்டார். (க)


## துயர் பகிர்கின்றோம்



அமரர் திரு.
கனகரட்ணம் விஜயரட்ணம்

எமது ஆறுதல் நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசகர் திரு. கனகரட்ணம் விஜயரட்ணம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்:
பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்,
பணியாளர்கள்

ஆறுதல் நிறுவனம்
இல.51, வைமன் வீதி, நல்லூர்.
(சி-5507)

## Vacancies

புதிய சர்வதேச ஆங்கில கல்லூரியான BIS பெண்கள் கல்லூரிக்கு வவுனியா, மன்னார், முள்ளியவளை, மற்றும் புதுக்குடியிருப்பு கிளைகளுக்கு

1. English Teachers
2. Pre School Teacher
3. Computer Teacher
4. Course Advicer
5. Receptionist

E-mail மூலம் விண்ணப்பிக்கவும்

BIS LADIES COLLEGE
Email : bisvavuniyainfo@gmail
271, Mannar Rd, Vavuniya.
Tel : 077- 0538523
(5506)

## எதிர்பாருங்கள்

கிராம உத்தியோகத்தர் போட்டி பரீட்சைக்கான-2016 மாதிரி வினாத்தாள் நாளைய வலம்புரியில் பிரசுரமாகும்.

வலம்புரி கல்விப் பிரிவு
0766363378

## காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகே மட்டுவில் தெற்கு, பருத்தித்துறை வீதியில், துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் காணி விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.
(5685)

077 8730 129

## யாரிடம் பேசுவது?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

**எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.**

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். **ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.**

*யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.*

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

## கை கொடுக்கும் நண்பர்கள்

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

**(021) 222 8117 / 077 900 8776**
(தினமும் காலை 9.00-1.00)

**வவுனியாவில்** (024) 324 4444
சனி, ஞாயிறு காலை 9.00—1.00

*(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)*
*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*

# ஐரோ. சந்தைகளில் இலங்கை மீன்கள்!

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதங்களில் 600 தொன் மீன்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த மீன் ஏற்றுமதித் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியதை அடுத்து, இந்த வளர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கடந்த அரசாங்கம் மீது கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கான கால அவகாசமும இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தன.

எனினும், அப்போதைய மகிந்த அரசாங்கம் அதனை கண்டுகொள்ளாமையினால், 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. (இ-7-10)


### வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42-ம் வீதியில் 3-ம் இலக்கத்தில் இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை தொடர்மாடி வீடு நாள், மாத வாடகைக்குண்டு.
077 837 8597
(5648)

### பெண் வேலையாட்கள் தேவை

K.R.S. உணவு உற்பத்தி நிலையத்திற்கு பெண் தொழிலாளர்கள் தேவை.
கே.ஆர்.எஸ்.
உணவு உற்பத்தி நிலையம்
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு கோண்டாவில்
(உபதபாலகம் முன்பாக)
T.P:- 021 492 1886
(5664)

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்
1969.06.06
ஆண்டவன் அடியில்
2012.08.21

அமரர்
**செல்லையா பானுதேவன்**

(முல்லை. வடக்கு பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர் வலைஞர்மடம்)

(சி-3939)

அன்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த- எம்
அன்புத் தெய்வமே காலனவன் ஒரு நொடியில்
உன்னைக் கவர்ந்தானோ கூடிழந்த
பறவைகளாய் தவிக்கின்றோம்-நாம்
4 ஆண்டுகள் என்ன 4 ஆயிரம் ஆண்டுகள்
சென்றாலும் ஆறாதையா உம் துயரம்

நெஞ்சில் உம்மை
இருத்தி
நினைவில்
உம்மைச் சுமந்து
என்றும்
வாழ்கின்றோம்.

செல்வபுரம்,
முல்லைத்தீவு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சுசி, பானுசன், சுசிந்தன்

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் தில்லையம்பலம்
சுதந்திரபாலன்

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்)

23.07.2016 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் *அமரர்* **தில்லையம்பலம் சுதந்திரபாலன்** அவர்களின் பிரிவு கேட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் பிரசுரித்தவர்களுக்கும் மலர் வளையங்களை அனுப்பி வைத்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 22.08.2016 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

***இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.***

ஆடியபாதம் வீதி
(ஞானபண்டித வித்தியாசாலை முன்பாக)
கொக்குவில் மேற்கு

இங்ஙனம்
குடும்பத்தினர்
021 222 2314

(5643)

# இராசி பலன்

21.08.2016
(ஆவணி 05, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திருதியை முற்பகல் 10.57 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 10.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-06.05 மணிவரை
சங்கடகர கணபதி விரதம், ஆவணி ஞாயிறு

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மகம், பூரம் | | |
| | | | சூரி, புத<br>சுக், ராகு |
| | சனி<br>செவ் | | குரு |

**மேடம்:** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர்.

**இடபம்:** இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியம் எளிதில் கைகூடும், உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையை ஏற்றுக் கொள்வர், போசன சுகமுண்டு.

**கடகம்:** புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், தாமதமான காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுகுழப்பங்கள் தோன்றி மறையலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பயணங்களால் பலனுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நன்மைகள் நடைபெறும் நாள், உடல் நலம் சீராகும், சுவாரசியமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள் தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், தொலை தூரத்து உறவினர்களின் சந்திப்புண்டு.


**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும் மனிதர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மகரம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், உடன் பிறப்புகள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும்.

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்பு கிடைக்கும், குடும்பத்தினரிடையே முன் கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது.

## ஆட்டோ மதிலில் மோதியதில் இருவர் வைத்தியசாலையில்



(கரணவாய்) நெல்லியடி நகர் கொடிகாம வீதியில் ஆட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்ததுடன் ஆட்டோ பலத்த சேதமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் கொடிகாம வீதி வழியாக நெல்லியடி நகருக்குள் நுழைய முற்பட்ட ஆட்டோ மதிலில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சேதத்திற்குள்ளான ஆட்டோ நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (இ-60)

# ரவுடிக்கும்பல்களை அடக்கி ஒடுக்க தமிழ் பேசும் பொலிஸார் களத்தில்


யாழில் தற்போது மீண்டும் தலைதூக்கியுள்ள வாள் வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு தமிழ் பேசும் பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்குவேலியில் ரவுடிக் கும்பல் ஒன்றின் வாள் வெட்டினால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

குடும்பஸ்தர் தனது வீட்டுக்கு முன்னால் நின்றபோது திடீரென்று மோட்டார் சைக்கிளில் வந்திறங்கிய இளைஞர் குழு இவரை சரமாரியாக வாளால் வெட்டியது. தலை, கழுத்து, கை, கால் போன்ற பல இடங்களிலும் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான அவரை உறவினர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், குறித்த கொலைச் சம்பவத்திற்கு பொலிஸாரால் தேடப்பட்டு வரும் இளைஞர் ஒருவரே காரணம் என கூறப்படும் நிலையில், குறித்த இளைஞரை தலைவராக கொண்ட ரவுடிக் கும்பலையும் பொலிஸார் தேடி வருகின்றனர். இதே போன்று,

மல்லாகத்திலும் நேற்று முன்தினம் வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. இந்த நிலையிலேயே குறித்த குழுக்களை கண்டறிவதற்கு தமிழ் பேசும் பொலிஸார் களமிறக்கப்பட்டுள்ளனர். எனவே எந்தவித பயமும் இன்றி குறித்த வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பற்றி ஏதேனும் அறிந்திருந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தி, குற்றவாளிகளை கைது செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் என யாழ். பொலிஸார் கோரியுள்ளனர். இதேபோல் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் குறித்த நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் அறிந்தால் அறிவிக்க முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-4)







யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கோவில் வீதியில் உள்ள கம்பன் கோட்ட மண்டபத்தில் நடத்தப்படும் நல்லூர் புத்தகத் திருவிழா கடந்த 17ஆம் திகதி காலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்ச்சங்க உபதலைவரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவருமாகிய கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். ஈழத்து புத்தகங்களை மாத்திரம் கொண்டு எதிர்வரும் 3 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் மாலை 3 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் நடத்தப்படும் புத்தகத் திருவிழாவில் மூத்த எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# நல்லூர்க்கந்தனின் தேர்த்திருவிழா அன்று விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்கவும்

## இந்து சமயப் பேரவை வேண்டுகோள்

நல்லூர்க்கந்தனின் தேர்த் திருவிழா இடம்பெறும் நாளை விடுமுறை நாளாக பிரகடனப்படுத்துமாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் செயலாளர் சி.சக்திகிரீவன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர்க்கந்தசுவாமி கோயிலின் இரதோற்சவம் (தேர்த்திருவிழா) எதிர்வரும் 31.08.2016 புதன்கிழமை அன்று நடைபெறவுள்ளது.

நல்லூர் தேர்த்திருவிழா அன்று நாட்டில் பல பாகங்களில் இருந்தும் மக்கள் மத வேறுபாடின்றி கூடி முருகப்பெருமானை வழிபட்டு வருவது வரலாற்றுக்காலம் தொட்ட மரபு.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் 2000 இற்கும் மேற்பட்ட யாத்திரீகர்கள் இவ் ஆலயத்தில் தங்கி வழிபடுவதாக அப்போதைய அரசாங்க அதிபர் அறிக்கை வெளியிட்டுள்ளமை இந்நேரத்தில் ஞாபகமூட்டுகின்றோம்.

இத்தகைய புனிதமான நிகழ்வில் ஏனைய மாவட்ட மக்கள் கூடுவதோடு யாழ்.மாவட்ட மக்கள் முழுமையாக அணிதிரண்டு முருகப்பெருமானை வழிபட்டு அருள் பெற்று வருவதால் யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை மூடி விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்த அதிகாரத்தை பிரயோகிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர், அவைத்தலைவர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்.மாவட்ட சமாதான நீதவான் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு நேற்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.

நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - நா.தணேந்திரன், உப தலைவர்கள் -இ.மயில்வாகனம், ஈ.பிரபாகரன், செயலாளர்-க.நாகேந்திரம், உப செயலாளர்-என்.எஸ். திருச்செல்வம், பொருளாளர் -ம.சுஜீவன், நிர்வாகசபை உறுப்பினர்களாக சி.வ.சங்கப்பிள்ளை, க.சுந்தரலிங்கம், தெ.திருச்செல்வன், ஆ.பெனான்டோ, ச.திரவியச்செல்வம், ச.தண்டாயுதபாணி, சி.திருமுருகன், ந.அன்ரன் டயஸ், எஸ்.ஜே. ஜெயக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3-134)

## இசை இறுவெட்டுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தெய்வீகச் சேவைத் திட்டத்தின் கீழ் இந்துப்பண்பாட்டு நிதியமானது இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தெய்வீக இசை இறுவெட்டுக்களை வெளியீடு செய்யவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக கல்விக் காருண்யன் ஈ.எஸ். பி. நாகரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## புராண இசை நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகவரத நாராயணர் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய முன்றலில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் புராண இசை நாடகங்கள், கூத்துக்கள் இன்றும் இடம்பெறும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணி தொடக்கம் 10 மணி வரை ''இராவணேசன்'' வடமோடிக் கூத்து இடம்பெறும். (இ-3)

# கூடுதல் கட்டணம் அறவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### வாகனப் பாதுகாப்பு நிலையங்களுக்கு யாழ்.மாநகர சபை மீள அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தில் பிளாஸ்ரிக் அர்ச்சனைத் தட்டுக்களை விற்பனை செய்வதற்கும், துவிச்சக்கர வண்டி பாதுகாப்புக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திலும் பார்க்க கூடுதலான கட்டணத்தை அறவிடும் பாதுகாப்பு நிலையங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்வும் யாழ்.மாநகரசபை மீளவும் அறிவித்துள்ளது.

நல்லூர் ஆலயத்தை சூழவுள்ள பிரதேசங்களில் நடத்தப்பட்டு வரும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களில் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பிற்கு ஐந்து ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு பத்து ரூபாவும் என்ற ரீதியிலே மாநகர சபையினால் கட்டணங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது சிலர் நிலையங்கள் துவிச்சக்கர வண்டிக்கு பத்து ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு இருபது ரூபாவும் அறவிட்டு வருகின்றனர்.

இவ்வாறு அறவிடப்படும் கட்டணங்களுக்கு மாநகர சபையால் உறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களும் வழங்கப்படுவதில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன், ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறுகின்ற நிலையில்,

பிளாஸ்ரிக் அர்ச்சனைத் தட்டுக்களுக்கு பதிலாக பனையோலையில் தயாரிக்கப்பட்ட அர்ச்சனைத் தட்டுக்கள் விற்பனை செய்யவேண்டும். அவற்றை மாவட்ட மகளிர் அமைப்புக்கள் ஊடாகவும், பனை சார் உற்பத்தியாளர்களிடமிருந்தும், குறைந்த விலைகளில் கடைக்காரர்கள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைவிட, 20 மைக்றோவுக்கு குறைவான பொலித்தீன் பாவனை, உக்கலடையாத பொருட்களின் பாவனை என்பனவும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களும், கடமையில் ஈடுபடுபவர்களுக்கு கலாசார உடைகளை அணிய வேண்டும். ஆலய வெளி வீதியில் அங்கப் பிரதட்சனை செய்வதற்காக கொட்டப்பட்டுள்ள மணலை அசிங்கம் செய்யாமல், சுகாதாரம் பேண வேண்டும்.

ஆலய சுற்றாடலையொட்டி அமைக்கப்படும் வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் சைக்கிள்களுக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ரூபாவும் மாத்திரம் அறிவிடப்படவேண்டும். மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலயத்தின் முக்கிய திருவிழாக்காலங்களில் ஆலயத்துக்குள் நுழையும் காவடிகள், வடக்கு வீதிப்பக்கமாக நுழைந்து, குபேர வாசலில் தங்கள் நேர்த்திக்கடனை முடித்த பின்னர், கோவில் வீதி வழியாக தெற்கு பக்கமாக வெளியேற வேண்டும் என்று அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த அறிவுறுத்தல்களை மீறும் விதமாகவே துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள் செயற்பட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும் சில கடைகளில் உக்கலடையாத பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-4)

# கடன் சுமையை குறைப்பதே தற்போதைய அரசின் நோக்கம்

## உயர்கல்வி அமைச்சர்

(கொழும்பு)

**நாட்டின் கடன்சுமையை குறைப்பதே தற்போதைய அரசின் நோக்கம் என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**



தற்போதைய அரசாங்கத்தின் மொத்த வருமானமும் நாட்டின் கடன் தவணைகளை செலுத்துவதற்கே போதாது என்று அவர் தெரிவித்தார்.

உயர் கல்வி அமைச்சினால் கிழக்கு பல்கலைக் கழக மருத்துவபீட பெண் மாணவிகளுக்கென நிர்மாணிக்கப்பட்ட விடுதிக் கட்டடத் தொகுதியை உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் மாலை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7-10)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 65<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/லண்டன்PR<br>தொ.இ: B/5001 | பிறப்பு: 1974 RC<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 30 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: G/913 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 30 'செவ் 4 இல்<br>உயரம்: 181cm<br>தகைமை/தொழில்:MBBS<br>வைத்தியர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/5003 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 78<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்<br>தொ.இ: G/940 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 58 செவ் 1 இல்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>தொ.இ: B/5004 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 5<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/948 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்.<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: B/5007 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 28 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Chartered<br>தொ.இ: G/961 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.




# சர்வதேச விசாரணை கோரி கவனயீர்ப்புப் போராட்டம்

## ஜேர்மனியில் முன்னெடுப்பு

***இலங்கை இராணுவத்தின் புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் மர்மமான முறையில் உயிரிழந்து வருவது தொடரபில் சர்வதேச மட்டத்திலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்து ஜேர்மனியில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.***

முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதாக தகவல்கள் வெளியாகிவரும் நிலையிலேயே ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பினர் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தின் இறுதி நாட்களில் இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் புனர்வாழ்வு ஆணையகம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரால் நடத்தப்பட்ட இந்த புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் 107 பேர் இதுவரை மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக இலங்கை நாடாளுமன்றில் தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஜெனிவாத் தீர்மானத்திற்கு அமைய இலங்கை அரசினால் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பில் மக்கள் கருத்தறியும் செயலணியிடமும் முன்னிலையாகிய முன்னாள் போராளிகள் சிலர் தமக்கு புனர்வாழ்வு முகாம்களில் சந்தேகத்திற்கு இடமான ஊசிகள் பலவந்தமாக ஏற்றப்பட்டதாக முறையிட்டனர்.



எனினும் இந்தக் குற்றச்சாட்டை இராணுவமும் அரசாங்கமும் மறுத்து வரும் நிலையில் இது குறித்து இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட போராளிகளின மர்ம மரணங்களைக் கண்டித்தும், பன்னாட்டு விசாரணையை கோரியும் ஜேர்மன் தலைநகர் பேர்லினில் தமிழ் இளையோர் அமைப்பினர் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

ஜேரமன் வெளிவிவகார அமைச்சுக்கு முன்பாக நேற்று முந்தினம் மாலை இடம்பெற்ற இந்த கவனயீர்ப்பு நிகழ்வில் அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து வட்டுள்ள கொடூரங்களை அம்பலப்படுத்தும் பதாகைகளை தாங்கிய வண்ணம், இந்த விடயம் சார்ந்து இளையோர்களால் ஒலிபெருக்கியில் தெளிவுபடுத்தல்களும் முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து போராட்டத்தின் இறுதியில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடூரங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தி தயாரிக்கப்பட்ட மனுவொன்றும் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. (இ-7-10)

# ஜனாதிபதித் தேர்தலின் போது பல கோடி ரூபாய் பேரம்!

## மனோ கணேசன் தகவல்



கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமது முற்போக்கு கூட்டணிக்கு பல கோடி ரூபாய்கள் பணம் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அரசகரும மொழிகள் மற்றும் தேசிய கலந்துரையாடல் துறை அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் புடைவை வியாபாரிகளால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒனறில உரையாற்றிய அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

2005ஆம் ஆண்டில் விடுதலைப புலிகளுக்கு பணம் கொடுத்து வடக்கு, கிழக்கு மக்களை வாக்களிக்காமல் செயது அதன் மூலம் மகிந்த ராஜபகஷ ஜனாதிபதியானார்.

எனவே இந்த தடவை வடக்கு, கிழக்குக்கு வெளியேயுள்ள தமிழர்களின் வாக்குகளை மனோ கணேசன் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால் பெற முடியும்.

அதைப்போன்று வடக்கு, கிழக்குக்கு வெளியில் உள்ள தமிழர்களின் வாக்குகளை சிதறடித்து வெற்றி பெற முயற்சிக்கப்பட்டது என்று மனோகணேசன் தெரிவித்தார்.

எனினும் அதற்கு இணங்காமல் நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளித்ததாகவும் மனோகணேசன் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவோர் கைது

## புஷ்பகுமார எச்சரிக்கை



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறவுள்ளதாகவும் இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இணைப்பு மத்திய நிலையம் மறறும் பரீட்சை நிலையம் என்பவற்றை கண்காணிப்பதற்கு பரீட்சைத் திணைக்களம் மற்றும் மாகாண கல்வி அமைச்சு என்பவற்றின் அதிகாரிகள் 24 மணி நேரமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என். ஜே.புஷ்பகுமார அறிவித்துள்ளார்.

அனுமதியின்றி எந்தவொருநபரும் பரீட்சை நிலையத்துக்குள் பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில செயற்படும் எவரையும் கைதுசெய்யுமாறு பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 2989 பரீட்சை நிலையங்களில் இன்று நடைபெறவுள்ள இப்பரீட்சையில் மூன்று இலட்சத்து 50 ஆயிரத்து 701 பரீட்சார்த்திகள் தோற்றுவதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2016 21

- 1770 - கப்டன் ஜேம்ஸ் குக் கிழக்கு அவுஸ்திரேலியாவில் தரையிறங்கி அதனை பெரிய பிரித்தானியாவுக்குச் சொந்தமாக்கி அதற்கு நியூ சவுத் வேல்ஸ் எனப் பெயரிட்டான்.
- 1821 - ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1842 - டாஸ்மானியாவின் தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கன்சாஸ் மாநிலத்தில் லோரன்ஸ் நகரம் அழிக்கப்பட்டது.
- 1911 - லியனார்டோ டா வின்சியின் ஓவியமான மோனா லிசா பாரிசின் லூவர் அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டது.
- 1920 - சேர் ஏ. கனகசபை இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போர் ஆரம்பமானது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சாலமன் தீவுகள் தொடர் சமர் முடிவடைந்தது.
- 1959 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் 50வது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1963 - தெற்கு வியட்நாமின் குடியரசு இராணுவத்தினர் நாட்டின் பௌத்த தலங்களை அழித்து நூற்றுக்கணக்கானோரைக் கொன்றனர்.
- 1968 - சோவியத் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகளின் படையினர் செக்கோஸ்லாவாக்கியாவைக் கைப்பற்றின.
- 1969 - அவுஸ்திரேலியனான மைக்கல் டெனிஸ் ரொஹான் என்பவன் ஜெருசலேமின் அல் அக்சா மசூதிக்குத் தீ வைத்தான்.
- 1983 - பிலிப்பீன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனீனோ பைக்கீனோ மணிலாவில் கொலை செய்யப்பட்டார்.
- 1986 - கமரூனில் நியோஸ் ஆற்றில் காபனீரொட்சைட்டு வளிமம் கசிந்ததில் 1,800 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1991 - லாத்வியா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 2007 - சூறாவளி டீன் மெக்சிகோவை 165 மைல்/மணி வேகத்தில் தாக்குதலை ஆரம்பித்தது.

பிறப்புகள்

- 1567 - பிரான்சிசு டி சேலசு, சுவிட்சர்லாந்துப் புனிதர் . (இ. 1622)
- 1765 - ஐக்கிய இராச்சியத்தின் நான்காம் வில்லியம். (இ. 1837)
- 1907 - ப. ஜீவானந்தம், இந்தியப் பொதுவுடமைவாதி. (இ. 1963)
- 1917 - லியோனிடு ஹர்விக்ஸ், உருசியப் பொருளியலாளர், கணிதவியலாளர்.(இ. 2008)
- 1961 -வ. பி. சந்திரசேகர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்
- 1963 - மொரோக்கோவின் ஆறாம் முகம்மது.
- 1973 - சேர்ஜி பிரின், கூகுள் நிறுவனர்.
- 1978 -பூமிகா சாவ்லா, இந்திய நடிகை.
- 1984 - நியல் டெக்ஸ்டர், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர்.
- 1984 - பருன் சொப்டி, இந்திய நடிகர்.
- 1985 - மேலீசா, பிரெஞ்சுப் பாடகி.
- 1986 - உசேன் போல்ட், ஜமைக்கா ஓட்டவீரர்.

இறப்புகள்

- 1940 - லியோன் திரொட்ஸ்கி, உருசியப் புரட்சியாளர் செஞ்சேனையைத் தோற்றுவித்தவர். (பி. 1879)
- 1995 - சுப்பிரமணியன் சந்திரசேகர், நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியலாளர். (பி. 1910)
- 2004 -சச்சிதானந்த ராவுத்ராய், இந்திய ஒரியக் கவிஞர். (பி. 1916)
- 2006 - பிசுமில்லா கான், இந்திய செனாய் இசைக்கலைஞர். (பி. 1916)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 80 | 50 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 | 100 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 110 | 200 | 150 | 200 | 200 |
| தக்காளி | 50 | 50 | 40 | 60 | 60 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 80 | 100 | 90 | 80 | 100 |
| கோவா | 140 | 100 | 70 | 120 | 120 | 120 | 140 |
| கரட் | 160 | 120 | 90 | 80-200 | 120 | 160 | 150 |
| பூசணி | 30 | 30 | 25 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 50 | 30 | 20 | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 120 | 80 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 50 | 100 | 60 | 80 | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 75 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 60 | 80 | 60 | 220 | 90 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 40 | 40 | 50 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | — | 120 | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 60 | 20 | 40 | 100 | 50 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 30 | 20 | 40 | 40 | 60 | 60 | 70 |
| கறிமிளகாய் | 150 | 100 | 140 | 150 | 140 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 40 | 20 | 60 | 80 | 100 | 80 | 70 |
| போஞ்சி | 200 | 100 | 130 | 170 | 160 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 40 | 60 | 50 | 70 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 10 | 20 | 130 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 200 | 160 | 200 | 200 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 15-25 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 140 | — | 80 | 120 | 90 | 200 | 150 |
| முள்ளங்கி | 30 | 50 | 30 | 40 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 20 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 30 | 30 | 30 | 50 | 40 | 60 | 60 |

## சலுகைக் கடன் அடிப்படையில்

# இலங்கைக்கு ஆறு அதி நவீன சுகோய் ரக போர் விமானங்களை வழங்குகிறது ரஷ்யா


## அந்நாட்டு ஜனாதிபதி அனுமதி

(கொழும்பு)

**இலங்கை விமானப்படையினரின் பயன்பாட்டுக்காக அதி நவீன ஆறு சுகோய் ரக போர் விமானங்களை வழங்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அனுமதி வழங்கியுள்ளார்.**

இலங்கைக்கு வழங்கப்படும் சலுகைக் கடன் ஒன்றின் அடிப்படையில் சுகோய் தாக்குதல் விமானம் வழங்கப்படவுள்ளது. இந்த சுகோய் 31 ரக தாக்குதல் விமானங்களைப் பார்வையிடுவதற்கு இலங்கை விமானப்படைத் தளதி ககன் புலத்சிங்கள மற்றும் ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதரக பாதுகாப்பு அதிகாரி ஆர்.கே.லியனகெ ஆகியோர் விமான உற்பத்திச் சாலைக்கு நேரில் சென்றுள்ளனர்.

இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் கிபிர் மற்றும் மிக் ரக தாக்குதல் விமானங்கள் சேவையிலிருந்து அகற்றப்பட உள்ளதனால், இந்த சுகோய் ரக விமானங்கள் ரஷ்யாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.



இதற்காக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அனுமதி வழங்கியுள்ளார் என கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானிடமிருந்து இலங்கை தாக்குதல் விமானம் கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளதாக கடந்த காலங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

ரஷ்யாவின் சுகோய் ரக விமானங்கள் எப்போது கொள்வனவு செய்யப்படும் என்பது பற்றிய விபரங்களை பாதுகாப்பு அமைச்சோ அரசாங்கத் தரப்புக்களோ உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## வாரம் ஒரு தகவல்

### தமிழ்த் தாத்தாவை ஊக்கியவர்

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்கள் கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராய்ப் பணி செய்து வந்த போது, இவரது தமிழ்ப் புலமையைக் கேள்விப்பட்ட சேலம் இராமசாமி முதலியார் என்பவர் ஐயர் அவர்களோடு நெருங்கிய நட்புக் கொண்டார். முதலியார் அக்காலத்தில் கும்பகோணத்தில் முன் சீப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்.

இருவரும் நெருங்கிய நண்பர்களான பின்னர் அடிக்கடி இவர்கள் சந்தித்து உரையாடிக் கொள்வதும் தமிழிலக்கிய நுட்பங்கள் குறித்துப் பேசிக் கொள்வதும் வழக்கமாக ஆயிற்று.

ஒரு நாள் முதலியார் ஐயரவர்களிடம், "தமிழில் நிறைய இலக்கியங்கள் இருந்தன. அவையெல்லாம் கடலால் விழுங்கப்பட்டு மறைந்தன என்று தான் நாம் பழம் பெருமையைப் பேசிக் கொள்கிறோம். தற்போதிருக்கும் இலக்கியங்களையாவது அச்சேற்றும் முயற்சி நம்மிடம் இல்லையே"! எனக் கூறி நொந்து கொண்டார்.

முதலியார் தம்மிடமிருந்த ஒரு பழம் ஏட்டுச் சுவடியைக் கொண்டு வந்து , ஐயரவர்களிடம் கொடுத்து தாங்கள் இதைப் பரிசோதித்து அச்சிடுங்கள். அதற்கு செலவாகும் பணத்தை நான் தந்து கொள்கிறேன் எனக் கூறினார்.

முதலியாரின் உரைகள் ஐயரிடம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தின. நமது பழம் நூல்கள் ஏட்டுச் சுவடிகளாக இப்போதும் கிடைக்கலாமே என்ற நம்பிக்கை இவரிடம் எழுந்தது. அவைகளை அச்சில் கொண்டுவந்தால் அதற்கு இணையான பணி வேறு எதுவும் இல்லையென ஐயர் தம்முள் தெளிந்து கண்டார். இதற்கான ஊக்கமும் உணர்ச்சியும் அவரிடம் மேலோங்கி நின்றன.

முதலியார் கொடுத்த ஏட்டுச் சுவடியை வீட்டுக்குக் கொண்டுவந்து பிரித்துப் பார்த்தார் ஐயர். அது சிந்தாமணி ஏடாக இருந்தது. அவரது உள்ளம் மகிழ்ச்சியால் கூத்தடித்தது.

அந் நூல் ஏடுகளைப் பிரித்துப் பார்த்த பொழுது அதில் பல பகுதிகள் சிதைந்திருந்தன. சில இடங்களில் எழுத்துக்கள் தெளிவில்லாதிருந்தன. எனவே அதை ஒப்புநோக்கி பதிப்பிக்க வேறு ஏடுகளும் தேவைப்பட்டன.

இதன் பின்னர் ஐயரவர்கள் தம் பெரும் பகுதிப் பொழுதையும் ஏடுகள் தேடுவதிலேயே செலவு செய்து வந்தார். இம்முயற்சியில் அவர் பட்ட தொல்லைகளும் துயரங்களும் எண்ணிலடங்கா. அவை கேட்போர் நெஞ்சங்களை உருக்குவன.

எனினும் இவற்றைப் பொருட்படுத்தாது அவர் ஊர்கள் தோறும், வீடுகள் தோறும் சுற்றியலைந்து ஆயிரக்கணக்கான ஏடுகளைத் திரட்டினார். சிந்தாமணி ஏடுகளிலேயே 25 கிடைத்தன.

இந் நூலைப் பரிசோதித்து அச்சிடும் போது ஐயரவர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி சிறிதளவன்று. ஆயினும் அவர் உள்ளம் தளராது, ஊக்கம் குலையாது ஆறு ஆண்டுகள் அரிதின் முயன்று அந் நூலை வெளியிட்டார். ஐயரவர்கள் பதிப்புப் பணியில் சிந்தாமணியே முதல் நூலாக வெளிவந்தது. இதைத் தொடர்ந்தே ஏனைய நூல்களும் வெளிவந்தன. ஐயரவர்களின் அயராத உழைப்பால் - சிறந்த பணியால் இன்று தமிழன்னை எழில் பெற்று விளங்குகிறாள்.

**கவிஞர் தே.ப.பெருமாள்**

# ஐரோப்பாவில் மகிந்தவை கைது செய்ய நடவடிக்கை!

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இத்தாலி உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைது செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய நாடு ஒன்றில் வைத்தே மகிந்தவை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆட்சியில் இருந்த போதே, ஐரோப்பிய நாடுகளுக்கு மகிந்த விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது இராஜதந்திர சிறப்பு சலுகை அடிப்படையில் அவர் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போயிருந்தன.

இந்நிலையில் போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினராக விஜயம் செய்யும் மகிந்தவை கைதுசெய்வது இலகுவான விடயம் என தெரிவிக்கப்படுகிறது.



இறுதியாக மகிந்த பிரித்தானியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது, ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸாரின் ஆலோசனைக்கமைய அவரும், அவரின் பாதுகாப்பு குழுவினரும் யாருக்கும் அறிவிக்காமல் மீண்டும் இலங்கைக்கு திரும்பி விட்டனர்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் நீதிமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷ உட்பட இராணுவ அதிகாரிகளை கைது செய்வதற்காக பிடியாணை கோரியிருந்தமையே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அன்றைய தினம் குற்றவாளிகள் அந்த நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பால் இருந்தமையினால் பிடியாணை பிறப்பிக்கப்படவில்லை. எனினும் வழக்கு முறைப்பாடு செய்த தரப்பினர் முறைப்பாட்டை மீளவும் பெற்றுக் கொள்ளாமையினால் அது தற்போது வரையில் வெஸ்ட்மின்ஸ்டர் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் முறைப்பாட்டாளர்கள் இவர்களை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்குமாறு மீண்டும் கோரினால் அந்த உத்தரவை பிறப்பிப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

பிரித்தானிய நீதிமன்றினால் வெளியிடும் கைது செய்வதற்கான பிடியாணையை செயற்படுத்துவதற்கு ஐரோப்பிய சங்கம் கைகோர்த்துள்ளமையினால் மகிந்த ராஜபக்ஷவின் நிலைமை கவலைக்கிடமாகியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இத்தாலிக்கு விஜயம் மேற்கொள்ளும் மகிந்த பெருமளவு பணத்தை தம்வசம் கொண்டு செல்வதாகவும், கைது செய்யப்படும் பட்சத்தில் அது சட்டத்தரணிகளின் செலவுக்கு பயன்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# இலங்கை மோப்ப நாய்க்கு ஒக்டோபரில் சர்வதேச விருது

இலங்கை மோப்ப நாய்க்கு சர்வதேச விருது ஒன்று வழங்கப்படவுள்ளது.

உலகில் போர் இடம்பெற்ற, இடம்பெற்று வரும் நாடுகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்ட ஆயிரம் மோப்ப நாய்களில், இலங்கை இராணுவத்திற்கு சொந்தமான அல்வின் மெஜிஸ்டின் என்ற மோப்ப நாய் கூடுதல் கண்ணி வெடிகளை மீட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அமெரிக்காவில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் இலங்கையைச் சேர்ந்த அல்வின் மெஜிஸ்டின் நாய்க்கு விசேட விருது வழங்கப்படவுள்ளது. (இ-7-10)

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2016–16.09.2016



*தான் மட்டுமல்லாமல் தன்னைச் சார்ந்தவர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று விரும்பும் துலாம் ராசி நேயர்களே!*

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் சுக்ரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு விரயாதிபதி புதனும், லாபாதிபதி சூரியனும் இணைந்து இருக்கிறார்கள். சூரியனுக்கு பகை கிரகமான ராகுவும் லாப ஸ்தானத்தில் இருக்கின்றார். எனவே இந்த மாதம் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை வேண்டிய நேரத்தில், வேண்டிய அளவிற்கு தொகை வந்து கொண்டேயிருக்கும். வந்த தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை வந்து சேரும்.

தேவைக்கேற்ப பணம் வந்தால் கவலை இல்லை அல்லவா? திருமணம் பேசுகி நீர்களா? அதற்கு பொருட்கள் வாங்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா? எதற்கும் பணத்தை வைத்துக்கொண்டு காரியத்தைச் செய்ய இயலாது. காரியத்தை தொடங்கிவிட்டால், பணம் தானே வந்து சேரும். இதுபோன்ற நேரங்களில் பழைய வீடுகளைப் பழுது பார்க்கும் முயற்சியில் ஆர்வம் காட்டலாம்.

அரசியல் அனுகூலம் அதிகமாகவே கிடைக்கும். அதிகார வர்க்கத்தினர் உங்கள் அன்புக்குக் கட்டுப்படுவர். சதிகாரர்கள் விலகுவர். சங்கடங்கள் அகலும். தொழில் வளர்ச்சி சிறப்பாகவே இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். கலை ஆர்வத்தோடு நீங்கள் செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம்.

வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய், சனி சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். எனவே ஒரு சில சமயங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். செவ்வாய் பெயர்ச்சி வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தனுசு ராசிக்கு செவ்வாய் சென்ற பிறகு தனவரவு கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். நீங்கள் என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது பலமடங்கு உயர்ந்து நிற்கும். ஒவ்வொரு சனிக்கிழமையும் விநாயகப் பெருமானையும், சனி பகவானையும் வழிபட்டு வருவது நல்லது. குறிப்பாக விநாயகர் சதுர்த்தியன்று வேழமுகத்தானை வழிபட்டால் வாழ்வு வளமாகும்.

தேவைகள் பூர்த்தியாகும். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுப்பர். திடீர் பயணங்கள் உருவாகும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் விரும்பும் விதத்தில்அமையும்.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**




இதுவரை குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், சனியோடு இணைந்து இருந்ததால் குடும்பப் பிரச்சினைகள் கொடி

வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கப்பெறும். சேமிப்பு உயரும் நேரமிது. இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்வதோடு, யோக எண் அடிப்படையில் ராம ஜெயத்தை எழுதுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் மாதம் இது. வீடு மற்றும் வாகனம் வாங்கும் யோகம் உண்டு. கணவன் மனைவிக்குள் இருந்த பிணக்குகள் அகலும். வாழ்க்கைத் துணையின் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பஞ்சம ஸ்தானத்தில் கேது இருப்பதால் பிள்ளைகளால் விரயம் உண்டு. அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்ல்து. பாகப்பிரிவினை விவகாரத்தில் உங்களின் பங்கு துல்லியமாக கிடைக்கும். பிரதோஷ வழிபாடும், திசை மாறிய தென்முகக் கடவுள் வழி

## விலகிச் சென்றவர்கள் தேடி வருவார்கள்

**அற்புதமான சுக்ரப் பெயர்ச்சிக்காலம்!**

ஒகஸ்ட் 26ஆம் திகதி சுக்ரன் 12இல் மறைந்து நீச்சம் பெறப்போகின்றார். 8இறகு அதிபதி 12இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் அபரிமிதமான நற்பலன்கள்வந்து சேரப் போகி னறன. எனவே பணத

கட்டிப் பறந்திருக்கலாம். கடந்த 6 மாத காலமாக பகை கிரகத்தோடு உறவாடி வந்த செவ்வாய் செப்டெம்பர் 9ஆம் திகதி வெற்றிகள் ஸ்தானதிற்கு செல்கின்றார். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளும் உடன்இருப்பவர்களும் உங்களுக்குச் சாதகமாக இருப்பர். வழக்குகள் நல்ல முடிவிற்கு

பாடும நன்மையை வழாங்கும். சதுர்த்தியன்று கணபதியை வழிபடுவதன் மூலம் சந்தோஷத்தை தக்க வைத்துக்கொள்ள இயலும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**

ஒகஸ்ட்: 17, 18, 28, 29

செப்டெம்பர்: 1, 2, 7, 8, 9, 14, 15

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



*எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொண்டிருக்கும் விருச்சிக ராசி நேயர்களே!*

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, நவக் கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குரு பகவான் லாப ஸ்தானத்தில் வீற்றிருக்க, நல்லவன் செவ்வாய் உங்கள் ராசியிலேயே நடமாட, முத்தான பத்தாம் இடத்தில் 4 கிரகங்கள் முத்திரை பதிக்கும் விதத்தில் இருப்பதால் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடும் மாதமாக இம்மாதம் அமையப்போகின்றது. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற குருவின் அருள்பார்வை உறுதுணை புரியும்.

வங்கிச் சேமிப்பு வரலாறு காணாத அளவிற்கு உயரப்போகின்றது. மங்கள ஓசை உங்கள் இல்லத்திலும் உங்கள் உடன்பிறப்புகளின் இல்லத்திலும் கேட்கப்போகின்றது. தொழில் ஸ்தானம் வலுவாக இருப்பதாலும், தனாதிபதி சூரியன் புதனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குவதாலும், புத சுக்ரயோகம இருப்பதாலும் அடுக்கடுக்காக ஒப்பந்தங்கள் வந்து கொண்டேயிருக்கும். ஆற்றல் மிக்கவர்கள்'உங்களோடு கூட்டுச் சேர்ந்து தொழில் செய்யலாமா? என்று கேட்பர். வெளிநாட்டு அனுகூலமும் உண்டாகும்.

வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சி கைகூடும். வருங்கால நலன் கருதி முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். பழைய தொழிலை பங்குதாரரிடம் ஒப்படைத்துவிட்டுப் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஒரு சிலர் ஆர்வம் காட்டுவர். தேசப்பற்றும், தெய்வப்பற்றும் மிக்க உங்களுக்கு, அரசியல்வாதிகளின் அனுகூலத்தோடு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். செவ்வாய் ராசிநாதனாக அமைந்து அது வாக்கு ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கும் நேரமான செபடெம்பர் 9ஆம் திகதிக்கு மேல் அதிகாரத்துவ யோகம் செயற்படப் போகின்றது.

எனவே ஆணையிடக்கூடிய வாய்ப்பு அரசியலில் உள்ளவர்களுக்கு வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கும்

வெற்றிகள் குவியும்.

**சுகம் தரும் சுக்ர பெயர்ச்சி!**

ஒகஸ்ட் 26ஆம் திகதி கன்னி ராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். அங்குள்ள குருவோடு சேர்ந்து நீச்சபங்கம் அடைகின்றார். எனவே பயணங்களால் பலன் கிடைக்கும். குரு சுக்ர சேர்க்கையால் கல்யாணக் கனவுகள் நனவாகும். புதிய வாகனங்கள்




வாங்க வேண்டுமென்ற எண்ணத்தை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**செல்வ வளம் பெருக்கும்**

கலாம். வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படும் இடத்தில் ராசிநாதன் செவ்வாய் வரும் பொழுது அடுக்கடுக்காக யோகங்கள் வந்து அலைமோதும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். இம்மாதம் சதுர்த்தியில் ஆனைமுகப் பெருமானையும் சஷ்டியில் ஆறுமுகப் பெருமானையும் பிரதோஷத்தன்று நந்தியெம்பெருமானையும் வழிபாடு செய்யுங்கள். முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைக்க இயலும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பாராட்டு மழையிலும், பண மழையிலும் நனைவீர்கள். தாராள மனம் படைத்தவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு தானாகவே வந்து சேரும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். உணர்ச்சி வசப்பட்டு பேசியதன் மூலம் விலகிச் சென்ற உடன்பிறபுகள் இப்பொழுது விரும்பி வந்து சேருவர்.

## ஒப்பந்தங்களால் உள்ளம் மகிழும்!

உயர பதவி கிடைத்து உள்ளம் மகிழும் வாய்ப்பு கிடைக்கும். பூமியால் லாபம் உண்டு.

வழிபாடுகள் தான் உங்கள் வாழ்க்கைப் பாதையைச் சீராக்குகின்றன என்பதை அனுபவத்தில் உணருவீர்கள். அந்த அடிப்படையில் இம்மாதம் விநாயகருக்கு உகந்த சதுர்த்தி வருவதால் அன்றைய தினம் விரதமிருந்து மோதகப் பிரியனை விரும்பி வழிபாடு செய்யுங்கள். உங்கள் ஜாதகப்பலன்கள் சரியாக நடைபெற்று வேழ முகத்தானின் அருளால்

**செவ்வாய் பெயர்ச்சி!**

உங்கள் ராசிநாதன் செவ்வாய் உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். தானாகவே எதிலும் முடிவெடுத்து வெற்றி காண்பீர்கள். அங்ஙனம் சிறப்பு வாய்ந்த செவ்வாய் செப்டெம்பர் 9ஆம் திகதி வாக்கு ஸ்தானத்தில் வலம் வரப்போகின்றது. எனவே உங்களைத் தாக்கிப் பேசியவர்கள் கூட இனி தூக்கிப் பேசுவர். அதிகாரப்பதவியும் கிடைக்

துள்ளி விளையாடும் பிள்ளைச் செல்வங்கள் உருவாகலாம். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வீடு வாங்கும் முயற்சியில் அனுகூலம் உண்டு. வேழமுகத்தான் வழிபாடு ஞாலம் போற்றும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**பணத் தேவையைப் பூர்த்தி செய்யும்நாட்கள்:**

**ஒகஸ்ட்:** 19, 20, 29, 30, 31

**செப்டெம்பர்:** 3, 4, 5, 10, 11, 12, 16

(தொடரும்)

# புதிய வகை ரம்புட்டான் விரைவில் அறிமுகம்

அனைத்து காலங்களிலும் அறுவடைக்கு கிடைக்கக்கூடிய ரம்புட்டான் வகையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரம்புட்டானுக்கான கேள்வி அதிகரித்துள்ளமையின் காரணமாக இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பழ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சந்தைகளில் காணப்படும் கேள்விகளுக்கு அமைய ரம்புட்டான் அறுவடை இல்லை என தெரியவந்துள்ளது. எனவே, அனைத்து காலங்களிலும் அறுவடைக்கு கிடைக்கக்கூடிய ரம்புட்டான் வகையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு பழ ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பழ ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# தொலைக்காட்சி நிகழ்ச்சி குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணத்தின் தொன்மையான பாரம்பரியக் கலைகளை ஆவணப்படுத்தல் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றுதல் தொடர்பான கலந்துரையாடல் நாளை 22 ஆம் திகதி பி.ப.3 மணிக்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-3)

# 'பண்பாட்டு விழுமியங்கள் காப்போம்' குறும்படப் போட்டி யாழ்ப்பாணத்தில்

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இளையோர் திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக குறும்படப் போட்டியினை நடத்தவுள்ளது.

''பண்பாட்டு விழுமியங்கள் காப்போம்'' எனும் கருப்பொருளில் 10-15 நிமிடங்களை உள்ளடக்கியதான இக்குறும்படத்தை இறுவெட்டு (CD) மூலம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் இல.400, குருசோ வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்திற்கு அனுப்பிவைக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

# குழந்தையை விற்ற இலங்கைப் பெண்ணை நாடு கடத்த உத்தரவு

இலங்கையை சேர்ந்த பெண் ஒருவர் தன் இரட்டை குழந்தைகளில் ஒரு பிள்ளையை விற்பனை செய்ய முயற்சித்த குற்றத்திற்காக ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஷார்ஜா (Sharjah) நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண், குழந்தையை விற்பனை செய்ய முயற்சித்து வருகின்றார் என்ற தகவல் கிடைத்தவுடன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பின்னர் பொலிஸ் அதிகாரி குழந்தையை வாங்குபவர் போல் நடித்து, குறித்த பெண்ணிடம், "ரூபா 2500 டெர்காம் பணம் தருகின்றேன் குழந்தையை தருமாறு" கூறியுள்ளார்.

குறித்த பெண்ணும் பணத்தை வாங்கிக் கொண்டு குழந்தையை பொலிஸாரிடம் கொடுத்துள்ளார், அடுத்த கணமே குறித்த பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் பெண்ணிடம் விசாரணைகள் மேற்கொண்ட போது, திருமணமாகி தான் இந்த இரட்டை குழந்தைகளை பெற்றேன், அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யக்கூட தன்னிடம் பணம் இல்லை, ஒரு குழந்தைக்கு கடுமையான சுகயீனம் அதற்கு மருத்துவ வசதிகள் செய்து கொள்ள தான் குழந்தையை விற்க முயற்சித்தேன் என பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

எனினும் மனித கடத்தல் என்ற குற்றச்சாட்டின் பேரின் குறித்த பெண் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை Sharjah நீதிமன்ற தலைமை நீதவான் Yaqoub Al Hamadi பெண்ணை உடனடியாக நாடு கடத்த நடவடிக்கை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-7-10)



# நல்லூர் ஆலய சூழலில் இன்று

## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத் திருச்சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்துநடத்தும் "தெய்வீகச்சொற்பொழிவு" இன்றும் இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் அ.உமாகரன் "திருப்புகழ்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7மணி முதல் 8மணி வரை நடத்தி வரும் "தெய்வீக இசைச்சங்கமத்தில்" இன்று ஞாயிற்றுக்கிழமை இசைக்கலைமாணி ஸ்ரீமதி. சிந்துஜா ரிஷிகேசர்மாவின் இசை அரங்கம் இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர்கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று ஞாயிற்றுக்கிழமை "மாயோன் மருகன்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ். இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாட்டு- திருமதி. பங்கயற்செல்வி முகுந்தன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்-திருமதி கானகோகிலம் ஜெயம், கெஞ்சிரா-எஸ்.சண்முகசுந்தரம் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறிவிழா இன்றும் பி.ப 3மணி தொடக்கம் மாலை 6மணிவரை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மோட்டார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் பு.ஸ்ரீந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)


## ஆன்மீக அருளுரைகள்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டுயாழ்ப்பாணம்சின்மயாமிஷன்நடத்தும் "ஆன்மீக அருளுரைகள்" (ஞாணயக்ஞம்) எனும் நிகழ்வு நல்லூர் ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இரவு 7.15மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெறும். இந்நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மச் சாரி ஜாக்ரத சைதன்யா "வேள்வி (யக்ஞம்) என்றால் என்ன?" எனும் தலைப்பில் அருளுரை வழங்குவார். (இ-3)

## வில்லிபாரதத்தில் 'அரங்கேற்றம்'

நல்லூர் கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபை முப்பது வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் தெய்வீகத் தொடர் இசைப்பேருரை நல்லூர் ஆதீன குரு மூர்த்த ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெறும். இந் நிகழ்வில் நல்லை குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் வில்லிபாரதம் பற்றிய தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை "அரங்கேற்றம்" பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெறும். (இ-3)

# நல்லூரானுக்கு இன்று 14ஆம் திருவிழா



## நல்லை நகர் முருகா

நல்லை நகர் உறைகின்ற நல்ல தமிழ் முருகா
தொல்லை எல்லாம் நீக்குமெங்கள் தெவிட்டாத குமரா
கல்லையும் கரையவைக்கும் கருணை கொண்ட கந்தா
முல்லை மலர் மணம் கமழ முத்தாக நீ தோன்ற
மெல்லியளாய் வள்ளி தெய்வயானையுடன் கூடி
வல்லவனாய் நீ இருக்க வருத்தம் எமக்கு ஏன் வடிவேலா
சொல்மாலை தொடுத்திங்கு துதித்திடுவோம் உனையே
எல்லையில்லா இன்பமதை எமக்களித்தாய் நீயே

சி.சுபாங்கி

## எழுந்தருள்வாய் நல்லையுறையே

செந்தமிழின் சந்தமது தந்து வளர் யாழ் நகரில்
நிந்து நிதம் சிந்தும் நிறையே
நொந்த மன சிந்தனையில் பந்தமுடன் வந்தவரை
சொந்தமென காக்கும் பிறையே
தந்தமொடு வந்த பெரு விந்தையருள் ஐங்கரனின்
சிந்துகவித் தம்பியிறையே
எந்தனது சிந்தனையில் நிந்தனைகள் போக்கிடவே
எழுந்தருள்வாய் நல்லையுறையே

எம்.என்.பால-கண்ணதாசன் கவிஞன், பப்ளிகேசன் வவுனியா

## துயர் தீர்ப்பாய் நல்லைக்குமரனே

நல்லூரில் வீற்றிருக்கும் கதிர் வேலவனே
நாமிலமும் போற்றுகின்ற ஞான பண்டிதர்
பக்தரெல்லாம் உமைத் தொடுவோம் சக்திவேலா
பாவிகளின் துயர் தீர்ப்பாய் பால முருகனே
நித்தமும் எம்மிடங்களில் சோக கீதம்
நின் பார்வையாலே நீக்கிடய்யா பார்வதி மைந்தா
சங்கடங்கள் தீர்த்து வைப்பாய் சரவணபவனே
சந்நிதியின்கால் பதித்தோம் துன்பம் மறந்தோம்
வள்ளி தெய்வயானையுடன் வண்ண மயிலில்
உன் பவனி கண்டு மெய்மறந்தேன் கந்தவேளே
ஆறுமுக வேலவனே அழகு தெய்வமே
அடியவரின் துயர் தீர்ப்பாய் நல்லைக்குமரனே

சி.கஜா, முரசுமோட்டை

## வரம் அளித்திடப்பா

வள்ளி தெய்வயானையுடன் புள்ளிமயில் வாகனத்தில்
வெள்ளி ரதம் மீதேறி வெளி வீதியுலா வருகையிலே
அள்ளியணைக்கத் தோன்றுதய்யா–முருகா
அள்ளியணைக்கத் தோன்றுதய்யா
பள்ளம் நோக்கியோடும் வெள்ளமாய்
உள்ளம் உனை நோக்கி உருகுதய்யா–முருகா
உள்ளம் உனை நோக்கி உருகுதய்யா

விஜியகண்ணன், யாழ்ப்பாணம்

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

போனதிசை தெரியாது போகுமுன் னடியார்கள்
புலம்பல்தான் கேட்கவிலையோ
ஆனதென வொன்றுமே யாகாது விழிக்கின்ற
அவலநிலை காணவிலையோ
தானெனவே நீவந்து தலையிட்டு நிற்காமல்
தழைக்குமோ வெங்கள்நிலையே
நானிங்கு வருகிறே னெனச்சொல்லி வருவாயே
நல்லூரின் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்

# மருத்துவப் பரிசோதனைகளை தைரியத்துடன் எதிர்கொள்ளுங்கள்

## முன்னாள் போராளிகளுக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் அழைப்பு

(பனிக்கன்குளம்)

**முன்னாள் போராளிகள் மனம் தளராது மன தைரியத்துடன் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுள்ள மருத்துவ பரிசோதனைகளை எதிர்கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.**




முல்லைத்தீவு மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு கட்டடத்தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு நிலையங்களில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் ஊசி போடப்பட்டிருக்கலாம் ஆனால் தற்போது குறித்த ஊசி விஷ ஊசியாக இருக்கலாமா? என சந்தேகம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அவர்களை நம்பி அவர்களின் குடும்பங்கள் காணப்படுகின்றன, அவர்களுக்கு எந்த விதமான வேலைவாய்ப்பும் இல்லை. கடின உழைப்பின் மத்தியில் வாழ்ந்து வரும் அவர்களுக்கு இவ்வாறான செய்திகள் அவர்களை மன தளவில் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

அன்று போராளிகளாக இருந்தவர்கள் பின்னர் சிறைக் கைதிகளாக மாற்றப்பட்டனர், அவர்கள் உயிருடன் மீண்டு வருவோமா என்ற அச்சத்துடன் காத்திருந்தவர்கள் இன்று உயிருடன் வந்திருக்கின்றார்கள்.

முன்னாள் போராளிகள் உயிரிழந்திருந்தால் அவர்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு அறிவித்துள்ளதாகவும், அவர்கள் எந்த வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள் எனவும் அவர்களின் மருத்துவ அறிக்கைகளை ஆராய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐந்து மாவட்டங்களிலும் உள்ள முக்கிய வைத்தியசாலைகளில் முன்னாள் போராளிகளுக்கு அடிப்படை பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்திருப்பதாகவும் அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தினால் தமிழ் நடைமுறைப்படுத்தல் போட்டி- 2016

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம் எங்கும் எதிலும் தமிழை வளர்க்க வேண்டும் என்ற வேட்கையின் விளைவாக அரச பணிமனைகளில் தமிழைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் நடைமுறைப்படுத்தல் போட்டியை கடந்த பல ஆண்டுகளாக நடத்தி வருகின்றது.

இது தொடர்பாக அரச அலுவலர்களோடும் கலந்துரையாடியும் உள்ளது.


கடந்த காலங்களில் நடத்தப்பெற்ற போட்டிகளில் கண்டாவளைப் பிரதேச செயலகம் இரண்டு முறை முதலாம் இடத்தையும் கடந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகத்தினர் ஒருமுறை முதலாம் இடத்தையும் ஏனைய பணிமனைகள் இரண்டாம், மூன்றாம் இடத்தையும் பெற்று பரிசில்களைப் பெற்றுள்ளன.

தமிழைப் பயன்படுத்துவதில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அந்தவகையில் 2015-2016 ஆம் ஆண்டுக்கான போட்டியை இந்த ஆண்டு இறுதியில் நடத்த எண்ணியிருப்பதால் கோப்புகள், பதிவேடுகள், ஆவணங்கள் என்பவற்றின் பெயர்களில் தமிழை முழுமையாகப் பயன்படுத்தி மொழியுரிமையை நிலைநாட்டுமாறு தமிழ்ச்சங்கத்தின் பெருந் தலைவர் வே.இறைபிள்ளை அறிவித்துள்ளார்.(2)








மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கால்நடைகளுக்கான நடமாடும் கால்நடை வைத்திய சேவையின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக்காலை நானாட்டான் மோட்டைக்கடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் கால்நடைகளின் நலனை கருத்தில் கொண்டு நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் தெரிவு செய்யப்பட்ட கால்நடை பண்ணையாளர்களுக்கு கால்நடைகளுக்கு தேவையான பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் வடக்கு மாகாண கால்நடை மற்றும் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்,வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், அமைச்சின் அதிகாரிகள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- பொ.சோபிகா,சோலைநகர் செய்தியாளர்கள்)

# டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்

டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது. வவுனியா ஏ-9 வீதியின் சோயா வீதிக்கு அருகே நேற்று அதிகாலை 12.20 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஏ-9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் அதேவழியில் முன்னால் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2)

# விபத்துக்குள்ளானது டிப்பர்




(திருவையாறு)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி அதே வழியாகப்பயணித்த டிப்பர் வாகனமொன்று மோதியதில் சாரதி படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஏ-9 வீதியிலுள்ள ஸ்ரீலங்கா ரெலிகொம்மிற்கு முன்பாக நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,மேற்படி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் அவ் வழியாக பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் மோதித்தள்ளியதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.சம்பவ இடத்திற்குவிரைந்த கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (2-273)

# தமிழர் தாயக அபகரிப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை நடை பவனி

## நீதிக்கான போராட்டத்திற்கு பொது அமைப்புக்கள் ஆதரவு

(பனிக்கன்குளம்)

தமிழர் தாயகத்தைச் சிங்கள பௌத்த மயமாக்கும் நோக்குடன்இராணுவப்பலத்துடன்இடம்பெற்று வரும்தமிழர் தாயக அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு சர்வதேச நீதியை வலியுறுத்தியும் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி ஐ.நா. செயலகம் வரை இடம்பெறவுள்ள நீதிக்கான போராட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்கிக் கலந்துகொள்ளவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டப் பொதுஅமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மகிந்த ராஜபக்ஷவினால் தமிழ் மக்கள் மீது இரக்கமற்ற முறையில் நடத்தப்பட்ட இன அழிப்பு யுத்தத்திற்கு நீதி கோரியும் தமிழர்கள் நம்பி ஆதரித்த தற்போதைய நல்லாட்சிக்கான அரசு தமிழர் தாயகப் பகுதிகளில் பௌத்த விஹாரைகளை அமைத்தும் புத்தர் சிலைகளை நிறுவியும் தாயகப் பிரதேசங்களை பௌத்த சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகளை எதிர்த்தும் தமிழர்களின் உரிமையை வலியுறுத்தியும் நாளை திங்கட்கிழமை ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி ஐ.நா. செயலகம் வரை இடம்பெறவுள்ள நீதிக்கான நடை பயணத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்கி அதில் பங்காளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டப் பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவ பலத்துடன் பௌத்த விஹாரைகளை அமைத்தும் புத்தர் சிலைகளை நிறுவியும் தமிழர் தாயகப் பகுதிகளை பௌத்த சிங்கள மயமாக்கும் நோக்குடன் இடம்பெற்று வரும் அராஜகங்களைக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்து சர்வதேச நீதியை வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்டக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசமும் பொது அமைப்புக்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி ஐ.நா. செயலகம் வரையான நீதிக்கான நடை பயணத்திற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தனது பூரண ஆதரவை வழங்கி அதில் கலந்துகொள்ளவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டச் செயலகமான அறிவகத்தில் இடம்பெற்ற இது தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நாளை மறுதினம் இடம்பெறவுள்ள சர்வதேச நீதியை வலியுறுத்தும் நீதிக்கான நடை பயணத்திற்குத் தாம் பூரண ஆதரவை வழங்கிக் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கை பரப்புச் செயலாளர் அ.வேழமாலிகிதன், கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் க.ஜெயக்குமார் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் பேரவை, கிளிநொச்சி இஸ்லாமிய அமைப்புக்கள் சார்பாக மௌலவி, கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர் சங்கம், கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர் சங்கம், பரந்தன் வர்த்தகர் சங்கம், கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கம், கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனம், இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம், கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்கம், கிளிநொச்சி மாவட்ட நன்னீர் மீன்பிடியாளர் சங்கம், கிளிநொச்சி மாவட்ட தனியார் கல்வி நிலையங்களின் சங்கம் போன்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் தெரிவித்திருந்ததுடன் தமது பூரண ஆதரவை வழங்கி நீதிக்கான நடை பயணத்தில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (2-281)

நாடுகள் நடந்து கொள்வதைப்போல தனிப்பட்ட மக்கள் நடந்து கொண்டால் மக்கள் அனைவருக்கும் கைதி உடை தரப்பட்டிருக்கும் – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நிலத்தை ஆக்கிரமிக்கும் அடையாளமா மதத்தலங்கள்?

இலங்கையில் இன விவகாரத்துக்குத் தீர்வு காணவேண்டும் என்பது ஒருபுறம்; நாட்டை அபிவிருத்தி நிலைக்கு கொண்டு செல்லுதல் என்பது மறுபுறமாக இலங்கையின் எதிர்கால பயணம் இருக்க வேண்டும்.

சுருங்கக்கூறின் சகல இனங்களுக்கும் சம உரிமை என்பதும் நாட்டின் அபிவிருத்தி என்பதும் சமாந்திர பாதையில் பயணிக்க வேண்டியது கட்டாயமாக உள்ளது. இருந்தும் இதுபற்றி எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

மாறாக இலங்கை பௌத்த சிங்கள நாடு. இது ஒன்றே இந்த நாட்டிற்குப் போதும் என்பது போல பெரும்பான்மையினர் நடந்து கொள்கின்றனர்.

இலங்கையை பௌத்த சிங்கள நாடு என்று சொல்வதன் மூலம் இலங்கையின் அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்தும் தானாக வந்து கிடைக்கும் என்பது போல நிலைமையுள்ளது.

இதற்காக இலங்கையின் அனைத்துப் பாகத்திலும் பௌத்த விகாரைகளை அமைத்து விடுவதில் அதீத கவனம் செலுத்தப்படுகிறது.

குறிப்பாக தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகளை அமைத்து விட்டால் இங்கும் சிங்களவர்கள் வாழ்ந்தவர்கள் என வரலாற்றை மாற்றி எழுதலாம் என்பது அவர்களின் நோக்காக உள்ளது.

தமிழர் வாழ்விடங்களில் புத்த விகாரைகளை அமைத்து விட்டு சில வருடங்கள் கடந்து போக இந்த விகாரைகளை மகிந்த தேரர் அமைத்தார், தேவநம்பியதீசன் கட்டுவித்தான் என்று கதைவிடலாம் என்பதுதான் நோக்கமாகும்.

பொதுவில் மதத்தலங்கள் வழிபாட்டுக்கும் தான தர்மத்துக்குமான இடங்களாகவே முன்பு கருதப்பட்டது.

ஆனால் இன்று மதத்தலங்கள் வழிபடுவோரின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன.

நிலைமை இதுவாக இருந்த போதிலும் பௌத்த விகாரைகளை தமிழர் தாயகத்தில் அமைப்பதன் மூலம் சிங்கள மக்களின் வாழ்விடங்கள் தமிழர் வாழும் பகுதிகளிலும் இருந்தது என்பதை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டதாகும்.

உலகம் முழுவதிலும் கடன் கேட்டு, கையேந்தி நிற்கக்கூடிய ஒரு நாடு; தனது பொருளாதார முன்னேற்றம், அபிவிருத்தி என்பன குறித்துச் சிந்திக்காமல் பௌத்த விகாரைகளை கட்டுவிப்பதிலேயே காலத்தை வீணாக்கினால் எதிர்காலத்தில் இலங்கை மக்கள் மனிதரைப் பிடித்து உண்ணும் நிலைமைக்குத் தள்ளப்படுவர்.

பௌத்த விகாரைகளை அமைத்த நிலங்களையும் அப்பகுதிகளையும் பௌத்த பிரதேசமாக அடையாளப்படுத்தும் நிகழ்ச்சி நிரலில் வேறு சில மதங்களும் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

இவ்வாறு மத வழிபாட்டுத் தலங்களை எங்கும் அமைத்துவிட்டு என்னதான் செய்யப் போகிறீர்கள் என்று கேட்பதற்கு இந்த நாட்டில் எவருமில்லை என்றாயிற்று.

பௌத்த மதம் மட்டுமன்றி பிறநாட்டில் இருந்து நம்நாட்டிற்குள் உள்நுழையும் சில அமைப்புகளும் மத மாற்றம் செய்வதையும் அதற்காக மதத்தலங்களை நிறுவுவதையும் காண முடிகின்றது.

இப்படியே நிலைமை சென்றால் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் மத அடையாளங்கள் குவிந்து நெருக்கடியாகக் காணப்படும் என்பதுடன், மக்கள் வறுமையில் வாழுகின்ற கொடுமையும் நடக்கும் என்பது திண்ணம்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வடக்கிலிருந்து 19,791 பேர் தோற்றுகின்றனர்

## வடக்கு கல்வி அமைச்சின் செயலர் வாழ்த்து

2016 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை நாடெங்கிலும் நடைபெறவுள்ள நிலையில் வடமாகாணத்திலிருந்து 19 ஆயிரத்து 791 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இன்றைய தினம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அன்புமிகு மாணவர் செல்வங்களே குழந்தைப் பருவத்தில் பசுமரத்தாணி போன்று கற்கின்ற கல்வியிலே முதன் முதலாக பொதுப்பரீட்சை ஒன்றிற்கு தோற்றுவதற்கு ஆயத்தமாகி உங்கள் திறமைகளை வெளிப்படுத்த தயாராகியுள்ளீர்கள். இந்நேரத்தில் உங்களின் இலட்சியத்தில் உறுதியுடன் நடைபயின்று பரீட்சையில் சிறப்பான சித்திகளைப் பெற்று உங்களுடைய பெற்றோருக்கும் கல்வியறிவு புகட்டிய ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் மற்றும் எமது மாகாணத்திற்கும் பெருமை சேர்த்து கல்வி உலகில் புகழ் பூத்து நிற்க எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பரீட்சைக்கு வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் வலயத்தில் 3 ஆயிரத்து 263 பேரும் வலிகாமம் வலயத்தில் 2 ஆயிரத்து 759 பேரும் வடமராட்சி வலயத்தில் ஆயிரத்து 831 பேரும் தென்மராட்சி வலயத்தில் 987 பேரும் தீவகம் வலயத்தில் 737 பேரும் கிளிநொச்சி வலயத்தில் 2 ஆயிரத்து 547 பேரும் மன்னார் வலயத்தில் ஆயிரத்து 793 பேரும் மடு வலயத்தில் 474 பேரும் வவுனியா வடக்கு வலயத்தில் 632 பேரும் வவுனியா தெற்கு வலயத்தில் 2 ஆயிரத்து 369 பேரும் முல்லைத்தீவு வலயத்தில் ஆயிரத்து 667 பேரும் துணுக்காய் வலயத்தில் 732 பேரும் தோற்றவுள்ளனர். (இ-7)

# நல்லூர்க்கந்தனுக்கு



## நல்லூரைக் கும்பிடு

இராகம்: ஜோகினி தாளம்:ஆதி

**பல்லவி**

நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு– அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

**அனுபல்லவி**

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்தநாடு
தேங்கா யுடன்பழம் கொண்டுநீ செல்லு (நல்லூ)

**சரணம்**

வாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும்– குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும்– செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடி ஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டுநீ
கண்ட கண்டஇடம் கலங்கிநீ திரியாதே (நல்லூ)

சிவத்திரு யோகர்சுவாமிகள்

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் தேசிய இரண்டாம் மொழிக் கல்வி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணியளவில்யாழ்.ரிம்மர் மண்டபத்தில் இடம்பெறும். பயிற்சி இணைப்பாளர் கே. நமசிவாயம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள்துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை, சிறப்பு விருந்தினராக அதுரலிய ரத்ன தேரரின் செயலாளர் பாலித விக்ரம்ரத்ன, கௌரவ விருந்தினராக கனடா புலம்பெயர் மக்களுக்கான சமூக ஆர்வலர் சிவா சின்னத்தம்பி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மருத்துவ முகாம்

கிளிநொச்சி நகர ரொட்ரிக் கழகமும் கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை வட்டக்கச்சி சில்வா வீதி அறிவொளி கலைக்கல்லூரியில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

இதன்போது கண் பரிசோதனை மேற் கொண்டு கண்ணாடி வழங்கப்படவுள்ளதுடன் தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள் மருந்துகள் என்பன வழங்கப்படவுள்ளது இந்த மருத்துவ முகாமில் யாழ் போதனா வைத தியசாலை மருத்துவர்களும் கிளிநொச்சி வைத்தியசாலை மருத்துவர்களும் இணைந்து பரிசோதனைகளை மேற்கொள் ளவுள்ளனர். பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (2-9)

# எம் வழியை நாமே தேர்ந்து கொள்வோம்



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இன்று நமக்குத்தரப்படும் பைபிள் பகுதியினபடி ,யேசு எருசலேம் நோக்கிப் பயணம் செய்கிறார். அப்போது ஒருவர் “மீட்புப் பெறுவோர் . சிலர் மட்டும்தானா? என்று இயேசுவிடம் கேட்டார்". அதற்கு இயேசு அவர்களிடம் கூறியது,

இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள். இறையாட்சியின் போது கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமிருந்து மக்கள் வந்து பந்தியில் அமர்வார்கள். ஆம், கடைசியானோர் முதன்மையாவர் முதன்மையானோர் கடைசியாவர். என இயேசு கூறுகின்றார்.

இந்த எருசலேம் நகர் பற்றி கூறுவதாயின், எருசலேம் அரண் சூழ்ந்த ஒரு நகர். சுற்றுச் சுவர்கள், காவல் மாடங்கள் நிறைந்த நகர். அது அரசரின் நகர். ஏரோதின் அரண்மனை, பிலாத்துவின் அரண்மனை, தலைமைக்குருக்களிள் அரண்மனைகள் எல்லா இங்குதான் இருந்தன. இவை அனைத்திற்கும் மேலாக, பேரரசரின் நகர் இது. இறைவனின் ஆலயமே அவ்வரண்மனையும் அங்குண்டு. எருசலேம் நகருக்குள் நுழைவதாயினும், எருசலேம் தேவாலயத்துள் நுழைவதாயினும் அவ்வளவு எளிதானதல்ல. பல சிரமங்கள் துன்பங்கள் அடைந்தே நுழைய முடியும். இடுக்கான வாயில்கள், சில நுழைவாயில்களில் மிகக குனிந்தும் தவழ்ந்தும் செல்ல வேண்டும். எருசலேம் தேவாலயத்துள் நுழைவதும் அவ்வளவு எளிதல்ல.

மீட்புப் பெறுவோர் சிலர் மட்டும்தானா? இந்த கேள்வியை இயேசுவிடத்திலே கேட்டவர் நிச்சயம் யூதர்களுக்கு மட்டும்தான் மீட்பு உண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் கேட்டிருக்க வேண்டும். புறவினத்தார் அனைவரும் கடவுளின் மீட்புத்திட்டத்திலிருந்து வெளியே அனுப்பப்படுவர் என்ற அடிப்படையில் இந்த கேள்வி கேட்கப்படுகிறது. ஆனால், இயேசுவின் பதில் அவர் எதிர்பார்க்காத ஒன்றாக இருக்கிறது. அவருக்கு அதிர்ச்சியைத் தருவதாக இருக்கிறது.

## பரமபிதா காட்டிய பாதை

சிரமம் நிறைந்த அன்றாட அனுபவத்தையே விண்ணகத்தில் நுழைய “இடுக்கமான வாயில வழியாக நுழைய வருந்தி முயலுங்கள்” என்கிறார் இயேசு. நாங்கள் உம்மோடு உண்டோம், குடித்தோம் என்பதெல் லாம் இங்கு உதவாதவை. தன்னுடைய சிலுவையை நாள்தோறும் சுமந்து இயேசுவைப் பின் செல்பவனும், எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து இயேசுவைப் பின் செல்பவனும், பசியாய் இருந்தவனுக்கு உண் ணக் கொடுத்தவனும், தாகத்தைத் தணித்தவனும், அன்னியனை ஏற்றுக்கொண்டவனும், இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுபவர்களே.

இடுக்கமான வழியென்றால் என்னவென்று தெரியாமல் இன்று பலர் தங்களுக்கு விருப்பமான வழியிலேயே சென்று கொண்டு, அதையே இடுக்கமான வழி என்று எண்ணுகின்றார்கள். இந்த வழியாகச் போகவேண்டுமானால் ஆரம்பத்திலேயே இவர்கள் விரும்பும் அநேக பொருள்களை வெளியே விட்டுவிட்டு தனியாகத்தான் இந்த வழியில் நுழைய முடியும். அவ்வித வழியில் ஒருவர் ஒருவராகத்தான் நுழைய முடியும். மூட்டை முடிச்சுகளை எடுத்துச் செல்ல முடியாதபடி வழி குறுகலாக இருக்கும். நம்மோடு கூட பலவற்றை எடுத்துச்செல்ல முடியாது. ஒரு கூட்டமாகச் செல்ல முடியாது. எமது பழக்க வழக்கங்களை விட்டுவிட வேண்டியிருக்கும். ஒரு அபூர்வமான மனிதனாக மாற வேண்டியிருக்கும். சிலருடைய தோழமையை விட்டுவிட வேண்டியிருக்கும். பலர் ஒரு வித்தியாசமும், தனிப்பட்டதுமான மனிதனாக எண்ண நேரிடும். இதைவிட எமக்கு அருகாமையிலேயே ஒரு சௌகரியமான அகண்ட பாதையில் கிறிஸ்தவர்கள் என்ற பேரிலேயே பலர் போய்க்கொண்டிருப்பதை காணலாம். இடுக்கமான வழியாகப்போக தீர்மானம் செய்தவர்களுக்கு இந்த நிலையை தவிர்க்க முடியாது.

இறைவனுடனான உடனிருப்பு, தியாக அன்பு, சுயகையளிப்பு ஆகியன இங்கு முக்கியமனவை. துன்பத்தில் இருக்கும் மனிதனின் துயர் துடைத்து, விரக்தியில் வாழ் வோருக்கு ஆறுதல் அளித்து, பிறர் கண்ணீர் துடைத்து அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவதன் மூலம் தான் இடுக்கமான வாயில் வழியாக நுழைவது என்பதாகும என நாம் தற்காலத்தில் கருதலாம். நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொணடேன் என்று பவுலடியார் பைபிளில் தன்னை குறித்து சொன்ன அந்த வார்த்தைகளை நம்மால்சொல்ல இயல வேண்டும் இடுக்கமான வாயிலில் நுழைந்து இயேசுவுக்காகத் துன்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். வழியை நாம்தான் தேர்ந்து கொள்ள வேண்டும்.

# கச்சாய் வொலிகிங்ஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் 5 ஆம் ஆண்டு நிறைவு கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## இளவாலை மத்தி, புத்தூர் வளர்மதி சம்பியன்










கச்சாய் வொலிகிங்ஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் A பிரிவினருக்கான போட்டியில் இளவாலை மத்தி விளையாட்டுக்கழகமும் B பிரிவினருக்கான போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகமும் சம்பியன் ஆகின.

அண்மையில் நடைபெற்ற A பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் இளவாலை மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் இளவாலை மத்தி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

B பிரிவினருக்காக நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஆவரங்கால் மத்தி B விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 3:1 (25:21, 16:25 , 25:15, 25;22) என்ற சுற்று அடிப்படையில் கிண்ணத்தை கைப்பற்றியது. (கு)

## குரும்பகட்டி உதயசூரியன் வி.க நடத்தும் நண்பர்களின் கிரிக்கெட் போர் இன்று


குரும்பைகட்டி உதயசூரியன் வி.க


மாலுசந்தி மைக்கல் வி.கழகம்

வடமராட்சி குரும்பகட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிமை பி.ப. 3 மணியளவில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நிகழ்வின் தலைவர் சத்தியேந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டிகளில் 5 பந்துப் பரிமாற்றம் கொண்ட போட்டியில் இணுவில் கலையொளி அணியை எதிர்த்து கொக்குவில்பொற்பதி அணி மோதவுள்ளது.

10 ஓவர் 11 பேர் கொண்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை வல்வை அணி மோதவுள்ளது.

அத்துடன் நீண்டகாலமாக நட்பு என்ற வார்த்தைக்கு மறு உருவமாக திகழ்ந்து வரும் குரும்பகட்டி உதயசூரியன் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதும் நண்பர்களின் போர் என்று அழைக்கப்படும் போட்டியும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக வட மாகாண சபை உறுப் பினர் ச. சுகிர்தன் கலந்து கொள்ளவுள்ளார். (கு)

## உடுத்துறை செந்தமிழ் வெற்றி

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் வடமாகாணம் மற்றும் வடமராட்சி கிழக்கு ரீதியாக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

நேற்று முன்தினம் 4 மணிக்கு உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வெள்ளி நிலா விளையாட்டுக்கழகம் மோதவிருந்தது. இப்போட்டியில் வெள்ளி நிலா விளையாட்டுக்கழகம் வருகை தராததினால் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்திற்கு வெற்றி வழங்கப்பட்டது. (கு)



## யாழ். மத்திய கல்லூரிக்கு நவீன பந்து வீசும் உபகரணம்

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



யாழ். மத்திய கல்லூரிக்கு நவீன பந்து வீசும் உபகரணம் இலங்கை கிரிக்கெட் சபையினரால் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இந்த நவீன பந்து வீசும் உபகரணம் மூலம் தற்போது துடுப்பாட்ட பயிற்சி வழங்கப்படுகிறது.

வடமாகான கிரிக்கெட்டினை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை கிரிக்கெட் சபையினரால் இப்பந்து வீசும் உபகரணம் வழங்கப்பட்டதாக தெரிய வருகிறது. (கு)

## ஆனைக்கோட்டை ஜூனியனை வீழ்த்தியது இணுவில் கலையொளி B வி.கழகம்



மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்றுத்தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அண்மையில் நடைபெற்றன. இதில் நடைபெற்ற குழு B இற்கான போட்டியில் இணுவில் கலையொளி B விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை ஜூனியன் விளையாட்டுக்கழகம் மோதியது. நாணய சுழற்சியில் வென்ற ஆனைக்கோட்டை ஜூனியன் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலையொளி B வி.க நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து பரிமாற்ற முடிவில் 3 இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை ஜூனியன் வி.க.5.5 பந்துப் பரிமாற்ற நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 26 ஓட்டங்களை மாத்திரம் பெற இணுவில் கலையொளி B 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இணுவில் கலையொளி B வி.க. சார்பில் துடுப்பாட்டத்தில் 4 சிக்சர்களுடன் 30 ஓட்டங்களையும் பந்து வீச்சில் 3 இலக்குகளையும் பெற்ற பிரதீஸ் ஆட்டநாயகனாக தெரிவானார். (கு)

## அரச வருமானம்...

வித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் திணைக்களம் மற்றும் சுங்க திணைக்களம் ஆகியவற்றின் வருமான நிலையினை ஆராய்ந்ததன் அடிப்படையில் கடந்த வருடத்தை விட வருமானம் அதிகரித்துள்ளது.

குறித்த மூன்று திணைக்களங்களின் மூலம் குறித்த ஏழு மாத காலப்பகுதியில் கடந்த வருடம் 6 இலட்சத்து 25 ஆயிரத்து 867 மில்லியன் ரூபாயாக இருந்த வருமானம் கடந்த ஏழு மாதங்களில் 7 இலட்சத்து 69 ஆயிரத்து 752 மில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

இதன்படி கடந்த வருடத்தை விட ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 885 மில்லியன் ரூபாயால் வருமானம் அதிகரித்துள்ளதென அவர் சுட்டிக்காட்டினார். (11)

## சு.கட்சி மாநாடு...

எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், இந்த மாநாட்டை புறக்கணிக்கும் வகையிலேயே அவரது வெளிநாட்டு பயண நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகாக்களும் சுதந்திரக் கட்சியின் மாநாட்டைப் புறக்கணிக்கவுள்ளனர்.

புலம்பெயர் சிங்களவர்களின் அழைப்பின் பேரிலேயே மகிந்த ராஜபக்ஷ இத்தாலி செல்லவுள்ளார் எனத் தெரியவருகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது மாநாட்டில் பங்கேற்குமாறு அதன் ஆலோசகர் பதவியை வகிக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பை ஏற்ற அவர், நாட்டில் இருந்தால் நிச்சயம் வருவார் எனக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)

## முதலீட்டாளர் மா...

எனினும், தாம் இந்த மாநாடு தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் அறிவித்துள்ளதாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

தாம் அவரை இந்த நிகழ்வுக்கு அழைத்தபோது அதற்கு அவர் மறுப்பு வெளியிடவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

2016ஆம் ஆண்டின் வடமாகாண முதலீட்டாளர் மாநாடு நாளை 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பலர் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

## இலங்கை பொரு...

தது என்பதை அவர்களின் உறவுகளும் நண்பர்களும் கண்டறியும் உரிமை கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (11)

## அமைச்சு செயல...

அமர்வு கடந்த பதினைந்தாம் திகதி கைதடியில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஒரேயொரு விடயமாக முதலமைச்சரது பிரேரணையே எடுத்துக்கொள்ளப்பட்டது. அமைச்சர்கள் நால்வர் மீதும் விசாரணை மேற்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்த குழுவிற்கு நிதிப்பிரமாணங்கள் உட்பட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என கோருவதாக அந்த பிரேரணை அமைந்திருந்தது.

எனினும் இந்த பிரேரணைக்கு உறுப்பினர்களில் பெரும்பாலானோர் கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். இதில் ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது கருத்துக்களை பதிவு செய்தனர். இதன்போது ஒருசில உறுப்பினர்கள் குறித்த விசாரணையை வெளியாட்கள் நடத்த முடியாது எனவும், அவ்வாறு நடத்தப்பட்டால் உறுப்பினர்களது சுயகௌரவம் பாதிக்கப்படும் எனவும்,

மற்றும் சிலர் இந்த விசாரணையை மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கி தெரிவுக்குழு அமைத்து விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும், இன்னும் சில உறுப்பினர்கள் முதலமைச்சரே இந்த விசாரணையை மேற்கொள்ள முடியும் எனவும், ஒருசிலர் முதலமைச்சர் தனது பிரேரணையை மீளப்பெற வேண்டும் எனவும் தமது விவாதங்களை மேற்கொண்டனர்.

அமைச்சர்கள் மீது விசாரணை மேற்கொள்வதற்கு எந்த உறுப்பினரும் எதிர்ப்பு தெரிவிக்காத போதிலும் நடைபெறும் விசாரணையை யார் மேற்கொள்வது என்றுதான் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன.

பிரேரணையை நிறைவேற்றுவதில் கடும் இழுபறிகள் காணப்பட்ட நிலையில், முதலமைச்சர் தனது பிரேரணையை அவைக்கு கோருவதாக என மாற்றி அமைத்து பிரேரணையை நிறைவேற்றினர். இதற்கு சகலரும் ஆதரவு அளித்தனர்.

இந்த நிலையில் அமைச்சர்களின் செயலாளர்கள் மீதும் ஊழல் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற பிரேரணை சபையின் அடுத்த அமர்வில் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த பிரேரணைக்கு ஒரு பகுதியினர் ஆதரவு தெரிவித்துள்ள போதிலும், அமைச்சர் ஒருவர் உட்பட சில மாகாண சபை உறுப்பினர்கள் இந்த பிரேரணை கொண்டுவரப்பட கூடாது என்பதில் விடாப்பிடியாக நிற்பதாகவும், அதற்கு உறுப்பினர்களின் ஆதரவுகளை திரட்டி வருவதாகவும் அறிய முடிகின்றது. (4)

## சுன்னாகம் பகுதியில் கத்திக்குத்து இளைஞர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்கு பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இளைஞன் மீது மேற்கொள்ளப்பட்ட கத்திகுத்து சம்பவம் தொடர்பில், அதே பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை நேற்று காலை கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கத்திக்குத்து சம்பவத்தில் காயமடைந்த எஸ்.திலீபன் (வயது 24) என்ற இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 18 ஆம் திகதி இரவு மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் ஒன்று சுன்னாகம் தெற்கு பகுதியில் வைத்து மேற்படி இளைஞன் மீது கத்தியால் குத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அதே பகுதியினை சேர்ந்த இளைஞனை கைது செய்ததுடன், குத்துவதற்கு பயன்படுத்திய கத்தியினையும் மீட்டுள்ளனர். இரு இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பகையே இக் கத்திக்குத்துக்கு காரணம் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட குறித்த இளைஞரிடம் குறித்த வாள்வெட்டு சம்பவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி மோட்டார் சைக்கிளில் வந்த ஏனைய இளைஞர் குழுக்களையும் தாம் தேடிவருவதாகவும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

## எதிர்க்கட்சித் தலை...

வரும் பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன மேலும் குறிப்பிடுகையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி எமக்கு கிடைக்கவேண்டும். கடந்த ஒருவருட காலமாக இதனை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனரல் எமக்கு அந்தப் பதவியை கொடுக்க விருப்பம் இன்மையினால் தவிர்த்து வருகின்றனர்.கடந்த ஒருவருட காலமாக நாங்கள் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து எதிர்க்கட்சியாக செயற்பட்டு வருகின்றோம். அரசாங்கத்தின்செயற்பாடுகளை எதிர்த்து வந்துள்ளோம்.

தற்போது பிரதான எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தரப்பினருக்கு 22 ஆசனங்களே உள்ளன. ஆனால் பாராளுமன்றத்தில் கூட்டு எதிரணிக்கு 51 ஆசனங்கள் உள்ளன. எனவே யாருக்கு பலம் அதிகம் என்பதனை புரிந்து கொள்ளலாம்.

இந்த விடயத்தில் சபாநாயகர் விரைவில் தீர்மானம் எடுக்கவேண்டும். நாங்கள் எதிர்க்கட்சி என்ற ரீதியில் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

எனவே இனியும் தாமதிக்காமல் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டு எதிரணிக்கு தந்துவிடுங்கள். இது தொடர்பில் சபாநாயகருடன் பேச்சு நடத்தி விட்டோம்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நாங்களே உரித்தானவர்கள். அந்தப் பதவி எமக்கு வழங்கப்படவேண்டும் என்றார் அவர். (11)

## நல்லாட்சியில்...

கூறுவதற்கு தாம் பொய்யனும் அல்ல ஏமாற்று பேர்வழியும் அல்ல.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அத்துடன் நல்லாட்சியை உருவாக்குவதற்காக பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளதாக தெரிவித்த அவர் நல்லாட்சியின் மூலம் நாட்டில் அமைதி, மகிழ்ச்சி நிலவி வருவதாகவும் இனவாதம், மதவாதம் மற்றும் அரச பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் நல்லாட்சி ஊடாக தமிழ் மக்களுக்கு அனைத்து நன்மைகளும் கிடைக்கப்பெறவில்லையெனவும் அதனை பெற்றுக் கொள்ள எதிர்நீச்சலுடன் பயணிப்பதாகவும் தேசிய கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்துடன் நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியை தனித்து போட்டியிடுமாறு சில தரப்பினர் பணம் கொடுத்து பேரம் பேசியதாகவும் அவர் குறிப்பிட்டார். (11)

## மக்களின் எதிர்பார்...

ஒரு வருடக்காலப்பகுதியினுள் சிறந்தவொரு அடித்தளமிடப்பட்டுள்ளது. ஆட்சியை கைப்பற்றிய காலப்பகுதியில் நாட்டு மக்கள் ஜனநாயகத்தையே கோரியிருந்தனர்.

அத்துடன் சட்ட ஒழுங்குகள், நீதியான சமூகம் மற்றும் உரிமைகள் என்பவற்றை நாட்டு மக்கள் கோரியிருந்தனர்.

அதனை ஒருவருட காலப்பகுதியினுள் நிறைவேற்றியுள்ளதாக அமைச்சர் கபீர் ஹாசீம் சுட்டிக்காட்டினார். அரசியலமைப்பை சீர்திருத்தவுள்ளோம்.முக்கிய ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தோம்.

சகலருக்கும் ஒரே விதமான சட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (11)

## மீள்குடியேற்றத்து...

யில் அமைக்கப்படுகின்றன. அவை, எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் நிறைவு பெறவுள்ளன.

இதனைதவிர, நிலமற்ற குடும்பங்களை குடியேற்றுவதற்காக 250 காணித்துண்டுகளை அதிகாரிகள், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை பகுதியில் இனங்கண்டுள்ளனர்.

அங்கு டிசம்பர் மாதத்திற்குள் 482 குடும்பங்களுக்கான வீட்டுத்தேவைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. இதற்கிடையில் காங்கேசன்துறை, பளை, வலிகாமம் வடக்கு மற்றும் தையிட்டி ஆகிய இடங்களில் 450 ஏக்கர் நிலத்தை விடுவிக்க பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

இதன்மூலம் 100 குடும்பங்களின் தேவைகளை பூர்த்திசெய்துக்கொள்ள முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த டிசம்பர் மாதம் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி, ஆறு மாதங்களுக்குள் மீள்குடியேற்றப் பணிகளை முடிப்பதாக உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (11)


மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம்

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபராக இருந்து 20.08.2016 அன்று ஓய்வுபெற்று மணிவிழாக் கண்ட அதிபர் செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம் அவர்களை மனதார பாராட்டுவதுடன் அவர் எல்லா நலனும் பெற வாழ்த்துகின்றோம்.

அதிபர் சங்கம் நல்லூர்க் கோட்டம்

(சி-5511)



கண்ணீர் அஞ்சலி



தம்பித்துரை சரவணபவானந்தன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் -கண்ணன் மாஸ்ரர்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரிய நண்பன் **யோகேஸ்வரன்** அவர்களின் அன்பு மாமனார் **தம்பித்துரை சரவணபவானந்தன்** அவர்கள் சிவபதமடைந்த செய்தி எங்களை மீளாத் துயரில் ஆழ்த்துவதோடு அவரது ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

(சி-5510)

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-5498)

## V2 TRAVELS

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226240

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- வல்வெட்டித்துறை

(C-5482)

## வீடு வளவு விற்பனைக்குண்டு

மீசாலை வடக்கு, வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன், உடன் குடியேறக்கூடிய நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு வீடு வளவு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- நவம் 0776474639
தவம் 0775977210

(C-5491)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## உங்கள் வியாபாரதிற்கு விளம்பரம் தேவையா ?

யாழில் முன்னனி நிறுவனங்களுக்கு விளம்பரம் அமைத்து கொடுத்த பெருமை

உங்களுக்கு தேவையான தொலைக்காட்சி , தியேட்டர் விளம்பரங்களை இந்திய சாயலில் வீடியோசூட் மற்றும் போட்டோ கிராபிக்ஸ் மூலம் செய்து தருகிறோம்

Full HD 1080p

இந்தியாவில் சன்TV விஜய்TV மற்றும் அனைத்து லோக்கல் TV சேனல்களுக்கும் விளம்பரம் அமைத்து கொடுத்த பெருமை

தங்கள் விளம்பரத்தினை டான் TV , DD TV , கார்கில்ஸ் தியேட்டர் ராஜா தியேட்டர் மற்றும் வவுனியா , திருகோணமலை , மட்டகளப்பு ஆகிய இடங்களுக்கு TV மற்றும் தியேட்டர்மூலமாக விளம்பரத்தினை வெளியிட்டு பயனடைவீர்...

4K ULTRA HD

உங்கள் இல்ல சுப விழாக்கள் அனைத்திற்கும் Cinematic முறையில் வீடியோ மற்றும் போட்டோ செய்து தரப்படும்

Parthi ADVERTISING & VIDEOS

NO.316 , K.K.S ROAD , JAFFNA & NELLIADY
MOBILE : 0779058615
facebook PARTHIPAN SIVASUBRAMANIYAM S

(C-5505)

## CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

11th Batch start on 03.09.2016

வேலைவாய்ப்பு உத்தரவாதம் *
(*Conditions apply)

100% தொழில்சார் செயன்முறை பயிற்சிநெறி

2016 A/L மாணவர்களுக்கு 50% Discount

iCS EDUCATION

77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000

(C-5502)

## காணி விற்பனை

பருத்தித்துறை அல்வாய் வடக்கு பகுதியில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-

077 6440 305

(5674)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் பிரதான வீதிகள் முகப்பாக கொண்ட 3 - 4 பரப்புக் காணி / காணியுடன் சேர்ந்த வீடு வாடகைக்கு தேவை

தொடர்புகளுக்கு :- 077 3151 654
077 7696 856

(5654)

## தேவை

பாவனையில் உள்ள 5 அந்தர் மேடைத் தராசு தேவை.

021 222 5392

(A-5504)

## கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவில்

Full / Part time

Diploma in Spoken English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.

BRITISH COLLEGE OF EDUCATION

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 021-4930041
51, Filed Rd, Mannar. Tel : 023-4924124
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. Tel : 081-4949590
13, 1st Chaphel Rd, Colombo-06. Tel : 011-2362775

Hot line : 077-6844016

BRITISH COUNCIL IELTS
Students Registration Centre

(C-5506)

## அறைகள் வாடகைக்குண்டு

அரச உத்தியோகத்தர்கள் கல்விகற்கும் மாணவர்களுக்கு பிறவுண் வீதி. நீராவியடியில் அமைதியான சூழலில் அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு :- 077 990 6867

(5662)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி FRENCH

ஆரம்பம் :- 28.08.2016

உடன் பதிவு செய்யுங்கள்.

☎ 021 222 8093

61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(5636)

## FALC FRENCH LANGUAGE CENTRE "FOR THE BEST FRENCH FOREVER"

## FRENCH CLASSES

பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

விரிவுரையாளர் : MR. V. J. (Trained in France - 2007)

DELF A1, A2, B1 Exam இல் 100 % சித்தியடையலாம்.

இதுவரை 1125 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 03. 09. 16 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 12.09.16 Mon@ 3.30 pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

(C-5509)

## கல்வி நிலைய வேலைவாய்ப்பு

**9 கிளைகளைக் கொண்டு இயங்கி வரும் கல்வி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் கோரப்படுகின்றன.**

- முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் (முன்பள்ளி Diploma முடித்தவர்கள் பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது.
- முன்பள்ளி தமிழ் ஆசிரியர் (முன்பள்ளி Diploma முடித்தவர்கள் பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது)
- முன்பள்ளி மேற்பார்வையாளர் (முன்பள்ளி அனுபவம் உள்ளவர்)
- கணினி நிலைய போதக ஆசிரியர் ( Full Time, Part Time பெண் பிள்ளைகள் மட்டும்.)
- Microsoft Office, Dtp, Tamil&English Typing அனுபவம் உள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது.
- பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் (Full Time, Part Time தரம் -1 தொடக்கம் தரம் - 5 வரை கற்பிக்க கூடியவர்கள்.)
- சிங்கள ஆசிரியர் (Full Time, Part Time)

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு பருத்தித்துறை வீதி புத்தூர், கே.கே.எஸ் றோட் தெல்லிப்பளை, கே.கே.எஸ் றோட் இணுவில், கே.கே.எஸ் றோட் மல்லாகம் போன்ற இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகிறது.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி :- 25.08.2016 வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நடைபெறும்**

நேர்முகத் தேர்வுக்குரிய இடம் : Children's World (Preschool), Little Masters' Montesoori, Institute Of Computer Studies சிவபதி, கே.கே.எஸ் றோட், இணுவில் (இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகாமையில்) நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும் போது தவறாது சுயவிபரக கோவையும் கல்வித்தகைமை சான்றிதழ்களும் கொண்டுவருதல் வேண்டும். (தொடர்புகளுக்கு ;- 0777474741)

(5675)

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை வியாபார நிறுவனங்களில் முன்னணி நிறுவனமான சிறி பேப்பர் மார்டில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியான வர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**✱ களஞ்சியக் காப்பாளர் / Store Keeper**
தகைமைகள்
க.பொ.த (சாதாரண) சித்தி (GCE O/L)

**✱ பெண் விற்பனையாளர் / Sales women**
தகைமைகள்
ஆகக்குறைந்தது க.பொ.த (சாதாரண) சித்தி (GCE O/L) )

**✱ பணம் வசூலிப்பாளர் / Cash Collector**
தகைமைகள்
ஆகக்குறைந்தது க.பொ.த (சாதாரண) சித்தி (GCE O/L)

விண்ணப்ப முடிவு திகதி 28.08.2016
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

756 1/1 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு ;- 021 222 7050
மின்னஞ்சல்: Jaffnavacancies@gmail.com

(5653)

## வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள்....

- மிகக்குறைந்த கட்டணமாக
- UK-1-5Kgக்கு 1Kg கட்டணம் 1000/-
- UK-5-10Kgக்கு 1Kg கட்டணம் 750/-
- UK-11Kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு 550/-
- மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

## வெளிநாடுகளுக்கான தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம்நெற் (PVT) Ltd

271A, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
Hotline:0212227835/0777554528

(5687)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 21.08.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 79







# படம் எடுப்போம் பட்டதை மறப்போம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# அமெரிக்கா அழுத்தம் கொடுக்க நாம் இழந்தது போதாதோ



## வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகின்றனர் பராக்... பராக்...

இலங்கைத் தமிழ் மக்கள் இப்போது ஆய்வுகூடத் தவளைகளாக இருக்கின்றனர். வெளிநாட்டுத் தூதுவர்கள், அமைச்சர்கள், ஆய்வாளர்கள். அவர்கள் தமிழர் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வருகை தந்து தவளைகளை வெட்டிப் பார்த்து ஆய்வு செய்கின்றனர்.

தவளைகளோ! தாம் வெட்டப்படுவதை அறியாமல் வெளிநாட்டுத் தூதுவர்கள், அமைச்சர்களைக் கண்டதும் ஆனந்தமடைகின்றன.

அவர்களைச் சந்திப்பது தான் இந்த மனிதப் பிறவியின் பேறு என்றும் கருதுகின்றன.

இதற்கு மேலாக அவர்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்து விட்டால் அது விலைமதிப்பற்ற கௌரவம் என்று கருதுகின்றனர்.

இந்தத் துரதிர்ஷ்ட நிலையால் தமிழினம் எல்லாவற்றையும் இழந்து கொண்டு போகிறது.

வெளிநாட்டுத் தூதுவர்கள் ஏன் வருகிறார்கள், அவர்களின் நோக்கம் என்ன? என்று யாரும் சிந்திப்பதில்லை. வெளிநாட்டிலிருந்து வெள்ளைத் தோல் அல்லது கடும் கறுத்தத் தோலில் யார் வந்தாலும் அவர்களைச் சந்திப்பதில் எங்கள் அரசியல்வாதிகளுக்கும் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இருக்கின்ற அலாதிப்பிரியம் தமிழினம் இந்த ஜென்மத்தில் மீட்சியடையாது என்ற உண்மையை வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தெட்டத் தெளிவாகக் காட்டி நிற்கும் என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

என்ன செய்வது இந்த உலகில் இன்றுவரை மீட்சி பெற முடியாத இனங்களில் தமிழினமும் ஒன்று. என்பதை நாம் மறந்து விடலாகாது.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமக்கு நேரம் கிடைக்கும் போது வருவார்கள். அவர்களின் வருகையால் எங்களுக்கு எந்த விமோசனமும் இன்றுவரை கிடைக்கவில்லை.

மாறாக அவர்கள் இங்கு வந்து வந்து போய் எங்கள் இனத்தை கருவறுத்ததைத் தவிர வேறு எதனையும் அவர்கள் செய்ததாகவும் வரலாறில்லை,

தங்களைத் தமிழ்ப் பற்றாளர்கள் போல காட்டிக் கொள்ளும் சிலர் பணத்துக்கு விலை போனதன் காரணமாக இங்கிருந்து தகவல்களை வழங்கிக் கொண்டே இருக்கின்றனர். இந்தக் கொடூரம் தான் எங்களின் மண் மீட்புப் போரை நாச மறுத்தது.

இப்போதும் இந்த நிட்டூரம் தொடர்கிறது.

இதன் காரணமாக எங்களின் உரிமை என்ற விடயம் மெல்ல மெல்ல பேசாப் பொருளாக மாறி வருவதைக் காணமுடியும். தனிநாடு கேட்டவர்கள் பின்னர் சமஷ்டி என்றனர்.

அதன் பின் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்றனர்.

இனி ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பர். இன்னும் ஒரு சில வருடங்கள் கடந்தால் தீர்வா? அது எதற்கு என்று கேட்பர்.

அந்த அளவுக்கு எங்கள் நிலைமை தரம் இழந்து, தகுதி இழந்து போவதைக் காணமுடிகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவர் தமிழ்த் தரப்புகளைச் சந்தித்தார். வெவ்வேறு நேர கால அட்டவணையில் நடந்த இச் சந்திப்பில் அமெரிக்கத்தூதுவர் வெவ்வேறு கருத்துக்களை முன்வைத்தார்.



ஒரு கட்டத்தில் நீங்கள் ஜனநாயக வழியில் போராடுங்கள் என்றார். ஜனநாயக வழியில் போராடுங்கள். அப்போதுதான் நாங்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம் என்றார்.

அமெரிக்கத் தூதுவர் கூறியதில் நியாயம் இருக்கலாம். ஆனால் அவரைச் சந்தித்த எங்கள் தரப்பினர் அமெரிக்கத் தூதுவரைப் பார்த்து ஐயா, முள்ளிவாய்க்காலில் எங்கள் உறவுகள் துடிதுடித்துப் பலியாகிப் போனமை இலங்கை அரசுக்கு நீங்கள் அழுத்தம் கொடுக்கப் போதாதா?

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தமிழின அழிப்பு நடந்தமை உங்களின் இறுக்கத்தை இலங்கை அரசு மீது செலுத்தக் காணாதா? என்று கேட்டிருக்க வேண்டுமல்லவா? அவ்வாறு எதனையும் கேட்காதது ஏன்?

இங்குதான் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திப்பதில்லை. மாறாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களைச் சாட்டி பதவிக்கும் பணத்துக்கும் தங்களை அடைமானம் வைக்கக்கூடியவர்களே வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்து வருகின்றனர்.

இதனால்தான் இன்று வரை தமிழர் தாயகத்திற்கு விஜயம் செய்யும் எந்த வெளிநாட்டு பிரதிநிதிகளிடமும் நாங்கள் இறுக்கமான கருத்துக்களை- கோரிக்கைகளை முன்வைப்பதில்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழினத்திற்கு நடந்த பேரிழப்புக்களே ஜெனிவா வரை எங்கள் இன விவகாரத்தை கொண்டு சென்றது.

இதற்கு அமெரிக்கா பெருந்துணையாற்றியது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட பின்னர் மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சி வந்த போது அந்த அரசுக்கு உதவுவதை நோக்காகக் கொண்டு ஜெனிவா தீர்மானத்தில் அமெரிக்கா நெகிழ்வுப் போக்கைக் காட்டியது.

ஆக, அமெரிக்காவைப் பொறுத்தவரை இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானம் என்பது மகிந்த ராஜபக்ஷவுக்கானதே தவிர தமிழ் மக்களுக்கானது அல்ல என்பது நிரூபணமாகிறது.

தமிழர்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என அமெரிக்கா நினைத்திருந்தால், மகிந்தவின் ஆட்சியில் ஜெனிவாத் தீர்மானம் மீது எவ்வளவு உறுதியாக இருந்ததோ அந்தளவு உறுதிப்பாட்டை மைத்திரியின் ஆட்சியிலும் அமெரிக்கா கொண்டிருக்க வேண்டும்.

இதைச் செய்யாமல் விட்டுவிட்டு, நீங்கள் ஜனநாயக வழியில் போராடுங்கள். நாங்கள் அழுத்தம் கொடுப்போம் என அமெரிக்கத் தூதுவர் கூற அதற்கு நம்மவர்கள் ***ஆமாம்*** என்று தலையாட்டினால் எங்களுக்கு எப்போதாவது விமோசனம் கிடைக்குமா? என்பதை தமிழ்மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

விதுரன்

# ஆலடி மாநாடு

## தமிழ் மக்கள் பேரவையால மாபெரும் பேரணி நடக்கும்



பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**பண்டிதர்:** வடக்கு மாகாண சபையில இப்போது முன்னேற்றம் தெரியுது. உறுப்பினர்கள் அமைதியாக இருந்து ஒத்துழைப்பது போல ஒரு காட்சி.

**விதானையார்:** பண்டிதர் எனக்கெண்டால் சந்தேகம் தான்.

அமைச்சர்கள் மீது விசாரணை நடத்த வேணும் என்று உறுப்பினர்கள் சிலர் கேட்டவியள்.

அதற்கென்ன வடக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சர்கள் தொடர்பில ஒய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்டு விசாரணை செய்வம் என்று முதலமைச்சர் அறிவிக்க,

இதென்னது எங்களைப் வெளியார் விசாரிக்கிறதோ, இது முறையோ? தகுமோ? என்று மாகாண சபை உறுப்பினர்கள் வெகுண்டெழுந்திருக்கினம்.

**கங்காணி:** அப்ப ஏனாம் அமைச்சர்கள் தொடர்பில விசாரணை தேவை என்று கேட்டவியள்.

**விதானையார்:** அமைச்சர்கள் மீது விசாரணை நடத்துவதற்கு முதலமைச்சர் ஒருபோதும் முன்வர மாட்டார் என்ற நினைப்பில அப்படி கேட்டினம்.

ஆனால் முதலமைச்சரோ! விசாரணைக்குத் தயார். ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்டு விசாரிப்பம் எண்டு சொல்ல அவங்கள் பிள்ளையள் பயந்து போனாங்கள். ஓய்வுபெற்ற நீதிபதிகளை விசாரிக்க விட்டால் நாளைக்கு உறுப்பினர்களையும் விசாரிக்க வேணும் எண்டு முதலமைச்சர் சொன்னால் எல்லாம் அம்போ என்றாகிப் போகுமல்லோ, அதனாலதான்

இப்ப வெளியாரின் விசாரணை வேண்டாம் என்று உறுப்பினர்கள் சொல்லுகினம் போல.

**சாத்திரியார்:** எங்கட முதலமைச்சருக்கு இப்ப நிலைமை விளங்கிற்றுது.

இனி வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை எப்படிக் கையாள்வது என்று அவருக்குத் தெரியும்.

**மூப்பர்:** எங்கட முதலமைச்சர் கொஞ்சம் இறுக்கினால் போதும் எல்லாம் சரியா வரும், எல்லாருக்கும் உரிய மதிப்புக் கொடுக்க வேணும் என்று அவர் நினைக்க, அதைப் பலவீனமாக உறுப்பினர்கள் நினைத்துப் போட்டினம்.

இப்பவெல்லாம் சரியாகி வருகுது. போகப் போக எல்லாம் சரிப்பட்டு வரும்.

**கங்காணி:** சம்பந்தர் ஐயா நடத்தின கூட்டமொன்றில நியமன எம்.பி. விவகாரம் தொடர்பில் கலகலப்பு ஏற்பட்டதாமல்லோ? அந்த நேரம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவர் ஆவேசமாகக் கதைத்துக் கொண்டிருந்த போது அவற்ற கை பட்டு முன்னால இருந்த ஒலிவாங்கி சம்பந்தர் ஐயாவில போய் விழ, அவர் பதட்டமாய் போனார் என்று சனங்கள் கதைக்கினம்.

**வாத்தியார்:** வயது போன நேரம் பல்லி விழுந்தாலே உடம்பு பதறிப் போற காலத்தில ஒலிவாங்கி வந்து விழுந்தால் அந்தாள் பதறத் தானே செய்வார்.

**பண்டிதர்:** வாத்தியார் சம்பந்தர் ஐயாவின்ர பதட்டம் ஒலிவாங்கி தன்னில வந்து விழுந்ததால ஏற்பட்டதல்ல.

தான் நினைத்த படி நியமன எம்.பிப் பதவியை வழங்க முடியாமல் போய் விடுமோ என்பதுதான் பதட்டத்துக்குக் காரணம்.

**மூப்பர்:** அட, சங்கதி அப்படியோ? ஜனநாயகம் என்று சொல்லிக் கொண்டாலும் சம்பந்தர் ஐயா எடுக்கிற முடிவுதான் கூட்டமைப்பில ஜனநாயகம்.

அந்த ஜனநாயகத்துக்கு முரணாக யாராவது கதைத்தால் அவர் ரென்சனாகிப் போவார் தானே!

**பண்டிதர்:** அதுசரி, அடுத்த மாதமளவில தமிழ் மக்கள் பேரவையின்ர ஏற்பாட்டில ஒரு பெரும் பேரணி நடைபெறவுள்ளதாக அறிந்தன். அது என்ன மாதிரி.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா கட்டாயம் செய்ய வேண்டிய வேலை. போருக்கு பிறகு நாங்கள் ஒதுங்கிப் போனம்.

அந்த ஒதுக்கத்தைப் பயன்படுத்தி பௌத்த மதத்தை வடக்கில விதைச்சு போடுறதில இராணுவத்தினர் உள்ளிட்ட தென் பகுதிப் பேரினவாதம் வலு தீவிரமாகவுள்ளது.

இதற்கு எங்கட எதிர்ப்பைக் காட்டாமல் விட்டால் நாளைக்கு எங்கட சொந்தக் காணிக்குள்ள கொண்டு வந்து புத்த விஹாரைகளைக் கட்டுவினம். அதற்குப் பிறகு நாங்கள் எதுவும் செய்ய முடியாமல் போகும்.

அதனாலதான் சொல்லுறன் கட்டாயம் எங்கட எதிர்ப்பை நாங்கள் காட்ட வேணும்.

**விதானையார்:** அது மட்டுமல்ல வாத்தியார், சிறைகளில வாடுகிற தமிழ் அரசியல் கைதிகளின்ர விடுதலை, எங்கட மக்கள் வாழ்ந்த இடங்களில மீளவும் குடியமர்வதற்கான ஏற்பாடுகள், காணாமற்போனவர்கள் விவகாரம், போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பிலும் சேர்த்து ஒட்டுமொத்த பேரணியை நடத்தினால்தான் சர்வதேச சமுகமும் அரசும் எங்களைத் திரும்பிப் பார்ப்பினம்.

**மூப்பர்:** விதானையார் சொல்லுவ்து முழுக்க முழுக்க சரி. அதேநேரம் தமிழ் மக்கள் பேரவையின்ர ஏற்பாட்டில இந்தப் பேரணி நடத்தப்பட்டாலும் அனைத்து அரசியல் அமைப்புக்கள், பொது நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் என எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்தப் பேரணியை நடத்த வேணும்.

குறைந்தது ஒரு இலட்சம் தமிழ் மக்கள் திரண்டு இந்தப் பேரணியை நடத்தினால் புத்தர் சிலை வைக்கிறது, பொது மக்களின்ர காணிகளை கபளீகரம் செய்வது போன்ற சொறிச் சேட்டைகளைத் தடுக்க முடியும்.

**சாத்திரியார்:** நீங்கள் எல்லாரும் சொல்லுறது சரி, மக்கள் எழுச்சிப் பேரணி நடப்பதை தடுப்பதற்கும் சிலர் கடும் முயற்சி செய்வினம். அதையும் வெற்றிகொண்டு இந்தப் பேரணியை நடத்த வேணும்.

இது விடயத்தில கட்சி பேதம், கருத்துப் பேதம் என்றில்லாமல் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து ஜனநாயக வழியில்- அஹிம்சை முறையில் பேரணியை நடத்தினால் நிச்சயம் ஒரு மாற்றம் ஏற்படும்.

நடப்பது நல்லாட்சி என்றால் தமிழ் மக்களின் அஹிம்சை வழிப் போராட்டத்திற்கு மதிப்பளிக்கத்தானே வேணும்.

**பண்டிதர்:** சாத்திரியார் சொல்லுறது உண்மைதான். சனங்கள் ஊர்வலம் நடத்தட்டும்.

நாங்கள் வேடிக்கை பார்ப்பம் என்ற எங்கட வழமையான நினைப்பை விடுத்து அனைவரும் உணர்வுபூர்வமாக ஒன்றுபட்டு மிகப் பெரியதொரு பேரணியை நடத்தினால்; ஜெனிவாவில நடக்கப்போகிற விடயங்கள், அரசியலமைப்பு மாற்றங்கள் எல்லாவற்றுக்கும் நல்லதாக இருக்கும்.

இப்படிப் பண்டிதர் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து கோயிலுக்கு சென்றனர்.

ஆதித்தன்

# நா.முத்துக்குமாரின் இழப்பால் என் இதயம் கரைகிறது

## நோர்வே கவிஞரின் மடல்



கவிஞர் நா.முத்துக்குமாரின் திடீர் மறைவு ரசிகர்கள் மத்தியில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் நோர்வேயைச் சேர்ந்த கவிஞர் ஒருவர் அவருக்கு இரங்கல் தெரிவித்து மடல் வரைந்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது.

ஏழு வருடங்களாக நோர்வே தமிழ் திரைப்பட விழாவை எனது நண்பர்களுடன் இணைந்து நடத்தி வருகிறேன்.

இந்த ஏழுவருடங்களில் மூன்று முறை **தமிழர் விருதினை** பெற்ற ஒரே கவிஞன் நா.முத்துக்குமார். அவருடைய பெரும் ஆற்றலுக்காகவும் சிறந்த பாடல்களுக்காகவும் இந்த விருதினை வழங்கினோம்!

அனால் பூமிப்பந்தின் உச்சியில் வாழ்கின்ற எமக்கு! உச்சந்தலையில் இடியாய் விழுந்தது நா.முத்துக்குமார் மரணித்த செய்தி.

அறிவுமதி அண்ணன் கவிதைக் காட்டில் பூத்துக் குலுங்கிய புதுக்கவிதை. புதுமைக் கவிஞர்களில் நா.முத்துக்குமார் அண்ணனும் ஒருவர். கவிஞர்கள் வாலி அய்யா, புதுக்கவிதைத் தாத்தா மு.மேத்தா, அண்ணன் அறிவுமதி, கவிஞர் வைரமுத்து, கவிக்கோ அப்துல் ரகுமான் வரிசையில் எந்நேரமும் என் மனதில் நிறைந்தவர் நா.முத்துக்குமார்.

அவருடன் பழகிய நாட்கள் குறைவு. ஆனால் அவர் பாடல்கள் வெளியாகும் போது அவருடன் தொலைபேசியில் பேசிய நாட்கள் நிறைவு.

அவர்பாடலைப்போலவே நெஞ்சை விட்டு அகலாத உணர்வுகளைத் தருகிறது அவரின் நினைவலைகள்.! அவரின் பிரிவு இனம் புரியாத வலியோடு கூடிய எழுச்சியை தருகிறது.

இயந்திர மயமாகிப் போன புலம்பெயர் வாழ்வினில் தொடர் வாசிப்பை இன்னும் நேசிக்க வைக்கிறது. தொடர்ந்து எழுத வேண்டும் என்ற மன உறுதியைக் கொடுக்கிறது.

தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு படைப்பாளி தன்னை எப்படி அற்பணித்தான் என்பதற்கு, இளைய தலைமுறைக்கு நா.முத்துக்குமார் எடுத்துக்காட்டு. தன்னையும் தனது உடலையும் முதலில் பாதுகாக்க வேண்டும் என்பதற்கும் இனி அவரே எடுத்துக்காட்டு.

தாய்மொழியின் மேல் உள்ள அளவு கடந்த காதலால் **கிறுக்கல்** கவிதைகள் போல 1993 இல் எழுத ஆரம்பித்தேன். ஈழத் தமிழர்களின் தொடர்கிற வலியை, சோகத்தை, விடுதலையை, எம் தேசத்திற்கான எழுச்சியை எழுத்து மூலம் பதிவு செய்து, ஆவணப்படுத்த வேண்டிய பொறுப்பு எம் கண்முன்னே விரிந்து கிடக்கிறது.

என் தாய்மொழிப் பயணத்தில் எனது இரண்டாவது கவிதைத் தொகுப்பு **தமிழர் திருநாள்** தைத் திங்கள் 15.2009 இல் வெளியீடு செய்யப்பட்டது. என்னுடைய இந்த நூலுக்கு அணிந்துரை எழுதி, வாழ்த்திய மகாகவிஞன் நா.முத்துக்குமார்! இன்று இல்லை என்பதும்... அவர் இரு பிள்ளைகளை, சகோதரியின் துயரை எண்ணி நெஞ்சு வெடிக்கிறது.

இது போர்க்களமா? இல்லை தீக்குளமா...? விதி மாற்றிடும் வாழ்வு (காதல்) புரியாதே! அவரின் பாடல் வரிகளையே உள்வாங்கி எமது வாழ்வைத் தொடர்ந்து எழுதத் தூண்டுகிறது.

ஒரு பாதி வாழ்க்கைக்குள் இத்தனை உயரம் தொட்ட இளைஞன். மறுபாதி வாழ்க்கை மரணத்தின் மடியிலா? ஒரு பாதி சாதனை. மறுபாதி சோதனையா?!

எம் மண்ணையும் மக்களையும் தமிழீழத்தின் விடுதலையை உண்மையாய் நேசித்த கவிஞன் நா.முத்துக்குமார்.

நா.முத்துக்குமார் இலக்கணம், இலக்கியம், கவிதைகள், கதைகள், பாடல்கள், ஆடல்கள், தேடல்கள் விருதுகள், காவியம் கடந்த நல்ல இதயம்!

அடுத்த தலைமுறையின் பாடல் வரியே!

தமிழ்ப்பாடல் உலகின் தூயதமிழ் முத்து!

அழுகின்ற குழந்தைகளின் அழுகையை நிறுத்திய ஒரே பாடல்!

ஆனந்த யாழை மீட்டிய பறவையே எங்கு இருக்கிறாய்? அழகே அழகே எதுவும் அழகே அன்பின் விழியில் எல்லாம் அழகே நன்மைக்கு சொல்லிடும் பொய்களும்அழகுஉண்மையில் அதுதான் மெய்யாய் அழகு!

உன்பாடல்வரிகள்போல் நாங்கள் கேட்ட செய்தி ஆகாதோ என்ற ஏக்கம்! கவிதையே...எங்கள் பாடலே... கண்ணீர் அஞ்சலிகள் உனக்கு! உன் மரணம்! நம்ப மறுக்குது மனம் மெய்யாய் பெரிய ரணம்!




# தெறி, கபாலி இரண்டுமே இன்னும் விற்கவில்லையா?

## வெளிவந்த தகவல்



விஜய் நடித்த தெறி மாபெரும் வெற்றி பெற்றது. இதேபோல் கபாலியும் இதுவரை வேறு எந்த படங்களும் செய்யாத வசூல் சாதனையை செய்து முடித்தது.

இந்நிலையில் தற்போது வந்த தகவலின்படி இந்த இரண்டு படங்களின் சாட்டிலைட் ரைட்சும் இன்னும் விற்கவே இல்லையாம்.

இரண்டு முன்னணி தொலைக்காட்சிகள் இந்த படத்தின் தொலைக்காட்சி உரிமையை கைப்பற்ற மிகுந்த போட்டியில் உள்ளதாம்.


# விஜய் அன்டனிக்கு அடித்தது யோகம்


விஜய் அன்டனி நடித்தாலே அது தரமான படம் என்று ரசிகர்கள் மத்தியில் ஒரு எண்ணம் வந்து விட்டது.

இவர் நடிப்பில் வந்த பிச்சைக்காரன் வசூல் வேட்டை நடத்திவிட்டது.

அதிலும் ஆந்திரா, தெலுங்கானாவில் ரூ. 20 கோடிகளுக்கு மேல் வசூல் செய்ய, தற்போது இப்படம் பாலிவுட்டிற்கு [illegible] செல்லவிருக்கின்றது.

இதிலும் வி[illegible]அன்டனி நடிக்க, ஹீ[illegible]ாக நடிக்க முன்ன[illegible]ை ஒருவரிடம் பேச்ச[illegible]்தை நடந்து வருகிற[illegible].







# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3.2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



வடிவேலுவின் நகைச்சுவையில் உங்களை மிகக் கவர்ந்தது?

த.தே.கூட்டமைப்பு பற்றி உங்கள் அபிப்பிராயம்? அவர்கள் தற்...

நல்லூர்க் கந்தனிடம் சென்றீர்களா வியா மாமா?

**தாமரை — சாவகச்சேரி**

நல்லூர்க்கந்தனிடம் சென்றீர்களா வியா மாமா?

நல்லூர் வாசலுக்குச் சென்று கந்தனிடம் எம் குறைகளைச் சொல்லும் போதுதான் சைக்கிள் பார்க்கில் மோட்டார் சைக்கிளில் கெல்மெட்டை வைத்துவிட்டுவந்ததும் வரும்போது 500 ரூபாவிற்கு பெற்றோல் அடித்ததும் நினைவுக்கு வருகிறது. அதை இரண்டையும் நீதான் பாதுகாக்கனும் என்ற முறைப்பாடு பலமாகி விடுகிறது.

**அஜந்தன் — முல்லைத்தீவு**

த.தே.கூட்டமைப்பு பற்றி உங்கள் அபிப்பிராயம்? அவர்கள் தற்போது என்ன செய்கிறார்கள்?

அது தானப்பா எனக்கும் புரியவில்லை. ஆனால் அடிக்கடி சம்பந்தன் ஐயாதான் நம்பிக்கையுடன் இருங்கள், நம்பிக்கையுடன் இருங்கள் என சொல்கிறார். யாரை நம்புங்கள் என்று சொல்கிறார் என்பதுதான் இன்னும் புரியவில்லை.

**அம்மு — கிளிநொச்சி**

ஆண் பெண் மீது அதிகம் சந்தேகப்படுவது ஏன்?

ஆண் சந்தேகப்படும்படி பெண் நடந்து கொள்வதால்.

**கவி — மிருசுவில்**

தத்துவம் ஒன்று சொல்லுங்க?

எதிலையும் எடுத்தேம் கவுத்தோம் என இருக்க வேண்டாம். ஏனென்றால் எம்மால் எடுக்கப்படுவது சில நேரத்தில் கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியாய் கூட இருக்கலாம் கவனம்.

**சங்கரசிவன் — வதிரி**

வசுதேவ நாணயக்கார, தினேஸ் குணவர்த்தன, விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்றோர்கள் இருக்கும் வரை தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்குமா?

எனக்கு அரசியல் தெரியாத வயதில் எனது தந்தையார் என்னை மடியில் வைத்து அரசியல் சொல்லித்தந்த காலம் அது. வாசுதேவ நாணயக்கார என்கின்ற ஒரு நேர்மையான தமிழருக்கு தீர்வு வழங்க வேண்டும் என துணிந்து கூறுகின்ற சிங்கள அரசியல் வாதியைப் பற்றி நீ அறிந்து கொள்ள வேண்டும் என்றார்.

ஆனால் இன்று அவரின் போக்கைப் பார்த்தால் யாரோ சூனியம் வைத்து விட்டார்களோ என எண்ணத் தோன்றுகிறது. உங்கள் கேள்வியில் மற்றையவர்கள் பற்றி சொல்ல தேவையில்லையே!

**ஜெயா — கொக்குவில்**

ஆலயங்கள் ஆன்மீகத்தை வளர்க்கும் இடமென்றால் அங்கு ஏன் காசுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்?

ஆலயத்தில் மிக முக்கியமானது "மணி" தானே "மணி" தந்தால்தான் மணி அடிக்கும்.

**தர்சிகா — உடுப்பிட்டி**

தற்கால பெண்களின் பாதுகாப்பு பற்றி?

இரவு பத்துமணிக்கு ஒரு பெண் தனியாக செல்லும் நிலைவரவேண்டும் என பேசிக் கொள்ளும் நாம் ஒவ்வொருவரும் அதே இரவு பத்து மணிக்கு ஒரு பெண் தனிமையில் சென்றால் என்ன பேசுவோம். முதலில் எம் மனநிலையை மாற்றினால் போதும் பெண்ணின் பாதுகாப்பு தானாய் வந்து விடும்.

**கோபு — திடலூர்**

நிச்சயதார்த்தம் செய்த பெண்ணைக் காதலிப்பது தப்பா?

உனக்கு நிச்சயதார்த்தம் செய்த பெண் இன்னொருவனைக் காதலிப்பது சரியென்று பட்டால் தாராளமாகக் காதலிக்கலாம்.

உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்
குறுந்தகவல்
(SMS)
021 567 1532

**அருண் — மானிப்பாய்**

உங்களுக்கு எப்போதாவது சந்தேகம் வந்திருக்கா?

அநேகமா அலுவலகத்திலிருந்து மதியச் சாப்பாட்டிற்கு வீட்டுக்குப்போகாவிட்டால் மனைவி கோல் பண்ணுவாள் "மதியம் சாப்பாட்டுக்கு வருவீர்களா? இல்லை சாப்பாட்டை நாய்க்குப் போட்டிடவா? என்று.

என்சாப்பாட்டைநாய்க்குப்போடுறாளா? இல்லை நாய்க்கு வைக்கிற சாப்பாட்டை எனக்குப் போடுறாளா? என்றுரெம்பநாளா ஒருகண்பியூஸ்.

**கஜன் — நந்தாவில்**

மக்களின் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் பாரிய பேரணியை ஏன் த.தே. கூட்டமைப்பு செய்யவில்லை?

எதையும் செய்யக் கூடாது என்பதற்காகத்தான் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி. இப்போது சொல்லுங்கள் பேரணி செய்யலாமா?

**மயூ — யாழ்ப்பாணம்**

நண்பனை ஆபத்தில் அறியலாம். காதலியை?

உன்னோடு பேசிக் கொண்டிருக்கும் போது அப்பா வருவாரே, அப்போது அறியலாம்.

**சிவா — நல்லூர்**

பெண்கள் ஆண்களை மட்டும் குற்றம் சொல்கிறார்களே?

கணவனில் சந்தேகப்பட்ட மனைவி ஒருத்தி கணவனிடம் வந்து என்னங்க நீங்கள் என்னில் எவ்வளவு அன்பு என்று கேட்கிறாள்?

அதற்கு கணவன் தனது தொலைபேசியை எடுத்து இந்த போன் நான். இதற்குள் இருக்கும் சிம் நீ. எங்களை யாராலும் பிரிக்க முடியாது என்கிறான்.

நம்பிய மனைவி கண்களை துடைத்தபடி செல்ல, அந்தச் சிம்மை கழற்றிவிட்டு தனது சட்டைப்பையில் இருந்த இன்னொரு சிம்மை எடுத்து போனில் மாட்டுகிறான்.

இப்படி ஒரு போனில் பல சிம் மாற்றும் ஆண்கள் இருந்தால் எப்படி எம்மை பெண்கள் நம்புவார்கள்.

**வாசன் — அல்வாய்**

வடிவேலுவின் நகைச்சுவையில் உங்களை மிகக் கவர்ந்தது?

வடிவேலுவின் நகைச்சுவை எதையுமே சரியில்லை என்று கூறிவிட முடியாது. நினைத்தாலே சிரிப்புவரும்.

இருந்தாலும் எம் தமிழ் அரசியல்வாதிகளை நினைவுபடுத்தும் ஒரு நகைச்சுவை அதை மறக்கவே முடியாது.

நான் காமடியாச் சொன்னதையெல்லாம் சீரியசாக எடுத்துக்கிட்டு இன்னும் சின்னப் பிள்ளையாகவே இருக்கிறீங்க ஐயோ... ஐயோ...

**தீபன் — வல்வெட்டி**

நம்பிக்கை என்பது?

பிறந்தவுடன் அம்மாவால் இவர்தான் உன் தந்தை என்பதில் ஆரம்பிக்கிறது.

**வேல்நந்தன் — புலோலி**

எங்குபார்த்தாலும் கற்றவர்களால் தானே பிரச்சினை?

கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு என்பதை ஒன்று இரண்டு மூன்று என்று என்னைப் போற்றிப்பாடு என ஔவையிடம் கேட்ட வேல்நந்தன் உனக்குப் புரியவில்லையே?

# கவிதைக் கலசம்



## மாறி விடுவாய்

ஆடை தனை திருத்திக்கொள்
ஆசை தனை மாற்றிக்கொள்
ஆடவரின் கண்களுக்குள்
அம்பை நீ தைக்காதே
அப்பா அண்ணன் தம்பி
அவர்தம் முன்னாலே
அரைகுறையாய் செல்லாதே
அடுத்தவர் வாய்க்கு நீ
அவல் பொறியாகாதே
சினிமாவின் சித்தரிப்பை
சிறகுகள் வைக்காதே
சீரழிக்கும் சிந்தனையை
சிறகடிக்க எண்ணாதே
உன் மொழியும் செம்மொழியாம்
உலகுக்கே வெண் மொழியாம்
உருண்டையான பூமிக்குள்
உன் செயலை மாற்றிக்கொள்

**இளவரசு**
**ஓட்டுசுட்டான்**

## பே(ர)தை

புன்னகையில் என்னுகையை
பூட்டிவிட்டு சிறைவைப்பாள்
புளித்ததும் புண்படுத்தி
புழுதியில் எறிவாள் பெண்
வெட்டுண்ட இருதயம்
வேதனையில் இரங்கினால்
வேறு யாரையும் பார்
வேலை இருந்தாற் பார்
கட்டுவாள் இருதயத்தை
காதல் எனச் சொல்லிடுவாள்
கட்டுவோம் எனக் கேட்டால்
கணக்கு மீதி என்ன என்பாள்
சுட்டுவிரல் காட்டி
சூ... என்றே கலைத்திடுவாள்
விட்டெறிந்து விடுவதற்கு
விநாடிகூட தாமதியாள்
தாலிகட்டுமுன்னே
தம்பி உன்னிருதயத்தை
வேலிபோட்டுக்கார், அல்லால்
வேதனையில் உட்கார்

**அ.சத்தியசீலன்**

## காவியம் படைத்திடு

சுகமான சுமை தந்தாய் –அன்று
சுகமாய் சிரிக்கின்றேன்– உன்
வதனமுகம் கண்டு
உன் பிஞ்சு விரல் தொட்டு
என்துயரங்கள் பஞ்சாய்
பறக்குது– இன்று
கண்ணே காலம் யாவும்– போற்றிட
ஓர்காவியம் படைத்திடு– இப்
பாரினிலே..!
மதிகெட்ட மானிட உலகினிலே
பக்குவமாய் நீ வாழ்ந்திட
போராடவேண்டும் கண்ணே
அன்புடன் நீ நடந்து அறச்
செயல் புரிந்திடு

**சா.தர்சிகா**
**கொக்குவில் மேற்கு**

## அனுமான் வருவான்

அன்புடன்
இலங்கை வந்து செல்லும்
வெளிநாட்டு தூதுவர்க்கு

இராமாயணத்தில்
அனுமான் தூது போனான்
சீதை மீட்கப்பட்டாள்

அதே இலங்காபுரியில்
எத்தனை தூதுவர்
இன்னும் தமிழர் மீட்கப்படவேயில்லை

ஒன்று தெரியுமா?
ஆரம்பத்தில் உங்கள் வருகைகள்
எங்களை திடமூட்டின

ஆனால் இன்று அதை
தமிழர் கருத்தில் எடுப்பதில்லை
காரணம் என்ன யோசித்தீரா

எத்தனை சாட்சியங்கள்
அத்தனையும் கண்ணீரில்
முளைத்த விதைகள்

எத்தனை கடத்தல்கள்
அத்தனைக்கும்
அன்னையரின் கதறல்கள் பரிசாகின

பார்க்கவில்லையே கேட்கவில்லையே
உங்கள் மனச்சாட்சிகளை
எதுவும் தட்டியெழுப்பவில்லையே!

இனி என் செய்ய
வாருங்கள் செல்லுங்கள்– தமிழனை
மீட்க அனுமான் வராது விடானே?

**மாவை. நா.கஜேந்திரன்**



## என் அன்னை எட்டாவது அதிசயம்

உதிரத்தால் உணவூட்டி
உலகையே எனக்கு அறிவித்தவள்
இன்பத்திலும் துன்பத்திலும்
இணைந்து இருப்பவள்

பாசத்துடன் நற்பண்பை
பாரபட்சமின்றி வழங்கியவள்
ஆன்மீகம் அறப்பணியென
அனைத்தையும் புகட்டியவள்

எளிமையான தோற்றம் கொண்ட
என் அன்னை
ஏட்டிலே பாடப்படவில்லை
இருந்தும் அவள்
எட்டாவது அதிசயமே.

**நி.சிந்துரன்,**
**அளவெட்டி**
**மேற்கு.**

## பெண்மைக்கு பெருமை

பெண்மைக்கு பெருமை சேர்க்க
மேன்மையான தாய்மைக்கு
மென்மையான சேயின் பிரதிமை
சான்றான போதே
தூய்மையான அன்புப் பிரவாகம்
தொடக்கி வைத்துவிட்டது
இன்ப ஊர்வலம்!

**அராலியூர் சோ.சிவகுமாரன்**

# மௌனத்தின் தேடல்– 315

## விம்பங்கள்

ஆலயத் திருவிழா
அடியவர் கூட்டம்
ஆடம்பர ஆர்ப்பரிப்பு
ஐஸ்கிறீம் கடையுள்ளும்...?
ஏழைச் சிறுவனும்
எட்டிப் பார்த்தே
ஏதலிக்கின்றான்!
சுவைப்பதற்கு துட்டின்றி...
மாய விம்பங்கள்!
மறுகரை தொடும்போதோ
கண்ணாடி முன்னின்று
நக்கிச் சுவைக்கின்றான்...
வலிகளின் விம்பங்களோடு..

**மடத்துக்கடவை**
**த. மோகன்ராஜ்**

## உன்போல் தெய்வமில்லை

பொன் போன்ற தாயே
வெள்ளி போன்ற என்னை–நீ
தொட்டதால் என்
வெள்ளி போன்ற மேனி
பொன்னாக மின்னுகின்றது
அதனால் தான்
தாயில் சிறந்த கோவிலும்
இல்லை தந்தை
சொல் மிக்க மந்திரமுமில்லை

**கி.கிஷாந்,**
**சண்டிலிப்பாய்.**

## நாட்டுக்கு தத்துப்பிள்ளை

தாயின் அழகு மேலும்'
மிளிர்வது இப்போது
சேயின் ஸ்பரிசம்
கிடைக்கும்மிப் போதினிலே
சொத்துக்குச் சொத்தாக
கருது மிதையுனக்கு
சொத்தையில்லாமல்
உருவாக்க வேண்டுமெனும் கரிசனை
ஆத்தாள் நீதான்
அதை முத்துப்பிள்ளையாக்கித்
தத்துப்பிள்ளையாய்
கொடுக்கவேண்டுமதை நாட்டுக்கு

**ஸ்கவுட் மாரியப்பா–**

## அன்னைக்கு ஏது ஈடு?

தாயே உன் கருவறையில்
கறை படியாமல்
என்னை உதிரத்தால் ஊறவைத்து
உயிர் ஊட்டிய உத்தமியே
உனக்கு ஏது ஈடு தாயே
இந்த உலகத்தில்
உயிரையே பணயம் வைத்து
ஈன்று எடுத்த தெய்வமே
ஏழேழு ஜென்மம்
போனாலும் நான் செய்யும்
கைமாறு தான் என்ன?

**க.சாருஜன்,**
**ஆனைக்கோட்டை.**

## அம்மா உன் சிரிப்பில்

இப்பிறவியின்றி
எப்பிறவியேனும்
இறைவனைக்
காணமுடியாதம்மா
அம்மா உன்
சொந்தம் மூலம் அன்பையும்
பாசத்தையும் உன்னிடம் பெற்று
கடவுளையே இவ்வுலகில்
காணும்படி செய்துவிட்டாய்!
உன் சிரிப்பில் மகளாய்
நான் என்றும் வாழ
விரும்புகின்றேன் அம்மா!

**ரி.தனுஜா**
**நவாலி வடக்கு,மானிப்பாய்.**

# மௌனத்தின் தேடல் –316



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 24.08.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# வித்தியாசமான கிராமங்கள்

**எத்தனையோ வித்தியாசமான கிராமங்களை நாம் சினிமாவில் பார்த்திருப்போம். அதையும் தாண்டி நிஜத்திலேயே வித்தியாசமான கிராமங்கள் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?**



'மழை'வாழ் கிராமம்:

கின்னஸ் சாதனையின்படி உலகில் மிக அதிகமாக மழை பெய்யும் இடமாக மேகாலயாவில் உள்ள மாசின்ரம் (Mawsynram) கிராமம் இடம் பெற்றுள்ளது. இந்தக் கிராமத்திற்கு 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சோராவை (சிரபுஞ்சிதாங்க) இரண்டாம் இடத்திற்குத் தள்ளி முதலிடம் பிடித்துள்ளது. வங்கதேசத்திலிருந்து வரும் குளிர்ந்த காற்றின் ஈரப்பதம் இங்குள்ள மலைத்தொடர்களில் மோதி மழை ஏற்படுத்துவதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். வருடம் முழுவதும் மழை பொழிவதால், மூங்கில் மற்றும் வாழையிலையைப் பயன்படுத்தி ஆளுயரக் குடையுடன் வலம் வருகின்றனர் இங்குள்ள காசி இனமக்கள். மேலும் மலைகளுக்கிடையே கடக்க இறப்பர் மரங்களின் வேர்களைப் பின்னி இயற்கைப் பாலத்தையும் இவர்கள் ஆங்காங்கே உருவாக்கியுள்ளனர். 'கயல்' ஆனந்தியை இப்பாலங்களில் ஒன்றில் நடக்கவிட்ட புண்ணியம் பிரபு சாலமனுக்கே சேரும்.



கதவுகளே இல்லாத கிராமம்

மகாராஷ்டிராவில் உள்ளது சனி சிங்கனாப்பூர் (Shani Shingnapur) கிராமம். இந்தக் கிராமத்தில் திருட்டு நடந்தால், சனிபகவான் கடுமையாகத் தண்டிப்பார் என்ற நம்பிக்கை காரணமாக, வீடுகளிலிருந்து வங்கிகள் வரை எதற்கும் கதவு கிடையாது. 2011-ம் ஆண்டில் இங்கு தனது கிளையைத் திறந்த யூகோ வங்கி, நாட்டில் முதன்முதலாக கதவுகளின்றி செயற்பட்டு வருகிறது. பாதுகாப்பு முன்னேற்பாட்டிற்காக பணம் மற்றும் நகைகள் மட்டும் தினமும் மாலை லொக்கரில் பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. சமீபத்தில்தான் பெண்களின் நலன் கருதி வீட்டில் திரை பயன்படுத்தவே ஆரம்பித்துள்ளனர் இந்தக் கிராம மக்கள்.



இரண்டு சூரிய கிராமம்

இத்தாலியில் இரண்டு மலைகளுக்கு இடையில் உள்ள பள்ளத்தாக்கில் உள்ளது விகனெல்லா (Viganella) கிராமம். மலையின் உயரம் காரணமாக நவம்பர் முதல் பெப்ரவரி வரை பனிக்காலத்தில் இந்தக் கிராமத்தில் பல நூற்றாண்டுகளாக சூரிய ஒளி விழுவதில்லை. 2006-ம் ஆண்டு இக்கிராமத்தைச் சேர்ந்த இன்ஜினியர் ஒருவரும், டிசைனரும் இணைந்து இதற்கு ஒரு மாற்றைக் கண்டுபிடித்தனர். அருகே இருக்கும் மலை ஒன்றில் சுமார் 1,100 மீற்றர் உயரத்தில் 1.1 தொன் எடைகொண்ட 40 சதுரமீற்றர் அளவிலான கண்ணாடியை ஒரு இலட்சம் யூரோக்கள் செலவில் ஏற்படுத்துவதுதான் அந்த மாற்று. கணனி உதவியுடன் இந்தக் கண்ணாடி சூரியனின் திசைக்கேற்ப, தானே நகர்ந்துகொள்ளும்படி இதை அவர்கள் உருவாக்கினர். சூரியனின் ஒளி இதில் பட்டு பிரதிபலித்து கிராமத்திற்கு வெளிச்சம் தந்தது. 185 குடும்பங்களே இருந்த அந்தக் கிராமத்திற்கு தற்போது இதனால் இரண்டு சூரியன்கள். இத்தாலி சினிமாத் துறையினரின் ஷூட்டிங் ஸ்பொட்டாக இந்தக் கிராமம் தற்போது மாறியுள்ளது.



டிஷ்யூம் கிராமம்

மத்திய சீனாவில் உள்ள தியான்சு மலைப்பகுதியில் உள்ளது 123 குடியிருப்புகள் கொண்ட கங்ஷி டாங்க் (Ganxi Dong) கிராமம். நம்மூர் ரவுடிகள் கத்தி, கடப்பாரையைத் தூக்கிக்கொண்டு இங்கு சென்று தங்களின் வீரத்தைக் காண்பித்தால், அவர்கள் கதி அவ்வளவு தான். காரணம் இந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து மக்களும் குங்ஃபூ உள்ளிட்ட சீனாவின் பழங்காலத் தற்காப்புக் கலைகள் பலவற்றில் கை மற்றும் கால் தேர்ந்தவர்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே அனைவரும் தற்காப்புக்கலை கற்பது இங்கு காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. மலைப்பகுதியில் இந்தக் கிராமம் அமைந்துள்ளதால் வனவிலங்குகளிடமிருந்தும், எதிரிகளிடமிருந்தும் தற்காத்துக் கொள்வதற்காக தற்காப்புக்கலை கற்றுத் தரப்படுவதாகக் கூறப்படுகிறது.



வீதியே இல்லாத கிராமம்

'நெதர்லாந்தின் வெனிஸ்' என்றழைக்கப்படுகிறது ஜிதூர்ன் (Giethoorn) கிராமம். இந்தக் கிராமத்தில் வீதிகளே கிடையாது. கார்கள் அனைத்தும் கிராமத்திற்கு வெளியில்தான் நிற்க வேண்டும். கிராமம் முழுக்க நான்கு கிலோமீற்றர் தூரமுள்ள கால்வாய் ஓடுகிறது. குட்டி குட்டித் தீவுகள் அடங்கிய இந்தக் கிராமத்தில் 180-க்கும் மேற்பட்ட அழகான பாலங்கள் உள்ளன. இவற்றின் வழியாகவும், சிறிய படகுகள் வழியாகவும் மட்டுமே இந்தக் கிராமத்தில் பயணிக்க முடியும். வெனிஸ் நகருக்கு நிகரான அழகுடன் காணப்படுவதால், சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக இது கருதப்படுகிறது. குறிப்பாக சீனாவிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் வரையிலான சுற்றுலாப்பயணிகள் இந்தக் கிராமத்திற்கு விசிட் அடிக்கின்றனர்.

# தங்கம் தங்கம் எல்லாம் தங்கம்


**தங்கத்தில் நகை செய்வாங்க. சிலை செய்வாங்க. ஆனால் இவங்க என்னவெல்லாம் செஞ்சிருக்காங்கனு பாருங்க!**



தங்க மாத்திரை: இதை அமெரிக்காவில் டோபியாஸ் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். இந்த மாத்திரையை வாங்கி வீட்டில் வைத்தால், நினைத்த காரியம் நடக்குமாம். தங்க இலைகளால் தயாரித்து இறுதியில் திரவத் தங்கத்தில் முக்கி பளபளவென செய்திருக்கிறார்கள். 24 கரட் தூய்மையான தங்கம் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நியூயோர்க் அருங்காட்சியகத்தில் இதைக் காட்சிக்காக வைத்திருக்கிறார்கள். ஒரு மாத்திரையின் விலை 425 அமெரிக்க டொலர்கள்.



தங்க முகப்பூச்சு: அதான் பாஸ் பேஷியல். பெண்கள் மஞ்சள் தேய்த்துக் குளிக்கிற காலம் எல்லாம் மலையேறி பேஷியல் பண்றதுதான் இப்போ பஷனா இருக்கு. வழக்கமான கிரீம்களில் பேஷியல் செய்து அலுத்துப் போனவர்களுக்காகவே ஸ்பெஷலாகக் கண்டுபிடிக்கப்பட்டது தான் இந்த கோல்ட் பேஷியல். சாதாரண கிரீமைப்போல முகத்தில் பூசிக்கொண்டு கண்ணை மூடி கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்து முகத்தைக் கழுவினால் தகதகன்னு முகம் மின்னுமாம். ஜப்பானின் பிரபல கொஸ்மெட்டிக் நிறுவனம் இந்தத் தங்க கிரீமை தயாரித்திருக்கிறார்கள்!



தங்கத் தொலைபேசி: நமக்கு தொலைபேசி தான் தெரியும். இது முழுக்க முழுக்கத் தங்கத்தினால் செய்யப்பட் தொலைபேசி . 15 மில்லியன் டொலர் செலவில் இதைத் தயாரித்திருக்கிறார்கள். உலகின் விலை உயர்ந்த தொலைபேசிகளில் இதுவும் ஒன்று. விலை அதிகமான மொபைல் என்றாலே அதை அப்பிள் நிறுவனம் தான் தயாரிக்கும் என்ற விதிப்படி இதையும் அப்பிளே தயாரித்திருக்கிறது.



தங்கக் கழிவறை: இந்தக் கழிவறையின் பீங்கானில் இருந்து தண்ணீர் பிடிக்கிற வாளி, ஏன்... டிஷ்யூ பேப்பர் வரை எல்லாமே தங்கம்தான். உலகிலேயே 24 கரட் சொக்கத்தங்கத்தில் கட்டிய முதல் கழிப்பறை இதுதானாம். ஹொங் கொங் கலைஞர்கள் கைவண்ணத்தில் கலை நயத்தோடு இந்தக் கழிவறை உருவாகியிருக்கிறது. ஒரு நொடி எமது பொது கழிப்பறைகளை நினைத்துப் பாருங்கள் மக்களே.

# தாய் உள்ளம்





வழக்கம் போல் கண்ணன் ரியூசன் முடித்து வீடு திரும்பினான். அவனோ தரம் 5 இல் படிக்கிறான். புலமைப் பரீட் சையும் தோற்றவுள்ளான். அவனது அம்மா கனகாம்பாள். அவனுடைய அப்பா போரின் போது இறந்து விட்டார். இவனும் அம்மாவும்தான். தாய் கூலி வேலை செய்து மகனை படிக்க வைக்க வேண்டும் என்று அவனுக்காக வாழ்கின்றாள்.

கண்ணன் அன்று வழமையை விட நேரம் பிந்தி வந்திருந்தான். கனகாம் பாள் என்னப்பா தம்பி நேரம் பிந்தி வாறாய்.

இல்லம்மா இப்பதான் ரீச்சர் என்னைய விட்டவா. கனகாம்பாள் மிகவும் ஆச்சரியத்துடன் என்னப்பா இப்பதான் ரீச்சர் விட்டவாவா? எல்லோருக்கும் இப்பதான் வகுப்பு முடிஞ்சதா? என்று அம்மாவின் உள்ளத்திலிருந்து வினா எழுப்பப்பட மகன் சோகத்தில் கைகளால் கண்களை கசக்கிய வண்ணம் இல்லம்மா என பதில் சொல்கிறான். தாய் கனகாம்பாள் என்னப்பா பிரச்சினை நீ குழப்படி ஏதாவது செய்தனியா?

இல்லம்மா.

அப்ப என்னப்பா இவ்வளவு நேரம்?

ரீச்சர் படிப்பிச்சாம்மா. மகனும் ஏதோ வாயில் வந்ததை சொல்லி முடிக்கிறான். கனகாம்பாள் பலவாறு யோசிக்கிறாள். இவன் ரியூசனில் கொடுத்த பாடங்களை செய்யவில்லை போல அதனால்தான் ரீச்சர் விட வில்லை என்று தனக்குள்ளே நினைத் தபடி தானாகவே முகத்தில் புன்சிரிப்பை ஏற்படுத்தி பாத்தியா ரீச்சர் உன்மேல் எவ்வளவு அக்கறையா இருக்கிறா என்று அவனும் அம்மா! என்று புன்னகையுடன் தாயின் மடியில் படுத் தான் அப்படியே உறங்கிப் போனான்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் பாடசாலையை முடித்துவிட்டு வழமையாக அவ்ன் செல்வதை விட மிக உற்சாகமாக லேசான புன்சிரிப்புடன் அம்மா நான் இண் டைக்கு நேரத்துக்குப் போகணும் அம்மா. கனகாம்பாள் கொல்லைப்பக்கமாக வந்தவள் பிள்ளை யின் குரலைக் கேட்டு ஓடி வந்தாள். பிள்ளையைப் பார்த்தவுடன் ஆச்சரி யப்பட்டாள். உன் மேல் ரீச்சர் எவ்வளவு அக்கறையாக இருக்குறா என்று சொன் னவுடனே இப்படி உற்சாகப்படுகிறான் என்றால் என பெருமூச்சுடன் தனக் குள்ளே நினைத்து மதியசாப்பாட்டை கொடுக்கிறாள். கண்ணனும் மளமளவென சாப்பிட்டும் சாப்பிடாத போலும் ரியூசனுக்கு கிளம்புகிறான்.

ரியூசனுக்குப் போனவன்தான் வழமையாக நான்கு மணிக்கு வாறவன் இன்று ஐந்துமணி ஆகியும் பிள்ளையைக் காணவில்லை என படலையோரமாக நின்றவள் தனது பிள்ளையுடன் படிக்கும் பக்கத்து வீட்டு கீர்த்தனா வந்து கொண்டிருப்பதைக் கண்டவள் அவள் வந்ததும் அவளிடம் எங்கம்மா கண்ணன் என்றாள்.

அவர் அன்ரி கணக்கு செய்ய குடுத்தது அவர் இன்னும் செய்யவில்லை. அதுதான் இன்னும் விடவில்லை என்றாள். உடனே தாய் கனகாம்பாள் அப்படியே நேர வீதி ஓரமாக நடந்தவள். பிள்ளை படிக்கும் இடத்துக்கு சென்று விட்டாள். அங்கு தனியாக தனது மகன் இருப்பதைக் கண்டு மனமுருகி ரீச்சர் இருக்கும் இடத்துக்குச் சென்றவள் அதற்கு முன்னதாகவே ரீச்சர் மகனைப் பற்றிய கடிதத்தை அம்மாவிடம் கொடுக்க வேண்டும் என்று ஒரு கடிதத்தை எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தையும் வாங்கிக் கொண்டு மகனையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வருகின்றாள். அப்படியே வீதியால் வருகின்ற போது மகன் அம்மாவைப் பார்த்து என்னம்மா இது கையில் வைத்திருப்பது

தாய் கனகாம்பாள் ஏதோ நினைத்தாள் பூனையை புலியாக உருவாக்கியிருப்பதைப் போல் ரீச்சர் உங்களைப்பற்றி கடிதம் எழுதியிருக்கிறா. மகனும் ஆசையாய் என்னைப்பற்றி என்னம்மா எழுதியிருக்கிறா . நீ நல்ல கெட்டிக் காரணாம் இந்த வருடம் கொலசிப் பாஸ் பண்ணுவியாம் .ஆனா நீ இன்னும் நிறையப் படிக்கோணுமாம் என்று சொல்ல கண்ணனுக்கோ பெருமிதமாய் இருக்கிறது. அந்த பிஞ்சு உள்ளம் கொண்ட மனதிலே உற்சாகம் நிறைந்திருந்தது. அந்த நேரம் முதல் அவன் உற்சாகமாக இருக்க அடுத்தநாள் வழமை போல் பாடசாலை முடித்து விட்டு வீடு வந்த கண்ணன் அம்மா அம்மா ரியூசனுக்கு நேரம் போட்டுதம்மா. கெதியாக சாப்பாட்டை போட்டுத்தாம்மா. அம்மாவின் பதில் கண்ணனை ஏமாற்றத்தை உருவாக்கியது. இனி நான் தான் உனக்கு ரீச்சர் மகனும் ஏமாற்றத்துடன் புறுபுறுத்தான்.

நீயாம்மா ஓமப்பா கண்ணா!

அப்ப நான் ரியூசனுக்கு போக தேவையில்லையாம்மா. கனகாம்பாள் மிகுந்த கவலையுடன் ரியூசனுக்குப் போக வேண்டாம் புத்தகத்தை எடு நான்உனக்கு சொல்லித் தருகிறேன். ஒரு வகையில் கண்ணனுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கினாலும் அம்மா எனக்கு சொல்லித்தாறா என்ற சந்தோசம். மறுபக்கத்தில் தாய் பெரிதாக படிக்கவில்லை. பாடசாலையில் சொல்லிக்கொடுக்கப்பட்டதைப் போல் தனது நுண்ணறிவாலும் பிள்ளை மீது கொண்ட நம்பிக்கையாலும் தனக்குத் தெரிந்ததைப் கற்பித்தாள்.

மகனும் உற்சாகத்துடன் வழமையை விட படிக்கத் தொடங்கினான்.

இப்படியே ஒவ்வொருநாளும் பிள்ளையோடு படிப்புக்காக உழைத்தாள். பரீட்சையும் வந்தது இவனும் 5ஆம் ஆண்டு பரீட்சையில் வெற்றி பெற்று தாய்க்கும் தாய் கற்பித்தலுக்கும் நம்பிக்கைக்கும் உற்சாகம் ஊட்டினான். அப்படியே வருடங்கள் உருண்டு போயின. க.பொ.த. சாதாரண தர பரீட்சையும் வந்தது. அதிலும் அவன் நல்ல பெறுபேறுகளைப் பெற்றான். விஞ்ஞானத்துறையை தெரிந்தெடுத்து

## சிறுகதை

க.பொ.த. உயர் தரப் பரீட்சையிலும் மாவட்ட நிலையில் நல்ல பெறு பேறுகளை பெற்று மருத்துவ பீடததுக்குத் தெரிவானான். தாய்க்கு பெரிதும் சந்தோசம் .அதே நேரத்தில் தாய்க்கு வயதும் போய் விட்டது. தீராத நோயான இரத்த அழுத்த நோயும் அவளை வாட் டியது. இவ்வாறு மருத்துவ பீடத்துக்கு தெரிவாகிய கண்ணன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தனது மருத்துவக் கல்வியை பயின்று வந்தான்.

அவனுக்கு பல்கலைக்கழக புலமைப் பரிசுத்தொகையும் வெளிநாட்டவர்களின் உதவியும் பெரிதும் உதவின. தனது விடுமுறை நாட்களிலும் கிளிநொச்சியில் இருக்கும் அம்மாவை பார்க்க வருவான். திடீரென ஒருநாள் அவன் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் போது அதுவும் அவனது இறுதி வருட படிப்பு ஆகும். அவனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அந்த அழைப்பு வந்தவுடன் உடனே விரிவுரையாளருக்கு சொல்லிவிட்டு கிளிநொச்சியை நோக்கிப் புறப்பட்டான். கிளிநொச்சிக்கு வந்ததும் அவனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. தாயின் மரணச் செய்தி அவனுக்கு கேட்டதும் பதறி அடித்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தான். அம்மாவைப் பார்த்தவுடன் மயக்க முற்றான். சிறிது நேரத்தின் பின் எழுந் தவன் தாய்க்கு செய்ய வேண்டிய கிரியை களை செய்தான். அடுத்தநாள் பக்கத்து வீட்டு ஓரிரு பேர் இருந்தார்கள். அவர்களும் போய் விட இவனுக்கு இவனது நண்பர்களும் துணையாக இருந்தார்கள். இவ்வாறு நாட்கள் ஓடின. புடிப்பையும் ஒருமாதிரியாக முடித்து விட்டான். தனது மாவட்டமான கிளி நொச்சி வைத்தியசாலையில் அவ னுக்கு வேலையும் கிடைத்தது.

அத்தோடு அவனது தாய் இறந்த பின்பு தனது வீட்டில் இருப்பதில்லை. நண்பர்கள் வீட்டிலும் உறவினர் வீட்டிலும் இருந்துதான் இவன் மீதிப் படிப்பையும் முடித்தான். இவன் வேலைக்குப் போவதற்காக எழுந்து அம்மாவை வணங்குவதற்காக தனது நண்பரின் வீட்டில் இருந்து புறப்பட்டவன் அம்மாவின் படத்துக்கு மாலை அணிந்து அம்மாவின் ஆசியைப் பெற்ற பின் அம்மா சமைக்கும் சமையலறைக்கு சென் றான். அவனது கண்ணில் ஒரு கடிதம் தென்பட்டது. அதனை எடுத்துப் பார்த்த வுடன் அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாய் இருந்தது. அக் கடிதம் இவன் 5இல் படிக்கும் போது ரியூசன் ரீச்சரால் கொடுக்கப்பட்ட கடிதம் அந்தக் கடிதத்தில் இருக்கும் வசனாங்கள் அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

அந்த கடிதத்தில் உங்களுடைய மகன் ஒழுங்காக படிப்பதில்லை. மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து போவதில்லை என்று வாசிக்கத் தொடங்கினான். அடுத்த வரியும் அவனுக்கு அதிர்ச்சியை ஊட்டியது. இரண்டு மாதமாக ரியூசன் காசும் கட்டவில்லை. காசோடு வந்தால்தான் ரியூசனுக்கும் உள்ளே எடுக்க முடியும். இல்லையேல் வரவேண்டாம் என இத்தனையும் பார்க்கும் போது கண் கலங்கமாய் இருந்தாலும் இந்த விடயங்களை மறைத்து தன்னை மருத்துவனாக்கிய தாயின் உள்ளத்தால் அவன் உற்சாகமாக தனது வாழ்க்கையை தாய்க்காய் அர்ப்பணிக்கிறான்.

நா.நிமல்ராஜ்

# உலகை அதிர வைத்த இராணுவப் புரட்சிகள்!


அகஸ்டோபிளோசெட்

அண்மையில் துருக்கியில் ஜனாதிபதி ஆட்சியைக் கவிழ்க்க இராணுவப் புரட்சி நடந்தது. ஆனால் அதனை எளிதாக முறியடித்த அந்த நாட்டின் ஜனாதிபதி எர்டோகன் தனக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டதாகக் கருதப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரை கைது செய்து சிறையில் அடைத்து தன் நாற்காலியைக் காப்பாற்றிக் கொண்டு விட்டார். இது சமகாலத்தில் சிறிய உதாரணம் தான். வரலாறு நெடுக நடந்த இராணுவப் புரட்சிகள் எண்ணற்றவை. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போமா?


இடி அமீன்

### முதல் புரட்சி

உலகில் தகவல் தெரிந்த முதல் இராணுவப் புரட்சி கி.மு. 875இல் நடந்தது. இதில் இஸ்ரேல் மன்னர் இலாக்கை அவருடைய இராணுவத் தளபதி ஷிம்ரி (Zimri) கொன்று ஆட்சியைக் கைப்பற்றினார். ஆனால் ஒரே வாரம் தான் இவர் தாக்குப் பிடித்தார். ஷிம்ரியை ஓம்ரி என்ற தளபதி தூக்கி எறிந்து விட்டு தன்னை சர்வதிகாரியாக அறிவித்துக்கொண்டு பதவி ஏற்றார். இதனால் மனம் நொந்து போன ஷிம்ரி தன்னுடைய அரண்மனைக்குத் தீ வைத்து விட்டு தற்கொலை செய்து கொண்டார். அண்ணனை நெருங்குடா பார்ப்போம்!

### அகஸ்டோ பினோசெட்

சிலி நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்ற அகஸ்டோ பினோசெட் சர்வாதிகாரியான இவர் 1973இல் புரட்சியின் மூலம் ஆட்சிக்கு வந்தவர். சிலியின் தலைவர் சல்வேடர் அலென்டே அப்போதுதான் பினோசெட்டை அந்த நாட்டின் தலைமைத் தளபதியாக நியமித்தார். பதவி வெறி பிடித்த பினோசெட் அலென்டேயை அமெரிக்க உதவியுடன் பரட்சி நடத்தி பதவி இறக்கிட்டார். அவமானம் தாங்காமல் அலென்டெ தற்கொலைசெய்து கொண்டார். அலென்டேயின் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு மறியல் செய்த போது யோசிக்கவேயில்லை அகஸ்டோ. ஒரே ஆணையின் மூலம் அவர்கள் அனைவரையும் கொன்றொழித்தார்.

பின்னாளில் தான் இதில் அமெரிக்கக் கை இருப்பது அம்பலமானது. அமெரிக்காவின் அன்றைய ஜனாதிபதி நிக்ஸனுக்கும் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வுக்கும் அலென்டேயை பிடிக்கவில்லை. இதனால் அவரை பதவியிலிருந்து விரட்டச் செய்த இரகசிய சதிக்கு அகஸ்டோ பினோசெட் உடந்தை என்பது நாடறிய தெரிய வந்தது. துரோக வரலாறு!

### இடி அமீன்

உகாண்டா ஜனாதிபதி மில்டன் ஒபட்டோவின் நெருங்கிய நண்பரும் முதன்மை இராணுவ ஜெனரலுமான இடி அமீன் இருவருக்குமிடையே மனவேற்றுமை ஏற்பட்டபின் 1971இல் தன்னை இரகசியமாய் கைது செய்ய ஒபட்டோ உத்தரவிட்டுள்ளார் என்பதை அறிந்தார். உடனே ஆக்ரோஷமான இடி அமீன் தன் கட்டுப்பாட்டிலிருந்த படையை பயன்படுத்தி முதலில் விமான நிலையத்தை கைப்பற்றினார். அடுத்து ரேடியோவில் மக்களுடைய மனதின் குரலாய் பேசிய அமீன் புரட்சி பற்றியும் மற்றும் ஜனநாயக அரசு பதவிக்கு வரும்வரை இராணுவ அரசு தன் தலைமையில் நடக்கும் எனவும் தந்திரமாக அறிவித்தார். ஆனால் 7 நாட்களுக்குப்பின் தன் மனதை மாற்றிக் கொண்டு தன்னைத்தானே உகாண்டாவின் புது ஜனாதிபதி என அறிவித்துக் கொண்டார். அடுத்த 8 ஆண்டுகளுக்கு உகாண்டாவின் ஜனாதிபதியாக இருந்து கொடுங்கோல் ஆட்சியை அரங்கேற்றி உலகையே பதற வைத்தது வரலாறு. மெடல் சர்வாதிகாரி!

### மும்மார் அல் கடாஃபி

லிபியாவின் மன்னர் இட்ரீஸ் வெளிநாடு சென்றிருந்த போது 27 வயதான ஜூனியர் இராணுவ அதிகாரி மும்மார் அல் கடாஃபி தந்திரமாக புரட்சி செய்து அரண்மனையை 70 உதவியாளர்களுடன் சூழ்ந்து அங்கிருந்த முக்கியமான மன்னரின் உதவியாளர்களைக் கைது செய்து ஆட்சியையும் கைப்பற்றினார். கத்தியின்றி, இரத்தமின்றி ரொம்ப அலட்டிக்கொள்ளாமல் ஆட்சிக்கு வந்த கடாஃபி அடுத்த 42 ஆண்டுகளுக்கு அசைக்க முடியாத சர்வாதிகாரியாக ஆட்சி செய்தது குறிப்பிடத்தக்கது. சாமர்த்திய புரட்சி!

### நெப்போலியன்

1799ஆம் ஆண்டு நவம்பரில் பிரெஞ்சு தளபதி நெப்போலியன் பொனபார்ட் அப்போது பிரான்ஸை கூட்டாக ஆட்சி செய்த 5 பேர் கொண்ட குழுவை எதிர்த்து பிரசாரத்தை தொடங்கினார். இது நடந்து 4 வருடங்கள் கழித்து 1804 இல் தான் முழு வெற்றி பெற்று பிரான்சின் மன்னராக அரியணையில் அமர்ந்தார் நெப்போலியன்.

கரீபிய நாடுகளில் ஒன்றான ஹெய்டி (haiti) 1804 முதல் 1991 ஆம் ஆண்டுகளுக்குள் 25 தடவை இராணுவப் புரட்சிகளைச் சந்தித்துள்ளது.

1936இல் ஸ்பெயினில் ஜெனரல் பிரான்சிஸ்கோ பிராங்கோ இராணுவப் புரட்சியில் ஈடுபட்டார். இதன்மூலம் ஸ்பெயின் மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே பிடிக்க முடிந்தது. பிறகு புரட்சிப் போராட்டத்தை அடுத்த 3 ஆண்டுகளுக்கு தொடர்ந்து பெரிய அளவில் நடத்திய பிராங்கோ பதவிக்கு வந்தார். 1975இல் இறப்பு நிகழும் வரை அவரே ஸ்பெயினின் சர்வாதிகாரியாக பதவியில் இருந்தார்.

துருக்கியில் இராணுவப் புரட்சி புதிதல்ல! ஏற்கனவே 1913,1960 மற்றும் 1980ஆம் ஆண்டுகளில் இராணுவப் புரட்சிகள் நடத்தப்பட்டு ஆட்சிகள் மாறியுள்ளன. 1980இல் நடந்த இராணுவப் புரட்சிக்கு ஜெனரல் கேனன் எவ்ரென் என்பவர் தலைமை ஏற்று நடத்தினார்.

சர்வாதிகாரிகளுக்கு ஜெயித்தால் சுகம். அதிகாரம்; தோற்றால் அவமானம் என இரண்டில் ஒன்று கிடைக்கும். ஆனால் அந்நாட்டு மக்களுக்கு எது நடந்தாலும் அவர்கள் வாழ்வு முழுக்க துயரமும் வேதனையும் தான் பரிசு!


நெப்போலியன்






தலைவர் ஏன் அந்த நிருபரை கன்னாபின்னான்னு திட்டுறார்?
நீங்க இதுவரை செஞ்சதுலேயே மறக்க முடியாத ஊழல் எதுன்னு கேட்டுட்டாராம்.



ஆபரேஷனுக்கு எல்லாம் ரெடியா இருக்கா...?
எல்லாம் இருக்கு டாக்டர் ஆனா பேஷன்டு தான் இல்லை...!



2016 ஆட்சியைப் பிடிப்போம்...அதுவரைக்கும் நாம பிடிபடாம இருப்போமா தலைவரே...?



உங்க படத்தைப் போட்டா தியேட்டர்ல பெருக்கிற பொம்பளைங்க எக்ஸ்ட்ரா பணம் கேட்கிறாங்க...ஏன்...?
உங்க படம் ஒரே குப்பையா இருக்காம்...?



தூக்கத்துல இவர் நடிகைங்க பேரைச் சொல்லி உளர்றார் ட்ரீட்மெண்ட் குடுங்க டாக்டர்!
இங்கே அட்மிட் பண்ணா நர்சுங்க பேரைச் சொல்லி உளறுவாரு... பரவாயில்லையா?



அந்த கண் டாக்டர் கிட்ட மட்டும் ஏன் இவ்வளவு கூட்டம்...?
நாலு நர்ஸை வரிசையா நிறுத்தி யார் கலரா இருங்காங்கன்னு டெஸ்ட் வைப்பாராம்...?



மும்பையிலிருந்து வந்த அந்த தமிழ்ப்பட கதாநாயகி என் கனவுல வந்தாங்க...?
என்ன சொன்னாங்க?
அவங்க கூட டப்பிங் ஆர்ட்டிஸ்ட் வரல... அதனால என்ன சொன்னான்னு தெரியல!



செவ்வாய் கிரகத்தில் ஒரு காலத்தில் பெரிய பெரிய ஆறுகளில் தண்ணீர் ஓடின. சுவடு இருக்காம்...அங்கே மணலாவது இருக்கா...அள்ளிட்டாங்களா?



உண்மையை பேசணும்... நாலு முறை சம்மன் அனுப்பியும் கோர்ட்டுக்கு ஏன் வரலை?இப்போ சொன்னீங்களே உண்மையை பேசணும்ன்னு...
அதனால தான் யுவர் ஆனர்!



தலைவர் ஏன் தனக்கு வந்த பாராட்டுக் கடிதத்தை பார்த்துட்டு கோபமாகிட்டார்?
யாரோ ஒரு தொண்டர் உத்தமவில்லன்னு அவரைப் புகழ்ந்திருக்காராம்!

என்னய்யா இது... இந்த குற்றப் பத்திரிகையில பக்தி ஸ்பெஷல்னு போட்டிருக்கு? நீங்க கோயில் சொத்தை கொள்ளையடிச்சதை ஒண்ணா தொகுத்திருக்காங்களாம் தலைவரே...?



# உலகின் ஆபத்தான வேலைகள்!

உலகில் வொயிட் காலர் வேலைகள், ப்ளூ காலர் வேலைகள் எனப் பல வேலைகளில் தில்லுக்குத் துட்டு என்பதும் ஒன்று.இந்த திரில் பிளஸ் திகில் வேலைகளை சிலர் மட்டும் தான் துணிந்து ஏற்றுச் செய்வார்கள்.கீழே படிக்கப் போகும் வேலைகளும் அப்படித்தான். கடுகளவு தவறு ஆனாலும் ...ஆகாது என நம்பிப்படி யுங்கள். நம்பிக்கை ...அதுதானே எல்லாம்!

### முதலை மருத்துவர்

சேரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு இதை எழுதுகி றேனே. அதைப் போல



லேசான வேலையல்ல இது !முதலைகளின் இயல்பைத் தெரிந்து கொண்டு அதனைப் பராமரிக்கும் பயங்கர வேலை. இதில் போராடிக்க சான்சே இல்லை.தினசரி வாழ்வா? சாவா? என முதலை துரத்த நீங்கள் ஓடுவதால் எக்ஸ்ட்ரா எனர்ஜியோடு இருப்பீர்கள். முத லைகள் விளையாட் டுத் தனம் கொண் டவை என்பார்கள்.அதோடு அதில் உக்கிர புத்தர்களும் உண்டு என்பதை மனதில் கொள்ளுங்கள். ஒரு ஆண்டிற்கு 41 இலட்சத்து 57 ஆயிரத்து 812 ரூபாய்(இந்திய மதிப்பில்) சம்பளம் தருகிறார்கள். உங்களுக்கு ஒகேவா!

### புயலைத் துரத்துபவர்

அடை மழையில் கணுக்கால் அளவு தண்ணீர் தேங்கி நின்றாலே கண்ணில் மரண பீதி அலையடிக்கிறது ஆட் களுக்கு. புயல் பயம்தான். வேறெ ன்ன? ஆனால் பொழுது போக்காக புயலை விரட்டிச் சென்று ஆராயும் ஏலியன் ஜந்துக்களும் உலகில் உண்டு. புயலில் எப்படி உயிரிழப்பு ஏற்படுகிறதோ.அதே போல் மின்னல் தாக்குதல்களினாலும் துரத்தல் பணியில் இறப்புகள் நிகழ்கின்றன.எத்தனை ஸ்கூட்டிகளை சேஸ் பண்ணுகிறேன். இதெல்லாம் எனக்கு ஜு ஜுப்பி என்றால் நீங்கள்தான் இந்த வேலைக்கான ஆள். ஓராண்டிற்கு 40 இலட்சத்து 57 ஆயிர த்து 785 ரூபாய் (இந்திய மதிப்பில்) சம்பளம் பெறலாம். புயலைத் துரத்த ரெடியா?

### நச்சு சேகரிப்பாளர்

நீங்கள் செய்ய வேண்டியது ஜஸ்ட் பாம்பின் தலையை சின்ன டம்ளரில் அழுத்தி பல்லில் உள்ள விஷத்தை அதில் சேகரித்துக் கொண்டே இருப்பது தான். சொல்லும் போதே திடுக் என நெஞ்சதிர்பவர்கள் இதற்கு லாயக்



கில்லை. தைரியமாக செய்ய வேண்டிய நச்சு சேகரிப்பின் மூலம் பெறும் நச்சுத் திரவம். வாதம், புற்றுநோய்க் கட்டிகள் உட்பட பல நோய்களுக்கான வீரிய மருந்து. முதலில் தினமும் செத்துப் பிழைக்கிற பிழைப்பு. என எண்ணம் மனதில் சரசரவென ஓடினாலும், பாம்பின் பல்லை அழுத்தி வேலை பழகி. செம திரில் வேலை சார் இது என நடுக்கத்தோடு நீங்களே சொல்வீர்கள். பீகேர்புல்லாக செய்ய வேண்டிய வேலைக்கு சம்பளம்(இந்திய மதிப்பில்) 20 இலட்ச த்து 550 ரூபாய்.

### கடல் குகை ஆய்வாளர்

இதுவும் ஸ்கூபா டைவிங் போல கடல் விளையாட்டோடு சேர்ந்ததுதான். கடல் குகைகளை ஆராய் வதுதான் இதில் ஒரே வித்தியாசம் கடலில் மூழ்குவது, அழுத்தம், சிறிய இடத்தில் உலவுவது இதற் கெல்லாம் நீங்கள் தாக்குப் பிடித்தால் ...பிடிங்க சேர். அப்போயின்ட்மென்ட் ஆர்டரை ! வெயில், அலைச்சல் இல்லாமல் குளுகுளுவென கடலில் வேலை ... யாருக்குக் கிடைக்கும் இந்த அதிர்ஷ்டம்! சிலிண்டர் மாட்டியே ஆண்டுக்கு 39 இல ட்சத்து 10 ஆயிரத்து 408 ரூபாயை (இந்திய மதிப்பில்)கசங்காமல் பெறலாம்.

### சுற்றுலா வழிகாட்டி

கௌபாய் ஸ்டைலில் தொப்பி, ஷார்ட்ஸ் துப்பாக்கி சகிதம் காட்டுக்கு வரும் பயணிகளை ஜீப்பில் கூட்டிப் போய் விலங்குக ளுக்கு அறிமுகம் செய்வார்களே. அதே வழிகாட்டி பணிதான், மூர்க்க விலங்குகளை சமாளித்து ஆர்வக் கோளாறு பயணிகளை அனுசரித்துப் போனால் ஆண்டுக்கு 46 இலட்சத்து 67 ஆயிரத்து 950 ரூபாய் (இந்திய மதிப்பில்)பணத்தை பைனாக் குவர். இல்லாமல் கையிலே வைத்து பார்க்கலாம்.



### சண்டை டூப்புகள்

சண்டை டூப்புகள் தான் ஒரிஜினல் என்றாலும் யாரும் நம்பப் போவதில்லை. உடல் மட்டும் தான் இவர்களுடையது. முகம் வயதறியாத நாயகனுடையது



என்பதால் யாரும் இவர்களை பாராட் டப் போவதில்லை. ரிஸ்க் எக்கச்சக்கம் என்றாலும் காசுக்குக் குறைவில்லை. ஹாலிவுட்டில் நட்சத்திர நடிகருக்கு ஏற்ற உடலமைப்பு இருந்தால் போதும். எடுக்கிற ரிஸ்கிற்கு ரஸ்க் என்ன பிரியாணியே சாப்பி டலாம். கரண மடி த்து, அடி உதை வாங்கி மேலே யுள்ளவரின் சம்ப ளத்தைத் தான் இவரும் வாங்குகிறார்.

### காட்டுத்தீ அணைக்கும் வீரர்

வேலை என்னமோ தீ அணைப்பதுதான். ஆனால் காட்டில் விமானத்தில் இருந்து பாரசூட் அணிந்து உயிரைத் துச்சமாகக் கருதி நாட்டின் மிச்சமான காட்டை காப்பாற்ற வேண்டும். கூடுதலாக நாம் உயிரோடு இருக்க



வேண்டும். இரண்டாவது மிகவும் கடினம் என்றாலும் முயற்சிக்கலாம். சம்பளத்தை உங்கள் சார்பாக மனைவி வாங்க வேண்டியிருக் கலாம். திரில் பிளஸ், திகில் இரண்டையும் திகட்ட திகட்ட விரும்பினால் தாராளமாக இப்பணியை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். சாதாரண வேலை களைத் தாண்டி சாதிக்கணும் எனும் கோக்கு மாக்கு மனிதர்களுக்கான பரிந்துரையே மேற் சொன்ன வேலைகள். எனவே ஆண்டுச் சம்பளத்தைப் பார்த்துவிட்டு ஆப ரேஷனில் இறங்கி ஜெயிப்பது உங்கள் சொய்ஸ். இன்சூரன்ஸ் பொலிசியை மறந்துடாதீங்க!



# அடிவாங்கவா இலங்கை வந்தது ஆஸி



இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக, கிரிக்கெட் உலக வரலாற்றில் இப்படியொரு மோசமான டெஸ்ட் தொடர் அமையும் என கனவிலும் நினைத்துப் பார்த்திருக்காது அவுஸ்திரேலியா. அதே சமயம், ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் கூட அவுஸ்திரேலியாவை அசால்ட்டாக வெல்ல முடியும் என கனவு கண்டிருக்காது இலங்கை. “கிரிக்கெட், சில சமயங்களில் கேலிக்கூத்தாக முடிந்துவிடும்” என பலரும் சொல்வார்கள். ஆனால் அவுஸ்திரேலிய - இலங்கை இடையிலான தொடர் கேலிக்கூத்தானது கிடையாது, அவுஸ்திரேலிய அணியின் சாயம் மீண்டும் ஒரு முறை வெளுத்துள்ளது.

1987 ஆம் ஆண்டில் இருந்து 2016 ஜூன் வரையிலான காலகட்டத்தில் இதுவரை அவுஸ்திரேலியாவும் இலங்கையும் 26 டெஸ்ட் போட்டிகளில் நேரடியாக மோதியிருக்கிறார்கள். அதில் இலங்கை வெற்றி பெற்றது வெறும் ஒரு போட்டியில் மட்டும்தான். 11 டெஸ்ட் தொடர்களில் பத்தை வென்றிருந்தது அவுஸ்திரேலிய அணி. 1999 ஆம் ஆண்டு, தட்டுத்தடுமாறி கண்டியில் ஒரே ஒரு டெஸ்ட் போட்டியை வென்றது மட்டும்தான் இலங்கையின் ஒரே சாதனை. ஆனால் இந்த கிரிக்கெட் புள்ளிவிபரங்கள் எல்லாம் இந்த தொடரில் நொறுங்கிப் போனது.

நியூசிலாந்து, பாகிஸ்தான், இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா என அத்தனை அணிகளிடமும் அடி வாங்கிக் கிடந்த இலங்கை அணி, ஒரே நாளில் துள்ளி எழுந்தது. டெஸ்ட் உலக தரவரிசையில் நம்பர் வன் அணியான அவுஸ்திரேலியாவை ஒரேடியாக சாய்த்து வாஷ் அவுட் செய்திருக்கிறது. முரளிதரனும் வாசும் சாதிக்காததை பெரேராவும் ஹெராத்தும் சாதித்திருக்கிறார்கள். சங்கக்காரா, ஜெயசூர்யா, ஜெயவர்த்தனே, அட்டப்பட்டு போன்ற ஸ்டார் துடுப்பாட்டக்காரர்கள் சாதிக்க தவறியதை தனஞ்ய டி சில்வாவும் குஷல் மெண்டிசும் முடித்து காட்டியிருக்கிறார்கள். இலங்கை கிரிக்கெட்டின் வரலாற்றிலேயே மிகச்சிறப்பான வெற்றி இந்த டெஸ்ட் தொடர்தான். அனுபவமற்ற இலங்கையின் இளம்படை, அனுபவம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணியை துரத்தியடித்த சங்கதியை அவுஸ் திரேலியா ஆயுசுக்கும் மறக்காது.

அவுஸ்திரேலியாவின் சரிவு என்பது இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. கடந்த பத்து ஆண்டுகளில் அவுஸ்திரேலிய அணி, ஆசிய மண்ணில் ஒரே ஒரு டெஸ்ட் போட்டியை மட்டுமே வென்றிருக்கிறது. அதுவும் கடந்த ஆறு ஆண்டுகளில், ஒரு டெஸ்ட் போட்டியை கூட ஆசிய மண்ணில் சமநிலையாக்க கூட முடியவில்லை. 2010 - 2011 தொடரில் இந்தியாவிடம் 0-2 என தொடரை இழந்தது, 2012-2013 தொடரில் 0-4 என தொடரை இழந்தது, அதன் பின்னர் 2014 - 2015 அரேபிய மண்ணில் நடந்த தொடரில் பாகிஸ்தானிடம் 0-2 என மீண்டும் தொடரை இழந்தது. தற்போது டெஸ்ட் தரவரிசையில் ஏழாவது இடத்தில் உள்ள இலங்கையிடம், விளையாடிய மூன்று போட்டிகளிலும் தோல்வியை தழுவியிருக்கிறது.

இலங்கையுடன் விளையாடிய ஆறு இன்னிங்ஸ்களில், நான்கு இன்னிங்ஸ்களில் அவுஸ்திரேலியாவால் இருநூறு ஓட்டங்களை கூட அடிக்க முடியவில்லை. ஒரு இன்னிங்ஸில் தட்டுத் தடுமாறி 203 ஓட்டங்களை எடுத்தது. ஷான் மார்ஷ் - ஸ்டீவ் ஸ்மித் புண்ணியத்தில் ஒரே ஒரு இன்னிங்கிஸில் மட்டுமே தப்பிப் பிழைத்து 300 ஓட்டங்களை கடந்தது. அவுஸ்திரேலியாவின் சரிவுக்கு மிக முக்கியமான காரணம், அவுஸ்திரேலியா துடுப்பாட்டக்காரர்களுக்கு சுழற்பந்து பிட்ச்களில் நிலைத்து நின்று விளையாடக்கூடிய திறமையின்மைதான்.

சுழற்பந்து பிட்சுகளை பொறுத்தவரையில் முன் காலை பந்துக்கு ஏற்ப சரியாக நகர்த்த வேண்டியது அவசியம். நல்ல சுழற்பந்து மைதானங்களில் கொஞ்சம் பொறுமையாக நின்று பழகினால், பின்னர் ஓட்டங்களை தாராளமாக குவிக்க முடியும். ஆனால் அவுஸ் திரேலிய கிரிக்கெட் வீரர்களால் களத்தில் நெடுநேரம் நிற்கவே முடியவில்லை. ஒருதினப் போட்டியில் விளையாடுவது போன்ற நினைப்பில் தவறான ஷாட் ஆட முற்பட்டு, தொடர்ந்து எல்.பி முறையில் அவுட் ஆயினர்.

ஆடம் வோக்ஸ் இந்த தொடருக்கு முன்னதாக, தொடர்ந்து சதங்களாக விளாசி 100 இற்கும் அதிகமான சராசரி




வைத்திருந்தார். இந்த தொடரில் ஆறு இன்னிங்ஸ்களில் அவர் எடுத்த ஓட்டம் வெறும் 118 மட்டும்தான். இலங்கையின் பந்துவீச்சாளர் ஹெராத், இவரை விட ஒரு ஓட்டம் அதிகமாக எடுத்திருக்கிறார். அவுஸ்திரேலிய அணிக்கு இந்த தொடரில் கிடைத்த ஒரே பொசிட்டிவ் அம்சம் பந்துவீச்சாளர் ஸ்டார்க்கின் பார்ம்தான். சுழற்பந்துக்கு சாதகமான மண்ணிலேயே, மூன்று டெஸ்ட் போட்டிகளில், 24 விக்கெட்டுகள் வீழ்த்தி பிரமிக்க வைத்திருக்கிறார். சுழல் மண்ணிலும் துடுப்பாட்டத்தில் சிறப்பாக விளையாடக்கூடிய அவுஸ்திரேலிய வீரர்களான பொண்டிங், கிளார்க் ஆகிய துடுப்பாட்டக்காரர்கள் ஓய்வு பெற்ற பிறகு, அத்தகைய திறமையான துடுப்பாட்டக்காரர்களை உருவாக்குவதில் கோட்டை விட்டிருக்கிறது அவுஸ்திரேலிய அணி. சுழல் பிட்ச்களை உருவாக்குவதில் அவுஸ்திரேலிய முனைப்பு காட்டுவதே கிடையாது. இதனால் தற்போதைய அவுஸ்திரேலிய வீரர்கள், சுழல் பிட்ச் என்றாலே அலர்ஜியாகி ஓட்டம் பிடிக்கிறார்கள். ஆனால் ஆசிய மண்ணில் எத்தனை தோல்விகள் கண்டாலும் அவ்வளவு எளிதில் அவுஸ்திரேலியா திருந்தி விடாது. ஏனெனில் எப்போதெல்லாம் சுழல் பிட்ச்களில் தோற்கிறார்களோ அப்போதெல்லாம், “அவை தரமற்ற பிட்ச்கள், கிரிக்கெட் விளையாட தகுதியற்ற பிட்ச்கள்”என்ற விமர்சனத்தையே அவுஸ்திரேலியா முன்வைக்கும். தவறுகளில் இருந்து பாடம் கற்காமல், இந்த நிலை தொடர்ந்தால் அடுத்த ஆண்டு இந்தியாவில் நடக்கும் நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரிலும், வலுவான அடி வாங்குவதற்கு ஆஸி ரெடியாக இருக்க வேண்டியது தான்.

சங்கக்காராவின் ஓய்வுக்கு பிறகு கடந்த ஒரு ஏழெட்டு மாதங்கள் கடுமையான சரிவை சந்தித்து வந்தது இலங்கை. “ஒரே ஒரு வெற்றி கிடைத்தால் எல்லாம் மாறும். நான் கப்டன் பதவியை விட்டு விலக மாட்டேன். அணி சரிவில் இருக்கும்போது ஓடிவிடமாட்டேன்” என ஓபன் ஸ்டேட்மெண்ட் விட்டிருந்தார் மத்யூஸ். இப்போது அவர்தான் இலங்கை அணியில் பெரும் நிம்மதியுடன் வலம் வருகிறார். இந்த எட்டு மாதங்களில் இலங்கை அணியில் பலவித மாற்றங்கள் செய்யப்பட்டு, இப்போதுதான் ஒரு நிலையான அணி உருவாகியிருக்கிறது. இந்த தொடரை வெல்வதில், இலங்கையின் முக்கிய துருப்புச்சீட்டு, மூன்று போட்டிகளில் 28 விக்கெட்டுகள் வீழ்த்திய ரெங்கனா ஹெராத்தான். டெஸ்ட் போட்டியில் கண்டுள்ள அபாரமான எழுச்சியை தொடர்ந்து, ஒருநாள் போட்டியிலும் இலங்கை வீரர்கள் முழு திறமையை வெளிப்படுத்தினால், ஒருதின தொடரிலும் அவுஸ்திரேலியாவின் பாடு திண்டாட்டம்தான்.

இலங்கை, அவுஸ்திரேலியாவை வென்றதில் இந்தியா, டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்துக்கு சென்றுவிட்டது. அவுஸ்திரேலியா முதலிடத்தில் இருந்து மூன்றாமிடத்துக்கு சரிந்திருக்கிறது. இலங்கை ஆறாமிடத்துக்கு முன்னேறியிருக்கிறது ●

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: ரோஜா மலரே ராஜகுமாரி
திரைப்படம்: வீரத் திருமகன்
பாடியவர்: பி.பி. ஸ்ரீநிவாஸ், பி. சுசீலா
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன், டி.கே.ராமமூர்த்தி



ரோஜா மலரே ராஜகுமாரி
ஆசைக் கிளியே அழகிய ராணி
அருகில் வரலாமா ஹோய்
வருவதும் சரிதானா உறவும் முறை தானா?

வாராய் அருகே மன்னவன் நீயே காதல் சமமன்றோ?
வேதம் நிலையன்றோ காதல் நிலையன்றோ?

ஏழையென்றாலும் ராஜகுமாரன்
ராஜாமகளின் காதல் தலைவன்
உண்மை இதுவன்றோ உலகின்
முறையன்றோ என்றும் நிலையன்றோ?

வானத்தின் மீதே பறந்தாலும்
காக்கை கிளியாய் மாறாது
கோட்டையின் மேலே நின்றாலும்
ஏழையின் பெருமை உயராது
ஓடியலைந்து காதலில் கலந்து
நாட்டை இழந்தவர் பலருண்டு


மன்னவன் நாடும் மணிமுடியும் மாளிகை வாழ்வும் தோழியரும்
பஞ்சணை சுகமும் பால் பழமும்
படையும் குடையும் சேவகரும்
ஒன்றாய் இணையும் காதலர்
முன்னே கானல் நீர்போல் மறையாதோ

ரோஜா மலரே ராஜகுமாரி
ஆசைக் கிளியே அழகிய ராணி
அருகில் வரலாமா ஹோய்
வருவதும் சரிதானா உறவும் முறை தானா?

பாடும் பறவைக் கூட்டங்களே
பச்சை ஆடைத் தோட்டங்களே
விண்ணில் தவழும் ராகங்களே
வேகம் போகும் மேகங்களே
ஓர் வழி கண்டோம்
ஒரு மனமானோம் வாழிய பாடல் பாடுங்களே
ஓர் வழி கண்டோம் ஒரு மனமானோம்
வாழிய பாடல் பாடுங்களே

# தத்துவம்ங்கோ!


இந்தப் படங்களை வைத்து கீழே உள்ள தத்துவ முத்துகளைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.




விடைகள்:

1. வாழ்க்கை ஒரு வட்டம்டா. இதில் தோற்கிறவன் ஜெயிப்பான். ஜெயிக்கிறவன் தோற்பான்.
2. வெற்றிக்குப் பின்னாடி போகாதே. உனக்குப் பிடிச்ச தொழிலைத் தேர்ந்தெடுத்து, அதுல திறமையை வளர்த்துக்கோ, வெற்றி உன் பின்னால வரும்.
3. என் வாழ்க்கையில ஒவ்வொரு நாளும்... ஒவ்வொரு நிமிஷமும்... ஏன் ஒவ்வொரு நொடியும்... நானா செதுக்குனதுடா!
4. ஒரு மெல்லிசான கோடு. கோட்டுக்கு அந்தப் பக்கம் நான் நல்லவன். கோட்டுக்கு இந்தப் பக்கம் ரொம்பக் கெட்டவன்.

# முத்தொன்று மண்ணில் வீழ்ந்ததே!



பாமாலை சூட்டிய உன்னை
மஞ்சள்
காமாலை பூட்டியது என்ன?
காஞ்சிபுரம் பிறந்தாய்.
கவிதைபுரம் பிறப்பித்தாய்.
மரணபுரம் சென்றாலும்
ஜனனபுரம் கொண்டாய்.
“மழை மட்டுமா அழகு
சுடும் வெயில்கூட அழகு”
என்றாய்
“வெயிலோடு விளையாடி
வெயிலோடு உறவாடி
வெயிலோடு மல்லுக்கட்டி
ஆட்டம் போட்டோமே..”
என்று நீயெழுத
உன் பாடலோடு நாம்
மல்லுக்கட்டி ஆட்டம்
போட்டோமே.

“உருகுதே.. மறுகுதே...”
“விழிமூடி யோசித்தால்...”
“ஒருதடவை சொல்வாயா..”
திருகவிரி மீண்டும் தருவாயா?
“காவிரி ஆறும்
கைக்குத்தல் அரிசியும்...
மறந்து போனவர்களும்
சிறந்த உன்பாடல்கேட்டு
சிந்தையில் நிறைந்தனரே.
“அருவா மீசை
கொடுவா பார்வை”என
“தூள்” கிளப்பினாயே.
“விழாமலே இருக்க முடியுமா”
விழுந்து விட்டோம்
உந்தன் பாடலில்...
“வெண்மேகம் பெண்ணாக
உருவானது” போல
உன்மேகம் பாடலாக
உருவாகி ஓழியதே.
அண்ணா
முத்துக் குமார்..
மன்னா -கவி
சொத்துக் குமார்.
மரண அறிவித்தல்
உனக்கு
எழுதவில்லை.
மீண்டும் நீ பிறந்தால்
“ஜனன அறிவித்தல்”
என்றேன்.
தமிழ் உள்ளவரை
உனக்கேன்
மரண அறிவித்தல்.

**யோ.புரட்சி,**

## கும்பகோணம்
## திருக்கஞ்சனூர் திருத்தலத்தில் கல் நந்தி புல் தின்ற அதிசயம்



இன்னோர் அதிசயமும் இங்கே நிகழ்ந்திருக்கிறது. தேவ சம்பு என்ற முதியவர் தனது பசுவிற்காக மிகவும் கனமான புல்லுக்கட்டை தலையில் சுமந்தபடி சென்றார். அப்போது நிலை தடுமாறி புல்லுக்கட்டைத் தவறவிட்டார். அது அருகில் நின்ற கன்றின் மீது விழுந்து அழுத்த, அந்தக் கன்று உயிரிழந்தது.கன்றின் உயிரைப் பறித்ததால் ஏற்பட்டபாவம் அகல வேண்டும் என்றால், முதியவர் காசிக்குப் போய் நீராட வேண்டும் என்று சில வேத விற்பன்னர்கள் கூறினர்.

ஆனால் ஹரதத்தரோ, அவ்வாறு நெடுந்தூரம் செல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. நீங்கள் சிவனையே சிந்திக்கும் பக்தியுடையவர்.நடந்தது உங்களை அறியாமல் நடந்த பிழை. அது பாவத்தில் சேராது. வேண்டுமென்றால் அதை சோதித்துப் பார்த்துவிடலாம். அக்னீஸ்வரர் கோவிலுக்குச் சென்று , அங்குள்ள கல் நந்திக்குப் புல் கொடுங்கள்.அது புல்லை ஏற்றுக் கொண்டு தின்றால் உங்களுக்கு தோஷமில்லை என்று கூறினார். இதையடுத்து கஞ்சனூரில் ஓடும் காவிரியில் மூழ்கிய முதியவர், இறைவனையும் இறைவியையும் வழிபட்டுவிட்டு, அவர்களுக்கு எதிரே இருந்த கல் நந்திக்கு புல் கொடுத்தார்.அது தலையைத் திரும்பிப் புல்லை வாங்கித் தின்றது. ஊர் மக்கள் அனைவரும் அதிசயித்துப் போனார்கள். இப்




# தானத்தில் சிறந்தவர்

நீண்ட நாட்களாகவே பாண்டவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது.

அது, நம்முடைய அண்ணன் தர்மரும் தானம் செய்வதில் சிறந்தவர்.

இருப்பினும் கர்ணனையே ஏன் எல்லோரும் தானம் செய்வதில் சிறந்தவன் என்று கூறுகின்றனர் என்பது தான் அது. இவர்கள் மனதில் உள்ள சந்தேகத்தை அறிந்த கிருஷ்ணன் ஒருநாள் பாண்டவர்களை அழைத்தார்.

தங்க மலை, வெள்ளி மலை என இரு மலைகளை உருவாக்கினார். பின் பாண்டவர்களை நோக்கி, "இங்கே பாருங்கள்! இந்த இரு மலைகளையும் பொழுது சாய்வதற்குள் தர்மம் செய்துவிட்டால் தானத்தில் சிறந்தவர் தர்மர் என்று நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன்," என்று கூறினார்.

பீமனும், அர்ஜுனனும் மற்றவர்களும் அந்த இரு மலைகளில் இருந்து தங்கத்தையும், வெள்ளியையும் பாளம் பாளமாக வெட்டி எடுத்துத் தர தர்மர் அதை உடனுக்கு உடன் நகர மக்களுக்குத் தானம் செய்தார். ஆனால், நகர மக்களில் பெரும் பகுதியினருக்கு தானம் செய்தும் தங்கமும் வெள்ளியும் குறையவே இல்லை. அதற்கு மாறாக அவ்விரு மலைகளும் வெட்ட வெட்ட வளர்ந்து கொண்டே இருந்தன.

மாலைப்பொழுது வந்ததும் இனித் தங்களால் முடியாது என்பதை உணர்ந்த தர்மர்,



"எங்களால் முடியாது கண்ணா!" என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டார்.

உடனே கிருஷ்ணன் ஓர் ஆளை அனுப்பி கர்ணனை வரவழைத்தார்.

"கர்ணா! இதோ பார் இந்த இரண்டு மலைகளில் ஒரு மலை தங்க மலை. மற்றொன்று வெள்ளி மலை. இதை நீ பொழுது சாய்வதற்குள் தானம் செய்ய வேண்டும். பொழுது சாய இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே உள்ளது. உன்னால் முடியுமா? யோசித்துச் சொல்," என்று கூறினார்.

உடனே கர்ணன், "இதில் யோசிக்க என்ன இருக்கிறது இப்போதே செய்து காட்டுகிறேன்," என்று கூறி அங்கிருந்த இருவரை அழைத்து, "இதோ பாருங்கள்! நீங்கள் இருவரும் ஆளுக்கொரு மலையாக இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்," என்று கூறித் தனது தர்மத்தை முடித்து விட்டுக் கிளம்பினான்.

பாண்டவர்கள் அசந்து போயினர். அவர்களை ஒரு அர்த்தப் பார்வையுடன் பார்த்து சிரித்தார் கிருஷ்ணன்.

தர்மருக்கும் பரந்த மனசு தான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவரைக் காட்டிலும் தான தர்மம் செய்வதில் பரந்த மனசு உடையவன் கர்ணனே என்பதை சொல்லாமல் பாண்டவர்களுக்கு உணர்த்திவிட்டார் கிருஷ்ணன்.



# மைத்திரி-ரணில் பிரிவு எந்த இடத்தில் சாத்தியம்



அப்போதைய ஐ.தே.க. தலைவர் டி.எஸ்.சேனநாயக்காவுடன் உடன்படிக்கை செய்து கொண்ட எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க பொதுத்தேர்தலில் போட்டியிட்டார். டி.எஸ் சேனநாயக்க வயதில் மூத்தவர். முதலாவது பிரதமராகும் அவரைத் தொடர்ந்து தான் பிரதமர் பதவிக்கு வரலாம் என பண்டாரநாயக்க கருதினார்.

டி.எஸ்.சேனநாயக்கவின் பின்னர் பண்டாரநாயக்க பிரதமராகியிருந்தால் சேனநாயக்கவைத் தொடர்ந்து ஐ.தே.கவின் தலைமைப் பதவியை பண்டாரநாயக்க பெற்றிருப்பார். இது நடந்திருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உருவாகியிருக்காது.

எனினும் நாட்டின் முதலாவது பிரதமராகப் பதவி வகித்த டி.எஸ். தனது மகனான டட்லி சேனநாயக்கவை அடுத்த பிரதமராக்க வேண்டும் எனக் கனவு கண்டிருந்தார். இந்த விடயத்தில் பண்டாரநாயக்கவின் பிரதமர் ஆசையைத் தவிடுபொடியாக்குவதற்கான தனது திட்டத்திற்கு டி.எஸ். சேனநாயக்க. சேர்.ஜோன் கொத்தலாவலவை பயன்படுத்தினார். தனக்கு எதிராக இடம்பெறும் சம்பவங்களை அறிந்து கொண்ட பண்டாரநாயக்க அரசாங்கத்தை விட்டு விலகினார்.

இந்த வரலாற்றுச் சம்பவத்தை 2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்காக ஒன்றிணைந்த மைத்திரி மற்றும் ரணில் ஆகியோரால் அரசியல் யாப்பில் அல்லது அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுத்தேர்தலுடன் ஒப்பீடு செய்து கொள்ள முடியும்.

வெள்ளையர்களிடமிருந்து நாட்டின் ஆட்சியைத் தமது அதிகாரத்திற்குள் கொண்டு வரும் நோக்குடன் 1947இல் இடம்பெற்ற தேர்தலில் சேனநாயக்க மற்றும் பண்டாரநாயக்க ஆகியோர் ஓரணியில் இணைந்து கொண்டனர். இதேபோன்று மகிந்தவிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக 2015 இல் மைத்திரி மற்றும் ரணில் ஆகியோர் ஓரணியில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பைத் தான் பெற்றுக்கொள்வேன் என்று மைத்திரி துளியளவும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி வெற்றி பெற்ற பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகளின் வேண்டுகோளின் அடிப்படையில் மைத்திரி கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை மைத்திரி ஏற்றுக்கொள்ளாவிட்டிருந்தால் அல்லது கட்சியின் அரசியல் யாப்பில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படாதிருந்தால் எந்தவொரு அதிகாரங்களும் இல்லாத ஒரு ஜனாதிபதியாக மைத்திரி விளங்கியிருப்பார்.

அரசியல் யாப்பில் மாற்றங்கள் செய்திருக்காவிட்டால் மைத்திரி தனது பதவிக்காலம் முடியும் போது ஓய்வுபெற வேண்டும். இதன் காரணமாகவே ஜனாதிபதியாகப் பதவியேற்ற அன்றைய நாள் தான் மீண்டும் ஜனாதிபதி பதவிக்காகப் போட்டியிட மாட்டேன் என மைத்திரி தெரிவித்திருந்தார்.

இந்த அறிக்கையைத் தொடர்ந்தே மைத்திரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். தான் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என அண்மையிலும் மைத்திரி அறிவித்திருந்தார்.

அரசியல் யாப்பில் மாற்றங்கள் ஏற்பட்டால், இனிவரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்தல் என்பது இடம்பெற மாட்டாது. பொதுத்தேர்தல் மட்டுமே இடம்பெறும். ஆனால் தான் பொதுத் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என மைத்திரி ஒருபோதும் தெரிவிக்கவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

ஆகவே அடுத்து வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் பதவிக்காக மைத்திரி மற்றும் ரணில் ஆகியோர் போட்டியிடுவார்களா? 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி மற்றும் ரணில் ஆகியோர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளைத் தமக்கிடையே பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்ட போது, அடுத்த பொதுத் தேர்தலை எவ்வாறு முகங்கொடுப்பது என்பது தொடர்பாக இவர்களுக்கிடையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படவில்லை எனின் அது ஆச்சரியமளிக்கக்கூடிய விடயமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது தொடர்பில் மைத்திரி எந்தவொரு எதிர்பார்ப்பையும் கொண்டிருக்கவில்லை எனின், இவ்விரு தலைவர்களும் அரசியல் யாப்பில் மாற்றத்தைக் கொண்டு வருதல் மற்றும் அதிகாரமற்ற ஜனாதிபதிப் பதவியை மைத்திரி ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட பிரதமர் பதவிக்கு ரணிலைத் தெரிவு செய்தல் மற்றும் அடுத்த பொதுத்தேர்தல் தொடர்பாக எவ்வாறான உடன்படிக்கையை மேற்கொண்டிருப்பார்கள். இந்தச் சூழலானது தற்போது மாற்றமடைந்துள்ளது.

ராஜபக்ஷக்கள் ஐ.தே.க. மேடைகளில் ஏறினால், மைத்திரி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அல்லது பொதுத்தேர்தலில் போட்டியிட்டால், ராஜபக்ஷக்களின் அரசியலை முடிவுக்குக் கொண்டு வருவதும் கூட்டு எதிர்க்கட்சியை அழிப்பதுவுமே மைத்திரியின் முதலாவது பணியாக இருக்கும். இதன் பின்னர் இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை மேலும் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

இது இடம்பெறாவிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக மைத்திரி போட்டியிடும் அதேவேளையில், மகிந்த அல்லது அவரது பெயரால் கூட்டு எதிர்க்கட்சியிலிருந்து யாராவது போட்டியிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைக்கும் வாக்குகள் பிரிக்கப்படும். மைத்திரி, ரணில் அரசாங்கத்தின் ஆட்சியைக் கலைத்து விட்டு பிரதமராக வேறொருவரை நியமித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தை அமைத்தால் ராஜபக்ஷக்களின் அரசியல் அத்துடன் முடிவிற்கு வரும்.

இது நடந்தால், கூட்டு எதிரணியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் மைத்திரியின் பின்னால் அணிவகுப்பார்கள். இவர்கள் அரசாங்கத்திற்குள் உள்ளெடுக்கப்படுவார்கள்.

இதன்பின்னர் ராஜபக்ஷக்கள் ஐ.தே.க சார்பாகப் போட்டியிட்டால் அது தொடர்பில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. 1982 பொதுத் தேர்தலில் பசில் இதனைச் செய்தார். 1982 பொதுத் தேர்தலில் அனுரா வேட்பாளராகப் போட்டியிடுவதை உறுதிப்படுத்துவதற்காக பசிலும் மகிந்தவும் முயற்சி செய்தனர். எனினும், விஜய-சந்திரிகா கூட்டணி இத்தேர்தலில் வெற்றி பெற்றதுடன் கொப்பேக்கடுவவை வேட்பாளராக நியமித்தது. இதன் பின்னர் கொப்பேகடுவவைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை மகிந்த மற்றும் பசில் முன்னெடுத்தனர்.

பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சேனநாயக்கவிற்கு இடையில் 'கை' சின்னத்தைப் பெற்றுக்கொள்வதில் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றதால் கொப்பேகடுவவால் 'கை' சின்னத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. கொப்பேகடுவ 'கை' சின்னத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, விஜய-சந்திரிகா கூட்டணி மற்றும் இலங்கரட்ன ஆகியோர் தினேஷிற்குச் சொந்தமான 'சக்கரம்' சின்னத்தின் கீழ் கொப்பேகடுவ போட்டியிடுவதற்கான பேச்சுக்களை நடத்தினர்.

கொப்பேகடுவவிற்கு 'சக்கரம்' சின்னத்தை தினேஷ் விட்டுக்கொடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காக தினேஷைச் சந்திப்பதற்காக மகிந்தவை அனுரா அனுப்பினார்.

1982 ஜனாதிபதித் தேர்தலில் றுகுணு பெரமுன என்கின்ற அமைப்பை ராஜபக்ஷக்கள் உருவாக்கியதுடன் இதன்மூலம் ஜே.ஆர். வெற்றி பெறவேண்டும் என்பதற்காக கொப்பேகடுவவிற்குத் தோல்வியை ஏற்படுத்துவதற்கான நகர்வுகளை முன்னெடுத்தனர்.

அந்தவேளையில், மகிந்த, பசில் மற்றும் ஏனையோர் அனுராவைத் தம்வசப்படுத்தி தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க முனைந்தனர். அனுரா இதற்கு இணங்கவில்லை. மகிந்தவும் விடவில்லை.

எனினும், 1982 இல் ஐ.தே.க. ஆட்சிக்காலத்தை ஆறு ஆண்டுகள் நீட்டிப்பதற்கான கருத்து வாக்கெடுப்பு ஒன்று இடம்பெற்ற போது தனது ஆதரவை வழங்குவதற்காக பசில், ஐ.தே.கவுடன் இணைந்தார்.

பசில், ஐ.தே.க. மேடைகளில் உரையாற்றினார். தனது நன்றியைத் தெரிவிப்பதற்காக மகாவலி அமைச்சர் காமினி திசநாயக்க பசிலுக்கு தனது அமைச்சுப் பதவியை வழங்கினார். மகிந்தவுடன் பேச்சுக்களை நடத்துவதற்காகவே பசில் இந்த ஆட்டத்தில் ஈடுபட்டார்.

ஆகவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மைத்திரி ஒன்றாக இணைத்தால், ராஜபக்ஷக்கள் ஐ.தே.கவுடன் இணைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. எனினும், மைத்திரி - ரணில் அரசாங்கம் கலைக்கப்படும் என்பதை நாங்கள் கற்பனை செய்ய முடியாது. ரணிலுடன் இணைந்து மைத்திரி அரசாங்கத்தை நடத்த முடியாவிட்டால் மைத்திரியால் ஒன்றும் செய்ய முடியாது. குறிப்பாக ஜனாதிபதிப்பதவியும் ஒழிக்கப்பட்டால் மைத்திரி எதிர்க்கட்சிக்குத் தாவவேண்டிய நிலைதான் ஏற்படும். இதன்பின்னர் ராஜபக்ஷக்களின் அரசியல் முடிவிற்கு வரும்.

மைத்திரி எதிர்க்கட்சி உறுப்பினரானால் எதிர்க்கூட்டணியிலுள்ள பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை மைத்திரியால் பெறமுடியும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டால் அடுத்த பொதுத் தேர்தலில் ரணில் அரசாங்கத்தைத் தோற்கடிப்பது அவ்வளவு கடினமானதல்ல என்பதை மைத்திரி அறிவார்.

இதன்பின்னர் ரணில் மற்றும் ஐ.தே.க. ஆதரவுடன் தான் மைத்திரி ஜனாதிபதியானார் என்கின்ற குற்றச்சாட்டிலிருந்தும் மைத்திரியால் தப்பித்துக் கொள்ள முடியும். இதன் பின்னர் மைத்திரியால், ரணில் மற்றும் ஐ.தே.க. அரசாங்கத்தை முற்றாக அழிக்க முடியும்.

எனினும் ரணிலைக் கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளை மைத்திரி முன்னெடுப்பார் என்பதை நம்பமுடியாது. 'அன்னம்' சின்னத்திலேயே அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அல்லது ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. மைத்திரிக்கு கோபத்தை ஏற்படுத்தாது இந்த ஆட்டம் விளையாடப்பட்டால் மைத்திரி அல்லது ரணில் அரசியலை விட்டு வெளியேற வேண்டியிருக்கும். இவர்கள் அரசியலிலிருந்து வெளியேறுவதுடன் அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டுவரப்பட்டால் அதிகாரம் எதுவுமற்ற ஜனாதிபதிப் பதவியானது ரணில் அல்லது மைத்திரி ஆகிய இருவரில் ஒருவருக்கு வழங்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படாத ஜனாதிபதியாக மைத்திரி பதவியேற்பார் எனவும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ரணில், நிறைவேற்று பிரதமராகப் பதவிவகிப்பதற்கு மைத்திரி உதவுவார் எனவும் ஐ.தே.க. உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

எனினும் பொதுத்தேர்தலானது முற்கூட்டி நடத்தப்பட்டால், மைத்திரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைத்துக் கொள்வார் என மைத்திரிக்குச் சார்பான சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

இவ்விரு தீர்மானங்களில் எது நிறைவேறினாலும் கூட, இதில் வெளிநாடுகள் தலையீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் உச்சமாகக் காணப்படுகின்றன. இலங்கையைச் சீனாவின் காலணித்துவமாக மாற்ற முயற்சி செய்த மகிந்த மீண்டும் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முற்படுவதால், அமெரிக்கா மற்றும் இந்தியாவிற்கு இது ஒரு சவாலாக இருப்பதே வெளிநாடுகளின் தலையீட்டிற்கான காரணமாகும்.

நித்தியபாரதி

# facebook தீர்க்கதரிசி



அடர் வனத்தில் மேக மூட்டம்... தனியே தான்... அப்பொழுது தூரத்தில் ஒரு சிறுமி என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள். வரும்பொழுது என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டே வந்தாள்.

யார் இந்த சிறுமி? இந்த அடர்வனத்தில் எப்படி? என்று யோசனையில் இருக்கையில், அருகில் வந்து நின்று நீங்க யார் என்றாள்? நான் இந்த காட்டை ரசிக்க வந்த வேற்று ஊர்க்காரன் என்றேன்.

அப்படியா? சரி எப்போ நீங்க கிளம்புவீங்க என்றாள்?

இன்னும் கொஞ்ச நேரம் தான் ... ஏன்? சரி நீ யார்?

எங்கு இருந்து வர என்றேன். அதோஅங்க ஒரு மலை தெரியுது. பாருங்க அந்த மலைக்கு கீழ தான் நான் இருக்கேன்.

சரி போகும் போது ஜாக்கிரதையா போங்க. உங்களுக்கு ஒரு ஆபத்து இருக்கு என்றாள்.

என்ன ஆபத்து என்றேன்? என்ன ஆபத்து என்று சரியாக எனக்கு சொல்ல தெரியாது. ஆனா இயற்கைக்கு மாறாக எது செய்தாலும் ஆபத்து என்று சொல்லிவிட்டு ஓடி அருகில் இருந்த காட்டுக்குள் மறைந்து விட்டாள்.

யார் இவள் என்ற சிந்தனையில் பெட்டியில் மீதம் இருந்த கடைசி சிகரெட் துண்டை எடுத்து மண்டும் பற்ற வைத்து பெட்டியை தூக்கி எறிந்தேன்.

பெட்டியின் மேல் உள்ள வாசகம் என்னை நோக்கி புகை பிடித்தால் புற்றுநோய் உண்டாகும் என்றிருந்தது.

# ரீபைன்ட் ஒயில்

மோகன் உங்க வீட்டுல இறைச்சி எத்தனை நாளுக்கு ஒரு தடவை எடுப்பாங்க "ஏங்கண்ணே, மாசத்துக்கு ஒரு தடவைதான்"

மாசத்துக்கு ஒரு தடவை சாப்பிடுகிற உடம்புக்குள்ள எப்படி கொழுப்புச சேரும்? கோழிக்கறியும் இறைச்சியும சாப்பிடாம எப்படி சுகர் வருது? பணக்காரர்களுக்கு மட்டும் வந்த வியாதி இப்போ, கூழும் கஞ்சியும் குடிக்கிறவர்களுக்கு எப்படி வருது?

"ஆமாண்ணே... எப்படிண்ணே..." உன்னோட உடம்புல சேர்ற கொழுப்பு இறைச்சியினால வரக் கூடியது கிடையாது.எண்ணெயினால வரக் கூடியது?"

"என்னாண்ணே சொல்றீங்க"? ஆமா உன்னோட வீட்டில சமையலுக்கு என்ன எண்ணெய் வாங்கிறாய்" பொரிச்சாலும் எண்ணெயின் நிறம் மாறவே மாறாத சூரியகாந்தி எண்ணெய் தாண்ணே.

"நீ மட்டும் இல்லை எல்லோரும இதைத்தான் பாவிக்கிறார்கள்"

நல்ல விடயம் தானண்ணே. சூரியகாந்தி எண்ணெய் உடம்புக்கு நல்லதென்று நான் படிச்சிருக்கிறேன்.

உன்னோட மேதாவித்தனத்தில தீய வைக்க சூரியகாந்தி எண்ணெய உடம்புக்கு நல்லதென்று படிச்ச நீ, சூரியகாந்தியோட உற்பத்தி அளவை எப்பவாவது படிச்சிருக்கியா?

உலகத்துல ஒருசில நாட்டுல மட்டும்தான், சூரியகாந்தியையே பயிரிடுகிறாங்க. அது மட்டுமல்லாம, அப்படி பயிரிட்டு கிடைக்கிற சூரிய காந்திப்பூவிலிருந்து சென்னையில அயனாவரத்துக்கு கூட எண்ணெய் சப்ளை பண்ண முடியாது. அப்படியிருக்கும்போது, கோடி கோடி லீற்றர் சூரியகாந்தி எண்ணெய் எங்கிருந்து வருது?

என்னாண்ணே...அதிர்ச்சியா இருக்கு? அப்போ அந்த எண்ணெயெல்லாம்எங்கிருந்தண்ணே வருது?

ம்... குரூட் ஒயிலிலிருந்து (அது பேரு மினரல் ஒயில்) ஏண்ணே.. ரோடு போட்றதுக்கு யூஸ் பண்ணக் கூடிய தார் கூட, குரூட் ஒயிலிலிருந்துதானே எடுக்குறாங்க.

சரியாச் சொன்ன, அந்த தாருக்கு முந்தைய கட்டத்துலதான், நீ நினைச்சுட்டு இருக்கிற சூரியகாந்தி எண்ணெயையும் எடுக்குறாங்க. அந்த குரூட் ஒயிலை, பலமுறை சுத்திகரிப்பு செய்த பிறகு, அதுல நறுமணம் எல்லாம் மிக்ஸ் பண்ணி, நடக்குற பெரிய மோசடியிலதான், நாம சிக்கன் பொரிச்சு சாப்பிட்டுட்டு இருக்கோம்.

எல்லாத்துக்கும் வரிஞ்சுகட்டிட்டு வருவியே. நீ வாங்குற சூரியகாந்தி எண்ணெய் பக்கெற்றில, அந்த எண்ணெய்ல என்னவெல்லாம் கலந்திருக்கும்னு நீ பார்த்திருக்கியா? இல்லைண்ணே..

பாரு உண்மை புரியும்.ஆமாண்ணே அது சாப்பிட்டாத்தான் சுகர் வரும்னு லேப்டெஸ்ட் பண்ணி பார்த்தீங்களா?

லேப் டெஸ்ட்லாம் வேண்டாம், உன் வீட்டு அடுப்பங்கரைக்குப்போ, அந்த சூரியகாந்தி எண்ணெய் ஊற்றி வைச்சிருக்கிற பாத்திரத்தைப் பாரு. "என்னா தெரியும்"

ம்... பாத்திரத்தோட வெளிப்புறத்தைப் பாரு. கொழுப்பு படிஞ்சு பிசுபிசுன்னு இருக்கும். அந்த மாதிரி எண்ணெய் ஊற்றி வைக்கிற பாத்திரம் கூட ஒரு வருடத்துல கெட்டுப் போகுதென்றால், மனுஷன் நிலைமையை கொஞ்சம யோசிச்சுப் பாருடா.

ஏண்ணே.. எங்க வீட்ல பிராண்டட் நல்லெண்ணெய், கடலை எண்ணெய் ஊற்றி வைக்கிற பாத்திரமும் அப்படித் தாண்ணே இருக்கு.

சூரியகாந்தி எண்ணெய் மட்டும் இல்ல நீ யூஸ் பண்ற பக்கெற்ல வரக்கூடிய எண்ணெய் எல்லாம, குரூட் ஒயிலோட ஒரு பரிணாமம் தான்.அப்போ நான் சாப்பிடவே முடியாதாண்ணே. ஏன் முடியாது? பொரிக்கிறதுக்கு கடலை எண்ணெய் வாங்கு, சமையலுக்கு நல்லெண்ணெய் வாங்கு. எங்க போய் வாங்குகிறது, யாரை நம்பி வாங்கிறது.

யாரையும், எவனையும் நம்ப வேண்டாம். நல்லெண்ணெய் வேணும்னா, நாலு கிலோ எள்ளு வாங்கிக்கோ. கடலை எண்ணெய் வேணுமா? கடலை 4 கிலோ வாங்கிக்கோ, செக்கு உன் ஏரியாவுல எங்க இருக்குன்னு தேடி கண்டு பிடி. உன் ஏரியாவுல இல்லியா, வேற ஊருக்குத்தான் போகணுமா? ஒரு நாள் அலுவலகத்துக்கு லீவு போட்டுட்டு, செக்குல போய் எண்ணெயை ஆட்டி வாங்கிட்டுவா. அந்த எண்ணெயை பயன்படுத்திப் பாரு. ஆரோக்கியம் தானா வரும்.

ரெண்டு லீற்றர் எண்ணெய்க்காக பல ஊருக்கு போகச்சொல்றீங்கலாண்ணே? நீ ஆரோக்கியமா? இருக்கணும்னா இதை செஞ்தான ஆகனும். இல்லாட்டி, பேய் வரக் கூடிய நேரத்துல இப்படி அரைக் கால் டவுசரை மாட்டிட்டு, நாய்க்கு போட்டியா கிரவுண்ட்ல நடக்க வேண்டியதுதான்.

ஏண்ணே... கடலை எண்ணெய் கொழுப்பு இல்லையா?

கடலை எண்ணெய் கொழுப்புன்னு இந்த கார்போரேட் காரங்கதான் பரப்பி விட்டது. கடலை எண்ணெயில இருக்கிறது 5 சதவீதம் கொழுப்புன்னா, நீ பயன்படுத்துற சூரியகாந்தி எண்ணெயல இருக்கிறது 99.9 சதவீதம் மறைமுகமா இருக்கு கொழுப்பு.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 815

Search for people places and things Nagendram Home

### கஜமாறன்




### தர்சிகன்




### சதீஸ்குமார்




### கோபிகிருஷ்ணா




### வின்ஜக்சன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 47

## சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்களுக்கு...
## Chronic Kidney Disease

எமது சிறுநீரகமானது தினமும் உடலில் உண்டாகும் நச்சுத்தன்மையான பொருட்களை வடிகட்டி இரத்தத்தை சுத்தம் செய்கிறது. உடலில் தேவைக் கதிகமாக சேரும் உப்பையும் நீரையும் வெளியேற்று கிறது. இரத்தத்தின் அமில, காரத்தன்மையை சரியாகப் பேணுகிறது. இரத்தத்தில் சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கு உதவுகிறது.

சிறுநீரகங்களின் செயற்பாடு சற்று குறைவடைவதால் உடலில் சேரும் கழிவுப் பொருட்களின் அளவும் சற்று அதிகமாகிறது. உங்கள் சிறுநீரகத்தில் ஏற்பட்ட சில நிரந்தரமான பாதிப்புக்களே இதற்குக் காரணமாகும். நீங்கள் சரியான வைத்திய ஆலோசனையைப் பெற்று முறையாக சிகிச்சையைப் பின்பற்றுவதனால் உங்கள் சிறுநீரகமானது மேலும் பழுதுபடும் வேகத்தைக் குறைக்க முடியும்.

பல்வேறு காரணங்களால் உங்கள் சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருக்கலாம். இது பொதுவாக கட்டுப்பாடில்லாத சலரோக நோயாளருக்கும், உயர்குருதியமுத்த நோயாளருக்கும் அதிகமாக ஏற்படுகின்றது. இதற்கான மற்றைய காரணங்களாக சிறுநீரகத் தொகுதியில் ஏற்படும் ஒருவித அழற்சி ( Glomerular Nephritis) பரம்பரையாக வரும் சிறுநீரக கட்டிகள், சிறுநீரகத் திற்கான குருதி நாடி ஒடுக்கமடைதல் போன்றன காணப்படும். அத்துடன் நீங்கள் பாவிக்கும் சில வலியைப் போக்கும் மருந்துகளும் சிறுநீரகத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இந்தப் பாதிப்பு 50 தொடக்கம் 60 வீதத்தை விட கூடவாக உள்ள போதே இதன் அறிகுறிகள் சில உங் களுக்கு தோன்றலாம்.

### இதன் அறிகுறிகளாவன

1. உடல் பலவீனமான தன்மை.
2. உடற்சோர்வு, களைப்பு
3. பசி இன்மை
4. வயிற்றுக்குமட்டல்
5. தசைகளில் ஏற்படும் நோ
6. அதிகம் சிறுநீர் வெளியேறல்
7. உடலில் நீர்த்தேக்கத்தால் கால்கள் வீங்குதல்
8. இரத்த அழுத்தம் அதிகரித்தல்
9. தோல் உலர்வாக காணப்படல், உடலில் ஏற்படும் கடி போன்றன ஆகும்.

நீங்கள் உங்கள் உணவில் உப்புப் பாவனையை முற்றாக தவிர்க்க வேண்டியதில்லை. ஆனால் மேலதிக உப்புப் பாவனையைக் குறைப்பது நல்லது. உங்கள் குருதியில் பொட்டாசியத்தின் அளவு கூடவாகவுள்ள போது நீங்கள் பொட்டாசியம் அதிகம் உள்ள உணவு களான பழங்கள், இளநீர் போன்றவற்றை குறைவாக பாவிப்பது நல்லது. அத்துடன் பழரசம் (Fruit Juice ) மற்றும் molt சேர்க்கப்பட்ட பானங்களைத் தவிர்ப்பது நல்லது.

நீங்கள் சாதாரண புரத உணவுகளை எடுக்கலாம். அதாவது 0.8 g /kg என்ற அளவில் எடுக்கலாம். (உணவிலுள்ள புரத அளவுகள் உதாரணமாக 500 ml பாலில் 17g புரதமும் 150 g சமைத்த இறைச்சியில் 26-28g புரதம் உள்ளது). கொழுப்புச் சத்து கூடிய உணவுகளை குறைப்பது நல்லது. (பொரித்த உணவு கள், butter, நெய் ) குருதியில் கொழுப்பு கூட உள்ள வர்கள் வைத்தியர் ஆலோசனைப்படி சற்றின் (statin) வகை மருந்துகளைப் பாவிக்க வேண்டி வரலாம். உங்களுக்கு சலரோகம் இருப்பின் அதற்குரிய உண வுக்கட்டுப்பாடு மற்றும் மருந்துகளை சரியாகப் பாவித்து சீனியின் அளவைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருப்பது நல்லது.

நீங்கள் புகைப்பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும். தினசரி நடத்தல் போன்ற சாதாரண பயிற்சிகளில் ஈடுபடுதல் நல்லது.

உங்கள் சிறுநீரகம் பாதிப்படையும் வீதத்தைக் குறைப்பதற்காக வைத்தியரால் சில மருந்துகள்



வழங்கப்படும். அவற்றை வைத்திய ஆலோசனைப்படி ஒழுங்காக பாவித்தல் அவசியமாகும்.

சிறுநீரக செயலிழப்பால் இரத்தத்தின் சிவப்பணு உற்பத்தி குறைவடைவதால் குருதிச்சோகை ஏற்படு கிறது.

உங்களுக்கு சில சந்தர்ப்பத்தில் erythropoietin என்ற hormone ஊசி மூலம் வழங்கப்படும்.

உங்களுக்கு சிறுநீரக செயலிழப்பின் காரணமாக எலும்பு முறிவு ஏற்படும் சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்ள உங்கள் எலும்புகளை பாதிப்புக்குள்ளாகாத வாறு பாதுகாத்துக் கொள்வது நல்லது.

சிறுநீரக செயலிழப்பால் கல்சிற்றோல் (CalCitriol) உற்பத்தி குறைவடைகிறது. விற்றமின் டி (Vitamin D) யின் தொழிற்பாட்டு வடிவத்தின் உற்பத்தியும் குறைவடைகிறது. இதற்காக உங்களுக்கு கல்சிற்றோல் (Calcitriol), Cifa Calicidol போன்ற மருந்துகள் வழங் கப்படும். இவற்றை ஒழுங்காகப் பாவித்தல் வேண்டும்.

சிறுநீரகச் செயலிழப்பின் இறுதிக்கட்டத்தில் சிறு நீரகத்தின் தொழிற்பாடு மிகவும் குறைவாகும். இந் நிலையில் குருதியிலுள்ள கழிவுப் பொருட்களை அகற்று வது சிறுநீரகத்தால் இயலாமல் போகிறது. இதன்போது குருதிக் கழிவுகளை அகற்றுவதற்கு மாற்றுவழிகள் தேவைப்படுகின்றன.இதற்கு dialysis (டயலிசிஸ்) எனும் முறை தேவைப்படுகிறது. இது 2 முறைகளில் வழங்கப்படுகிறது.

இதில் Haemodialysis (இரத்தச்சுத்திகரிப்பு) என்பது உடலிலுள்ள குருதியானது ஒரு கலனின் ஊடாக செலுத்தப்பட்டு அங்கு சுத்திகரிப்பு செய்யப்பட்ட குருதி மீண்டும் உடலினுள் அனுப்பப்படுகின்றது. இது ஒரு வாரத்தில் எத்தனை முறை செய்ய வேண்டும் என்பதை உங்கள் வைத்தியர் தீர்மானிப்பார்.

Haemodialysis இற்காக உங்கள் குருதியின் நாடியையும் நாளத்தையும் இணைத்து Av fistula எனும் ஒரு சிறிய சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்படும். இதற்காக உங்களின் வளமற்ற கையே தெரிவுசெய் யப்படும். பொதுவாக இடது கை. எனவே நீங்கள் இந்தக் கையில் ஊசி ஏற்றுதல் நாள மூலம் ஊசி ஏற்றுதல், குருதி எடுத்தல், போடுதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். உங்களுக்கு Av fistula செய்ய இருப்பதாக வைத்தியர் தீர்மானித்துக் கூறினால் நீங்கள் அதுபற்றி தாதிய உத்தியோகத்தரிடம் கூறி உங்கள் வளம் அற்ற கையில் ஊசி மற்றும் cannula போடுவதை தவிர்த்துக் கொள்ளவும்.

நீங்கள் dialysis இல் இருக்கும் போது ஒரு நாளுக்கு நீங்கள் பருகும் நீரின் அளவை வைத்தியரின் ஆலோசனைப்படி பருக வேண்டும். ஏனெனில் மேலதிகமாக நீங்கள் அருந்தும் நீரை சிறுநீரகத்தால் வெளியேற்றுவது கடினமாகும். Peritoneal dialysis என்பது ஒரு திரவப் பதார்த்தம். உங்கள் வயிற்றினுள் செலுத்தப்பட்டு அதன் மூலம் உங்கள் உடலில் உள்ள அழுக்குகள் அகற்றப்படும் ஒரு முறை ஆகும்.

நீங்கள் குறைந்த வயதினராக இருப்பின் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையானது உங்கள் பிரச்சினைக்குத் தீர்வாக அமையலாம். இதுபற்றி மேலதிக ஆலோ சனைகளை உங்கள் வைத்தியர் வழங்குவார்.

சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்குரிய ஒழுங்கான சிகிச்சையைப் பெறுவதன் மூலம் மேலும் சிறுநீரகம் முற்றாகப் பாதிக்கப்பட்டு இறுதி நிலைக்கு செல்லும் வேகத்தை குறைக்க முடியும்.

சிறுநீரக செயற்பாட்டின் இறுதி நிலையில் உள்ள வர்களுக்கும் Haemodialysis மற்றும் Peritoneal dialysis எனும் குருதிச்சுத்திகரிப்பு முறைகளும் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையும் பயனுள்ளதாக அமையும்.

Dr. திவாகரன் சிவமாறன்
யாழ். போதனா வைத்தியசாலை.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 076 836 3858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.